# மஹாமகம்

கும்பகோணத்து ஸ்தலபுராணமும், மஹாமகத்தின்

மகிமையும் அடங்கியது

---

ல. அனந்தய்யர்

எழுதியது

இரண்டாம் பதிப்பு

சென்னை

சிரௌதி அண்டு கம்பெனி,

104, பெரிய தெருவு, திருவல்லிக்கேணி.

All rights reserved] [Price As. 8

Printed by Srouthi & Co.,
Success Press, 104 Big St. Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

முதற்பதிப்பின்

# முகவுரை

ஸ்தூல ரூபமாய்ப் பல பேதங்களோடு உலகம் விளங்கின போதிலும் அது மனோமயமானதென்பது தத்துவநூற் புலவர்கள் ஆராய்ந்து தெளிந்த விஷயமாகும். அஃதாவது, மனம் இல்லையெனின் உலகம் இல்லை, ஒருவனுடைய மனம் எவ்வளவு கிரஹிக்குமோ அல்லது தெரிந்துகொள்ளுமோ அவ்வளவே அவனுடைய உலகம் ஆகும். இவ்வாறாக உலகம் மனோகற்பிதமானதாயிற்று. சிறியதைப் பெரியதாய்க்கொள்வதும், பெரியதைச் சிறியதாய்க் கொள்வதும், இல்லாததை இருப்பதாய்க் கொள்வதும், இருப்பதை இல்லாததாய்க் கொள்வதும், அழுக்கை அழகாய் மதிப்பதும், வெறுக்கத் தக்கதை ஏற்றித் துதிப்பதும், நன்மையைத் தீமையாக்குவதும், தீமையை நன்மையாக்குவதும், பாலை விஷமாக்குவதும் விஷத்தைப் பாலாக்குவதும், இவைபோன்ற பிறவும் மனத்தின் காரியங்களேயாகும். தண்ணீரை எந்தப் பாத்திரத்தில் வார்க்கிறோமோ அஃது அந்தப் பாத்திரத்தின் வடிவங்கொள்வதுபோல் மனத்தை எதன் மீது செலுத்துகிறோமோ அதன் வடிவமாக அஃது ஆகின்றது. ஆனதுபற்றியே 'யத்பாவம் தத்பவதி' என்னும் ரூடிவாக்கியம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட தன்மையுள்ள மனத்தை இயக்குவது வாக்கு. வாக்கினால் அர்த்தம் ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட வாக்குகளின் வித்தியாசத்தினால் அபிப்பிராயங்கள் வித்தியாசப்படுகின்றன. அபிப்பிராயங்களின் வித்தியாசங்களே மத பேதங்கள் எனப்படும். வாக்கின் செறிவே வர்ணனையாகும்

வர்ணனை மிகுந்தவைகளே மதக் கிரந்தங்களாகும். ஸ்தூல பதார்த்தமும் அதன் வடிவமும் எப்படியிருக்கினும் நம் மனத்திற்கு அதனை வேறு வடிவமுள்ளதாய் எடுத்துக்காட்டி நமக்கு நல்வினைவு ஊட்டி நம்மை நற்கதி சேர்விப்பதற்காகவே புராணாதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட புராணங்களை அநுஸரித்தே நம் நாட்டில் பல பண்டிகைகளும் உற்சவாதிகளும் நடைபெறுகின்றன; ஆதலின் இவற்றின் உட்கருத்து ஸர்வோத்கிருஷ்டமான தென்பதை நம்மவர் நன்குணரல் வேண்டும். இப்பொழுது "மஹாமகம்" என்னும் தலைப்பெயருடன் யாம் எழுதிவிடுத்த இச் சிறுபுத்தகமும் மேற்சொல்லிய புராணங்களை யநுசரித்து ஜனங்களின் மனத்தில் உயர்தரமான நினைவுகளை யூட்டி அவர்களை உய்விக்கும் பொருட்டே எழுதப்பட்டுளது. இதனில் அடங்கிய விஷயங்களை இங்ஙனமே கருதிப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகிறவர்களுக்கு நல்ல பாவனையினால் நற்கதி வித்திக்கும்.

"கமல விலாஸம்"
சென்னை, 17-11-08.

ல. அனந்தய்யர்.

...லுங்கு பாஷை...
...பல வித அச்சு வேலைகள் கலர் வேலைக...
கும்பகோணம் மடத்திய பஞ்சாங்க...
சிறியது பிரதி அணா $2\frac{1}{2}$ பெரியதுபிரதி அ...
விசுவநாத சிரவுதிகளது பிரபவ௵ முதல்
நள௵ முடிய 50 ௵ திருக்ஸித்த பஞ்சாங்கம்
கலிகோ பைண்டுடன் பிரதி 1 க்கு விலை ரூ 3
இவைகள் கிடைக்கும். தபாற்செலவு வேறு.

## திருக்ஸித்த ஜாதகஸ்புடங்கள்

பிறந்த ஊர், ௵ ௴ தேதி கிழமை பிறந்த நேரம் இவைகளை தெரிவித்தால்,

ராசி அம்ச சக்கிரகங்கள், கிரஹபாதசாரம், அஷ்டகவர்க்கம், தசவர்க்கம், தசாபுக்தி ஆரம்ப காலங்கள் முதலியவை கணிக்க ரூ. $3\frac{1}{2}$.

ஜனன காலத்தில் 1 நாழிகைக் குட்பட்ட ...ந்தேக நிவர்த்தி செய்து லகனம் நிச்சயிப்ப தற்கு தனியாக ரூ. 1—8.

T. V. அண்ணுஸ்வாமி சிரவுதீ,
104, பெரியதெரு திருவல்லிக்கேணி.

ம்ஹாமக...


அத்தியாயம் I

பக்கம்.

முகவுரை ... ... ... 1

அத்தியாயம் II

...ரமகம் ... ... 36

அத்தியாயம் III

...மக மகிமை ... ... 66

1. 'கிருமி கண்டத்வ' த்தினுல் கஷ்டமடைந்த கணிகையின் கதை ... ... 66

2. மஹாமக ஸ்நானத்தினுல் புத்திரனுண்டான கதை ... ... 78

3. பாபகர்மங்கள் பறந்தோடிய கதை ... 94

4. நாக்த்தைப்பிளந்த பாபம் விமோசனமான கதை ... ... 102

5. பித்ருஹத்தியினுல் நேர்ந்த பெரும்பாபம் நீங்கின கதை ... ... 107

அத்தியாயம் IV

ஸ்ரீ மங்களாம்பிகை வைபவம் ... 116

உ

# மஹாமகம்

---

## அத்தியாயம்-I

---

## முகவுரை.

க்ஷேத்திரச் சிறப்பு

புவியெலாம் புகழ்படைத்தோங்கும் புருஷோத்தமர்களும் கிருதயுகத்தில் அவதரித்ததாகச் சொல்லப்படும் முனிசிரேஷ்டர்களும் அஞ்சலி செய்து அடியார்க்கடியராய் நின்று ஸ்தோத்தரம் செய்த க்ஷேத்திரங்கள் இப்பரத கண்டமெங்கும் பரவியிருக்கின்றன; அவர்கள் தீர்த்தாடனஞ் செய்த புண்ணிய தீர்த்தங்கள் நிரம்பி யிருக்கின்றன. வடபாரிசத்திலுள்ள ஹிமாசலத்திலிருந்து தென் முனையிலிருக்கும் கன்னியாகுமரி வரையிலுள்ள க்ஷேத்திரங்களின் சிறப்பையும் தீர்த்தங்களின் மகிமையையும் பெரும் பாரதமாய் எடுத்துச் சொல்லலாம்; திருவெண்ணீறு தரித்த பரமசிவனார் திருக்கொலு வீற்றிருக்கும் வேள்ளியங்கிரி யென்னும் கைலாயமலையை யொப்ப, பெரியோர்களின் பரிசுத்த மனம் போலும், "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டெல்

லார்க்கும் பெய்யுமழை' போலும், பக்தகோடிகள் அனைவர்க்கும் பரமபதம் கொடுப்பதாய்க் கொக்கரித்து நிற்கும் கொண்டையுடன் கூடிய குன்றுகள்போலும், பூவுலகப்புண்ணியங்கள் எல்லாம் உருண்டுதிரண்டு ஒருவடிவமாய் அமைந்திருப்பதுபோலும் மஹாமஹா மலைகள் மூவுலகெங்கும் மலிந்துகிடக்கின்றன; அம்மலைகளிலிருந்தும் வீழும் அருவிகளும், மலைகளையடுத்து நிற்கும் சுனைகளும், அருவிகள் ஓடிவீழும் நீர் நிலைகளும், மலைச்சிகரங்களையே உற்பத்தி ஸ்தானமாய்க்கொண்ட கங்கை, யமுனை, சிந்து, காவேரி, கோதாவரி, கிருஷ்ணை, பிரம புத்திரை ஆகிய இம் மஹா நதிகளின் விழைவும், காடு, மலை, வனாந்தரங்களைவிட்டு ஜனஸமூகத்தவர் வாஸஞ்செய்யும் இடங்களின் மத்தியிலேயோ, சார்பிலேயோ ஓடுவதனால் அவ்வவ்விடங்களுக்குப் பக்கத்திருக்கும் பட்டணங்களோ, கிராமங்களோ, பட்டிகளோ, ஐஹிக (இவ்வுலக)த்தை யகற்றி (ஆமுஷ்மிக) பரலோகத்தைநாடும் ஸாதனமான உறைவிடங்கள் என்னும் க்ஷேத்திரங்களாய் நிற்பதைக் காண்கிறோம். சமுசாரமென்கிற பவஸாகரத்தில் பிரஜைகள் துன்பம் அணுகவொட்டாமல் சிற்றின்பத்தை யொழித்துப் பேரின்பத்தை நாடுவதற்குப் பெரும்பாலும் க்ஷேத்திரங்களையே நாடியோடி வாடித்தேடி வகையாக பக்திசெய்வார்கள்; ஜன்மம் ஸாபல்லயமடைவதற்குக்குந்தகமாயிருக்கும் பிரபஞ்ச போகாதி இன்பங்களை வேரோடு அறுத்து முக்திவீடு அடைவதற்கு நாம் போற்றிப்புகழும் பரம்பொருளான ப்ராபரவஸ்துவின் பலவகைப் பெயர்களும் ரூபங்களும் நாமோச்சாரணமாகி, ஜாதியாசார முறைமைகளுக்கு வழுவின்றி, அந்தந்தச்சாதியார்க்குரிய தெய்வங்களாய் அவ்வவ்விடங்களில் புண்ணியதீர்த்தங்களை யண்டினாற்போலக் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் விசுவாகாரஸ்வரூபிகளைத் தரணியில் தாங்கிநிற்கும் கௌரவம்

வாய்ந்த விடங்களுக்கே இக்கலியுகத்தில் க்ஷேத்திரங்களென்றும் புண்ணிய ஸ்தலங்களென்றும் பெயர்.

**புண்ணிய தீர்த்தங்கள்**

க்ஷேத்திரமென்று கூறப்படும் ஒவ்வோரிடத்திலும் புண்ணிய தீர்த்தங்கள் இராமலிருக்கமாட்டாது. அதாவது ஸ்தலமாஹாத்மியங் கொண்டோ, புராண ஐதிகத்துடனேயோ, பண்டைக்கால ரிஷீசுவரர்கள் பரிந்து பேசிய திருவாக்கினாலேயோ, அமிருததாரை வருஷிக்க வல்ல மஹான்களது திருக்கூற்றினாலோ பிரதிக்ஷேத்திரத்திலுமுள்ள புண்ணிய தீர்த்தங்கள் பிரகாசிப்பதுண்டு. தீர்த்தங்களெனின் கிணறு, குளம் என்பனவற்றை மட்டும் கருதுதல்கூடாது. இவைகளோடு நதி, கால்வாய், ஏரி, சுனை, சமுத்திரம் முதலியன யாவும் சேரும். உதாரணமாக தஞ்சை ஜில்லாவிலுள்ள திருநாகேசுவரம் கோவிலையண்டிநிற்கும் கிணற்றுக்கு மஹா மஹிமையுண்டு; கும்பகோண க்ஷேத்திரத்திலுள்ள மஹாமகக்குளத்துக்கும் தில்லையம்பலமென்னும் சிதம்பர க்ஷேத்திரத்தின்கணுள்ள ஹோமகுளத்திற்கும் திருஆரூரிலுள்ள தியாகேசப் பெருமானின் திருச்சந்நிதிக்கு அடுத்தாற்போலிருக்கும் புகழ்புனைந்த கமலலாயத்துக்கும் இன்னும் வடஇந்தியாவின்கண் நிற்கும் பிரயாகை, பதரிகாசிரமம், பூரி, ஜகந்நாதம், க்ரிபுரக்குகை, பாடலிபுரம், ஸ்ரீகாசியென்கிற வாரணாவசீ க்ஷேத்திரம், ஹம்பி, நவபாஷாணம், அமிருத ஸரஸ், ஸ்ரீநகரம் முதலியனவும் தேன்மொழியொழுகும் தென் இந்தியாவில் சென்னையிலிருந்து தூத்துக்குடிவரையில் உள்ள ஒவ்வோரிடமும் ஸ்தலமகிமையோடு பிரகாசிக்கும் புனிதத்திற்கும் இச்சிறு நூல் போதாது. மனுஷ்யனின் பகுத்தறிவுக்குள்ளடங்கிய காலம்முதல் பக்திபுரஸ்ஸரமாய்ப் பாடிய தொண்டர்கள் புண்ணிய தீர்த்தங்களை வெகு பிரபலமாய்ப் போற்றியிருக்கின்றார்கள். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு

விதமான மகிமையுண்டு; எனினும் இந்துக்கள் பெரும்பாலும் கங்கையையும் காவேரியையுமே மநனம்பண்ணுகிறார்கள்; எவ்விடத்தில் புண்ணிய தீர்த்தமென்று அவர்கள் மனஸில் படுகிறதோ அவ்விடத்தில் கங்கை ஆவிர்ப்பவிப்பதாக ஐதிகம்.

கங்கையின் சிறப்பு

பரதகண்டமெனும் இவ்விந்தியாவிலுள்ள நதிகள் பலவற்றுள் மிக்க மேன்மை பொருந்தியதும் கொண்டாட்டம் படுவதுமாகும் கங்கையென்னும் புண்ணியநதி. மனுஷ்யரின் கண்களுக்குப் புலப்படாத தூரத்தில் பனிமுடி தரித்த ஹிமாசலத்தின் ஒரு பகுதியில் இவ்வாறு உற்பத்தியாகி ஆங்குள்ள சமபூமிவழியாய்ப் பாய்ந்து, கீழ்த்திசையாகத் திரும்பி அப்பர்வதத்தின் அடியோரமாய் ஆயிரக் கணக்கான மைல்தூரம் ஓடுகின்றது. இந்நதியின் இருமருங்கிலும் இரண்டு *குரோசம் எல்லையளவுமுள்ள பூமியெல்லாம் புண்ணிய க்ஷேத்திரமெனப்படும். 24,000 அடிகொண்ட தூரம் ஒரு குரோசம் அல்லது கால்யோசனை யெனப்படும் தங்கத்துக்குப் பொன், அரி, அருச்சுனம், இரண்யம், ஏமம், கனகம், காஞ்சனம் முதலான அறுபது பெயர்களிருப்பது போலவே பூவுலகில் அருமையும் பெருமையுமாய் விளங்கும் ஒவ்வொன்றுக்கும் பல பெயர்கள் வழங்குவதுண்டு. அதுபோலவே கங்கைக்கும் சுரநதி, வரநதி, சான்னவி, மந்தாகினி, திரிபதகை, பாகீரதிமுதலான ஆயிரம் பெயர்கள் இருக்கின்றன. எச்சமயிகளானாலும் கங்கையைப் போற்றுகிறார். ஜாதிபேதகங்களுக்கு அப்புண்யநதி இடங்கொடுப்ப

---

* அங்குலம் அறுநான்காகும் அதிகாம் கரம் ஓர் நான்கு
தங்குதல் தனுவென்றாகும் தனு இரண்டாவது ஓர்தண்டம்
இங்குறு தண்டமான இராயிரம் குரோசத் தொல்லை
பங்கமில் குரோசம் நான்கோர் யோசனைப்பாலதாமே.

தில்லை. சிவனடியார்களும் ஆழ்வாராதியரும் அந்நதியினைக் குறிக்கையில்

* "கங்கை யென்றுல கேத்திய கடவுண்மாநதி" என்றும்,
‡ "ஆதியுகத்தில் யோகத்தால் முத்தியடையும் அதன் பின்னர்
ஓதும் உகத்தில் அருந்தவத்தால் முத்தியுளதாம்—ஓங்கரிய
சோதி ஞானத்தால் முத்திமூன்றும் உலகத்தில் துன்னும்உயிர்
காதலோடுங் கலியுகத்திற் கங்கைபடியின் வீட்டையும்"

என்றும் எழுதியிருக்கின்றனர். இந்நதியினை ஓர் மங்கை யென்று மதிக்கும் மாநிலத்துள்ளோர் கங்கா தீர்த்தத்தை சுசிகரமாய்ச் செய்யும் உத்தம வைதிக கர்மங்களுக்கே உபயோகிக்கின்றனர். தேவலோகத்திருந்துவந்த இமயமலை யின் புதல்வியாய்க் கருதுவாருமுளர். இத்தகைய சீரும் சிறப்புமிக்க கங்கையே புண்யதீர்த்தங்கள் ஒவ்வொன்றிலும் புண்யகாலமெனப்படும் ஒவ்வொரு ஸமயத்திலும் ஆவிர்ப்ப விப்பதாகுமெனப் பாரதபுத்திரர்கள் தொன்று தொட்டு மதித்துவருகிறார்கள்.

புராண ஆராய்ச்சி

இங்ஙனம் மதித்துவரும் புண்யக்ஷேத்திரங்களில் கும்ப கோணமும் ஒன்று. இதன் ஸ்தலபுராணத்தை ஆராயுமிடத்துப் பூர்வம் திரிலோக ஸஞ்சாரி யான நாரதமகா முனிவருக்குப் பிரமதேவர் உபதேசஞ்செய்து திருவாய் மலர்ந்தருளிய ஸத்விஷயம் பொருந்திப் பிரகாசிக்கும் ஸ்தலபுராணங் கொண்டதென்றும் தெரியவருகிறது. நாரதபகவான் மூன்று லோகங்களிலும் சஞ்சரித்து ஆங்காங்குள்ள திவ்விய க்ஷேத் திரங்களைத் தரிசித்துப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நான மாடி அவ்வவ்விடங்களில் ஆராதிக்கப்படும் ஸர்வலோக சரண்யனைப் பஜித்துககொண்டேவரும் நாளையில் கும்பநாத

* நைஷதம் ‡ அதிவீரராம பாண்டியர்,

ருக்கு உறைவிடமாயுள்ள குடந்தை க்ஷேத்திரத்தின் விசேஷத்தைத் தம்போன்ற தபோநிதிகளால் கேட்டறிந்து ஆநந்தப் பரவசப்பட்டார்; எனினும் திருப்தியில்லாதவராகி அதன் மகிமையைப்பற்றிச் சிருஷ்டிகர்த்தரான சதுர்முகப் பிரமனையே நேரிற் வினவிவரவேண்டுமென்று ஆஸக்தி கொண்டு புறப்பட்டார்; போகும் வழியிலெல்லாம் அப்பரந்தாமனையே பெரிதும் போற்றித் தும்புருகானஞ் செய்து கொண்டு பிரம்மாவின் முன்னிலைக்கு வந்து, கைகூப்பிக் குடந்தையென்கிற கும்பகோண க்ஷேத்திரத்தைக் குறித்துச் சவிஸ்தாரமாய்த் தமக்குத் தெரிவிக்கும்படி விநயத்துடன் வேண்டினர்; ஸ்தோத்திரித்தார்; மகாக்ஷேத்திரமென்று விளங்கா நிற்கும் அதன் பிராபல்யத்தை விளக்கிக் காட்ட வேண்டுமென விளம்பினர்; விளக்கிக்காட்டுமிடத்துத் தன் ஹிருதயம் மனோஹரமடையுமென்று மன்றாடினர். அந்த மகிமையைத் தெரிந்துகொள்ள விரும்பிய நாரதரின் பக்திக்கு மகிழ்ந்து பிரமதேவர் ஆனந்த பரவசராய்த் தம் அருமைப் புதல்வரின் உள்ளம்புளகிதமாகப் பின்வருமாறு சொல்லலுற்றார்:

"குழந்தாய், கும்பகோண மென்பது ஓர் மகாக்ஷேத்திரம்; பகுத்தறிவுகொண்ட மனுஷ்யஜாதி அதை முக்கியமாய் அறிதல்வேண்டும்; அதை யுணராத ஜன்மம் ஜன்மமன்று; ஜன்மமெடுத்திருந்தும் அது நடைபிணத்துக்குஒவ்வுமேயன்றி மற்றென்றுக்கு ஒவ்வாது. ஜன்ம ஸாபல்யம் அடைய அதுவே பிரதானம்; மஹாமஹிமை பொருந்திய க்ஷேத்திரங்களின் மாண்மியத்தைக் கேளாத ஜன்மம் இருந்தென்ன போயென்ன?. அது பூபாரமேயல்லாது மற்றென்னே? குழந்தாய், வேதங்களை யறியவோ வருஷக்கணக்காய்க் காத்திருக்கவேண்டும்; வேதமறிந்து யாகயஜ்ஞாதிகளைச் செய்யவோ பின்னும் பலகாலம் காத்திருத்தல்வேண்

டும்; இவை முடித்தபின்னர் ஸ்தலயாத்திரைக்கும் தீர்த்த யாத்திரைக்கும் புறப்படல்வேண்டும்; பாரதபூமியில் 7744 சிவஸ்தலங்களும் 800 விஷ்ணு ஸ்தலங்களும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருப்பினும் ஸர்வாந்தர்யாமியான பரம் பொருளின் பொன்னடியாம் சரணமலர் காணுதவிடமுமுண்டோ? இத்தகைமை பொருந்திய ஜீவோத் கிருஷ்டமான நிலையை அடியார்க்கும் அன்புடனளிக்கும் அபூர்வஸ்தலமாகும் கும்டகோணக்ஷேத்திரம்; ஸபலம் நிரம்பிய அதன் மான்மியத்தைக் கேட்கும்போதே வேதசாஸ்திரங்களைப் படித்துணர்ந்த பலனும், பின்னர் யக்ஞாதிகளைச் செய்த பெரும்பயனும், மற்றுமுள்ள க்ஷேத்திரதீரங்களில் தீர்த்தாடனஞ் செய்த திவ்வியபலனும் ஸித்திக்குமானல், அந்த க்ஷேத்திரத்தைத் தரிசிக்குமிடத்து என்னென்ன கைகூடுமோ, என்னரும் பெரும்புதல்வ நாரதா, நீ நினைத்துப் பார்.''

''நல்லது, இன்னுமொன்று சொல்லுகின்றேன் கேள். வடக்கிலுள்ள ஹிமாசலம் முதல் தெற்கிலுள்ள ஸேதுவரையில் தாண்டவமாடும் பற்பல ஜாதியார் தத்தம் மதங்களைப் பலவேறு விதங்களாய் அனுஸரித்து வருகின்றனர். அவர் தொழும் தெய்வங்களைப் பலவிதங்களாய்க் குறிப்பிடுவதற்கு அவர்களது மதபேதங்களே சான்று.* இதை யனுஸரித்துப் பலபேர் நடைமுதற் பழக்கத்திற் கூறியிருக்கிறார்கள். இவ்வித மாறுபாடுகள் இருந்தும் அவரவர் பக்தி பண்ணுவதில் மட்டும் குறைவொன்றுங் கிடையாது. பக்திசெய்வதில் பற்பல துறைகள் இருக்கின்றன

கடனிருந்தால் தான் கிருமம்

---

* ''செய்யும் வினையனந்தம், கருத்தோவனந்தம்,
ஸ்வர்க்க நகராமுமனந்தம் நற்றெய்வமுமனந்த
பேதம் திகழ்கின்ற சமயமு மனந்தம்''—தாயுமானவர்.

மூக்திமார்க்கத்தை யனுசரித்த பக்தியும் ஞானமார்க்கத்தை யனுசரித்த பக்தியும் கர்மமார்க்கத்தை அனுஸரித்த பக்தியும் ஆகிய இம்மூன்றுமேபக்திமார்க்கத்திற் பிரதானமாகும். இரண்டாவது கர்மமார்க்கமும் மூன்றாவது ஞானமார்க்கமுமாம். இகபரஸுகபோகங்களைக் கருதிக் கருமஞ்செய்வதற்குக் கர்மமார்க்க மென்றும், அவைகளை வெறுத்துப் பரம்பொருளின் திருவடிகளைச் சேரவேண்டுமென்ற மனோ நிச்சயத்துடன் பரமாத்மவிசாரணை செய்வதே ஞானமார்க்க மென்றும் பெரியோர் வகுத்திருக்கிறார்கள். பூவுலகிலுள்ளோர் சாதாரணமாக இரண்டாவதாய்க் கூறின கர்ம மார்க்கத்தையே பெரும்பாலும் அவலம்பித்து வருகின்றனர். இதனில் இரண்டு உட்பிரிவுகளுண்டு: காம்யம், நிஷ்காம்யம். செய்யும் கர்மத்திற்குப் பயனை வேண்டுவதே காம்யமார்க்கமாய்ப் பிரவேசிப்போரது கொள்கை. பயனை விரும்பாமல் வெறுத்து அரனார் திருவடியாகிய சாயுஜ்ய பதவியை யடையவேண்டுவதே நிஷ்காம்யர்களின் கொள்கை. காம்யபக்தி செய்வோர்க்குக் கிடைக்கும் பயன்மிகவும் சொற்பம். பாபம் நிரம்பிய இக்கர்ம பூமியில் ஜீவன் இருக்கும்வரையில் அவர் செய்திருக்கக்கூடிய புண்ணியங்களான சற்கருமங்களுக்குத் தகுந்தபடி கூற்றுவனுலகில் கௌரவம் கிடைக்கும்; அந்தக் காம்யர் செய்துள்ள சற்கருமங்களுக்குத் தகுந்த இன்பத்தைத் தேவர்களுடன் அனுபவித்த பிற்பாடு கூற்றுவனுலகுசென்ற ஜீவனானது பூவுலகுநோக்கித் திரும்புகிறது. ஜீவனானது அழிவிலாததோர் அணுகிருதமான வஸ்து; அதற்கு ஆசையுமில்லை; உருவமுமில்லை; ஆசையும் உருவமும் அதற்கு வருவது எப்போழ்தெனில், மாயப்பிரபஞ்சத்தின்கண் நவத்துவாரங்களோடு கூடின பொய்ச்சடலமாகிய புழுக்கூண்டுகளில் பிரவேசிக்கும்போதுதான். தரையில் ஊறும் சிறு எறும்பு

முதல் பகுத்தறிவு மிகுந்த மானிடவுருக்கொண்டார் வரையிலுள்ள சகல ஜீவராசிகளின் உடல்களையே பொய்ச்சடலமாகிய புழுக்கூண்டுகளென்றோம். மேலே சொன்னபடி ஸ்வர்க்கத்தில் ஜீவனிருப்பதும் திரும்ப உலகினில் வந்து உற்பவிப்பதும் அவரவர்கள்செய்த புண்ணிய பாபங்களையநுஸரித்தேயாம். இதைத்தான் சாமானியமாய் ஜனங்கள் பிறப்பென்றும் இறப்பென்றும் சொல்லுகிறார்கள். காம்ய கர்மிகள்

"புனரபி ஜனனம் புனரபிமரணம்
பினரபி ஜனனீ ஜடரே சயனம்"

என்று கூறியவாறு சுற்றிச் சுழன்று நீண்டு நிற்கும் பவஸாகரத்தில் அகப்பட்டுழலுகிறார்கள். ஆகவே உலகினுள்ளார் அனைவரும் இக்கர்மபூமிக்குக் கடன்பட்டிருப்பதாகவே நினைத்துக் கைம்மாறு எதிர்பார்த்துக் கைங்கர்யம் புரிகின்றனர்."

ஸ்தலங்களின் மஹிமை

இவ்வாறு சீரும் சிறப்பும் வாய்ந்த பரதகண்டத்தில் எத்தனையோ ஸ்தலங்கள் தொன்று தொட்டு ஜீவன் முக்தி க்ஷேத்திரங்களாய் விளங்கி வருகின்றனவாயினும், ஸ்ரீகாசி, கயை, பிரயாகை, ராமேசுவரம் ஆகிய இவைகளே யாத்திரீகர் அடிக்கடி போய்த் தம் பாபவிமோசனஞ்செய்து கொள்ளுதற்குரிய ஸ்தலங்களாய்க் கருதப்படுகின்றன. பரதகண்டத்திலோ செப்புதற்கரிய சிவஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் இருக்கின்றன. இந்த ஸ்தலங்கள் ஒவ்வொன்றுக்கும் புராணஸம்பந்தமான ஐதிகம் ஏற்பட்டிருப்பினும் அந்தந்த ஸ்தலத்தில் ஆஸக்திகொண்டோர் அதனையே பெரிதும் சிலாகித்துச் சொல்லுவது வழக்கம். எனவே சிவனடியார்க்கு சிவக்ஷேத்திரங்களும், ஆழ்வாராதியர்க்கு விஷ்ணு க்ஷேத்திரங்களும் பெரிதென்று புலப்படும்; அவர்

கள் கூறுவதும் அங்ஙனமேதான். ஆனால் சிவனடித்தொண்டர்களுக்கும் ஆழ்வாராதியற்கும் ஆசங்கை தோன்றாத அருமையான சமத்துவம் நிரம்பிய க்ஷேத்திரங்களுமுண்டு. களங்கம் அகன்று பரிசுத்தமே பரிணமித்துநிற்கும் சமத்வ க்ஷேத்திரங்களில் குடமுக்கு எனப்படும் கும்பகோணக்ஷேத்திரமும் ஒன்று. இதுமற்றை க்ஷேத்திரங்களினும் நூறுமடங்கு விசேஷங்கொண்டது. இந்தப் புண்ணியக்ஷேத்திரத்தைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் சிவஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் அநேகமாய் இருக்கின்றன. கங்காநதி வடஇந்தியாவில் இமயமலையில் உற்பத்தியாவதாயினும் இது காவேரி நதியினுள் ஐக்கியமாகிக் கும்பகோணத்துக்கு ஒரு பெரிய புகழைத் தருகின்றது.

தென்னாட்டு ஸ்தலங்கள்

பரதகண்டத்தில் பூர்த்தியாயிருக்கும் சகல ஸ்தலங்களினும் தென்னாட்டினுள்ள வைகளை மட்டுங் கூறுமிடத்து முதன்முதல் நாட்டு விவரத்தை ஆராய்வோம். முழுவதும் எடுத்துக் கொண்டால் இவ்விடம் முடியாது. தென்னிந்தியாவினுள்ள சென்னை ராஜதானியைமட்டு மெடுத்துப்பேசுவோம். திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் அப்பர், சுந்தரர் முதலினோரால் தனித் தனியாகவோ ஒருமித்தோ பாடப்பெற்றுப் பிரகாசிக்கும் ஸ்தலங்கள்கொண்ட நாடுகள் ஒன்பது. அவை சோழநாடு (காவேரிநதிக்கு வடகரையும் தென்கரையும் இந்த நாட்டில் அடங்கியது). ஈழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு, துளுவநாடு, வடநாடு ஆகிய இவைகளாம். இந்த ஒன்பது நாடுகளிலுமுள்ள ஸ்தலங்கள் 274 என்றும், இவை நிமித்தம் பாடப்பெற்ற பதிகங்கள் 797 (இவைகளில் பொதுவாய்ப் பாடப்பட்ட பதிகங்கள் 48) என்றும் தெரியவருகிறது. பாடல்பெற்று நிற்கும் ஸ்தலங்கள் 274-ம் பின்வருமாறு பென்ஷன் டிஸ்டிரிக்ட் முன்சீப் வடக்குப்

பட்டு ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தாம் எழுதியுள்ள சிவஸ்தலமஞ்சரி என்னும் அருமையான நூலில் வெகு அழகாய்த் தொகுத்திருக்கிறார். தென்னாட்டிலும் இத்தனை ஸ்தலங்களிருக்கின்றன வென்பதை ஸ்தல யாத்திரை போகும் மஹாஜனங்கள் அறியும்பொருட்டு அவற்றைக் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

சோழநாட்டு ஸ்தலங்கள்

மேலே குறிப்பிட்டுக் காட்டிய ஒன்பது நாடுகளில் முதலாவதான சோழநாட்டின்கண் காவேரி நதியின் வடபாரிசத்தில் 63 ஸ்தலங்களும் தென்பாரிசத்தில் 127 ஸ்தலங்களும் ஆகமொத்தம் 190 ஸ்தலங்களிருக்கின்றன. காவேரியின் வடகரையிலுள்ள ஸ்தலங்களாவன:— சிதம்பரம்; திருவேட்களம்; திருநெல்வாயில் (சிவபுரி); திருக்கழிப்பாலை; திருநெல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்); திருமயேந்திரப் பள்ளி; தென்திருமுல்லைவாயில்; அன்னப்பன் பேட்டையென்கிற திருக்கலிக்காமூர்; சாயாவனம்; திருப்பல்லவனீசுவரம் என்னும் காவிரிப்பூம்பட்டினம்; திருவெண்காடு; கீழைத் திருக்காட்டுப்பள்ளி; திருக்குருகாவூர்; சீகாழி; திருக்கோலக்கா; வைதீசுவரன்கோயில்; குறுமாணக்குடி; கீழையூர்; திருநின்றியூர்; திருப்புன்கூர்; திருநீடூர்; அன்னியூர்; வேள்விக்குடி; மேலைத் திருமணஞ்சேரி; கீழைத்திருமணஞ்சேரி; திருக்குறுக்கை; தலைஞாயிறு; குரக்குக்கா; திருவாவொளிபுற்றூர்; இலுப்பைப்பட்டு; ஓமாம்புலியூர்; கானாட்டுமுள்ளூர்; திருநாரையூர்; கடம்பூர்; பந்தணைநல்லூர்; கஞ்சனூர்; திருக்கோடிகா; திருமங்கலக்குடி; திருப்பனந்தாள்; திரு ஆப்பாடி; திருச்சேய்ஞலூர்; திருந்துதேவன்குடி; திருவியலூர்; கொட்டையூர்; இன்னம்பூர்; திருப்புறம்பயம்; திருவிசயமங்கை; திருவைகாவூர்; வடகுரங்காடுதுறை; திருப்பழனம்; திருவையாறு; திருநெய்த்

தானம்; பெரும்புலியூர்; திருமழபாடி; திருப்பழுவூர்; திருக்கானூர்; அன்பில்; திருமாந்துறை; திருப்பாற்றுறை; திருவானைக்கா (ஜம்புகேசுவரம்); திருப்பைஞ்ஞீலி; திருவாசி; திருவிங்கநாதமலை.

காவிரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்தலங்கள் 127, அவை வருமாறு:—ரத்னகிரி; கடம்பந்துறை (கடம்பர் கோவில், குழித்தலை); திருப்பராய்த்துறை; கற்குடி; உறையூர்; திருச்சி; எறும்பியூர்; நெடுங்களம்; மேலைத்திருக்காட்டுப்பள்ளி; திருவாலம்பொழில்; திருப்பூந்துருத்தி; கண்டியூர்; திருச்சோற்றுத்துறை; திருவேதி குடி; திட்டை, திருப்புள்ளமங்கை; ஐயம்பேட்டை; திருக்களாவூர்; திருப்பாலைத்துறை; திருநல்லூர்; ஆவூர்; திருச்சத்திமுத்தம்; பட்டீசுவரம்; பழையாறைவடதளி, திருவலஞ்சுழி; குடந்தை; குடந்தைக் கீழ்க்கோட்டம்; குடந்தைக்காரோணம்; திருநாகேசுவரம்; திருவிடைமருதூர்; ஆடுதுறை; திருநீலக்குடி; வைகன் மாடக்கோயில்; கோனேரிராஜபுரம்; கோழம்பம்; திருவாவடுதுறை; குற்றாலம்; திருவழுந்தூர்; திருமயிலாடுதுறை (மாயூரம்); திருவிளநகர்; பரசலூர்; திருச்செம்பொன்பள்ளி; திருநனிபள்ளி; திருவலம்புரம்; தலைச்சங்காடு; ஆக்கூர்; திருக்கடவூர்; திருக்கடவூர் மயானம்; திருவேட்டக்குடி; திருத்தெளிச்சேரி, தருமபுரம்; திருநள்ளாறு; கோட்டாறு; அம்பர்ப்பெருந் திருக்கோயில்; அம்பர் மாகாளம்; திருமீயச்சூர்; திருமீயச்சூர் இளங்கோயில்; திலதைப்பதி; திருப்பாம்புரம்; சிறுகுடி; திருவீழிமிழலை; திருவன்னியூர்; கருவிலி; திருப்பந்துறை; நறையூர்ச்சித்தீசுவரம்; அரிசியிற் கரைப்புத்தூர்; சிவபுரம்; சாக்கோட்டை; மருதாந்தநல்லூர்; திருவாஞ்சியம்; நன்னிலம்; திருக்கொண்டீசுவரம்; திருப்பனையூர்; திருவிற்குடி; திருப்புகலூர்; வர்த்தமானீச்சுவரம்; இராமனத்தீசுவரம்; திருப்

பயற்றூர்; திருச்செங்காட்டங்குடி; திருமருகல்; திருச்சாத்தமங்கை; நாகபட்டணம்; சிக்கல்; கீழ்வேளூர்; தேவூர்; அரியான்பள்ளி; திருவாரூர்; திருவாரூர் அரநெறி; திருவாரூர்ப்பரவையுண்மண்டளி; திருவிளமர்; கரையபுரம்; பெருவேளூர்; தலையாலங்காடு; குடவாயில் திருச்சேறை; நாலூர் மயானம்; கடுவாய்க்கரைப்புத்தூர்; ஆலங்குடி; அரித்துவாரமங்கலம்; அவளிவணல்லூர்; பரிதிநியமம்; வெண்ணி; பூவனூர்; பாமணி; திருக்களர்; சிற்றேமம்; திருவுசாத்தானம்; இடும்பாவனம்; கடிக்குளம்; தண்டலைநீணெறி; கோட்டூர்; திருவெண்டுறை; கொள்ளம் பூதூர்; பேரெயில்; திருகொள்ளிக்காடு; திருத்தெங்கூர்; திருநெல்லிக்கா; திருநாட்டியாத்தாங்குடி; திருக்காறைவாசல்; கன்றாப்பூர்; வலிவலம்; கைச்சினம்; திருக்கோளிலி திருவாய்மூர்; திருமறைக்காடென்னும் வேதாரண்யம்; அகத்தியான்பள்ளி; திருக்கோடி என்கிற அழகர் கோயில்.

ஈழநாட்டு ஸ்தலங்கள்

ஈழநாட்டு ஸ்தலங்களுக்கு சோழநாட்டு ஸ்தலங்களுக்கும் அதிக வித்தியாசமில்லை; எனினும் தொகையில் மட்டும் வித்தியாசமே தெரிகிறது. சோழநாட்டுத் தலங்கள் 190 இருக்க ஈழநாட்டிலிருக்கும் ஸ்தலங்கள் இரண்டே. அவை, திருக்கோணமலை, திருக்கேதீசுவரம் ஆகிய இவையிரண்டுமேயாம். இவை யிரண்டினுள் முதல்வதான திருக்கோணமலையானது திருஞான சம்பந்த மூர்த்திகளால் பாடல் பெறப் பெற்றது; இரண்டாவதான திருக்கேதீசுவரத்தைக் குறித்து திருஞானசம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், பதிகங்கள் பாடியிருக்கிறார்கள்.

சோமசுந்தரக்கடவுளேயும் அங்கயற்கணம்மையையும் பிரதிதினமுந் தரிசிப்பதே தமக்குப் பெருங் கடனெனமதித்து அரசாண்டுவந்த பாண்டிய னது ராஜ்யமாம் மதுரையைச் சேர்ந்த ஸ்தலங் களேப்பற்றிப் பேசுவோம்; பாண்டி நாட்டி லுள்ள ஸ்தலங்கள் 14-அவையாவன:—திரு ஆலவாய் (மதுரை) திருஆப்பனூர்; திருப்பரங்குன்றம்; திருவேடகம்; கொடுங்குன்றம் என்கிற பிரான்மலே; திருப் புத்தூர்; திரும்புனவாயில்; இராமேசுவரம்; திருஆடானை; காளேயார் கோவில்; திருப்பூவனம்; திருச்சுழியல், திருக் குற்ருலம்; திருநெல்வேலி.

பாண்டி நாட்டு ஸ்தலங்கள்

இதைச்சேர்ந்த ஸ்தலபுராண மகிமைகொண்ட க்ஷேத் திரம் ஒன்றுதான்; அதற்குத் திருஅஞ்சைக் களம் என்று பெயர். இந்த சேரநட்டுக்கே மலே நாடென்றும் பெயர் வழங்கிவருகின்றது.

சேரநாட்டு ஸ்தலம்

இதற்கு அடுத்தது கொங்குநாடு; இதைச்சேர்ந்த புண்ணிய ஸ்தலங்கள் 7; அவிநாசி; திரு முருகன் பூண்டி; பவானி; திருச்செங் கோடு; வெஞ்சமாக்கூடல்; கொடிமுடி; கருவூர்.

கொங்குநாட்டு ஸ்தலங்கள்

நடுநாட்டிலுள்ள க்ஷேத்திரங்களெனக் கருதப்படும் இடங்களின் மொத்த சங்கியை 22, அவை வருமாறு:—திருஅரத்துறை; பெண்ணுகடம்; கூடலேயாற்றூர்; எருக்கத்தம்புலியூர்; திருத்திணைநகர்; திருச்சோபுரம்; திரு வதிகை; திருநாவலூர்; விருத்தாசலம்; திருநெல்வெண் ணெய்; திருக்கோவலூர்; அறையணி நல்லூர்; இடையாறு; திருவெண்ணெய் நல்லூர்; துறையூர்; வடுகூர் என்கிற ஆண்டூரர் கோயில்; திருமாணிகுழி; திருப்பாதிரிப்புலி

நடு நாட்டு ஸ்தலங்கள்.

ஊர்; திருமுண்டீசுவரம்; பனையபுரம்; திருவாமாத்தூர்; திருவண்ணாமலை.

தொண்டை நாட்டு ஸ்தலங்கள் 32:-பட்டினத்தடிகள் பெரும் புகழ்வைத்துப் பாடிய திருக்கச்சி என்னும் காஞ்சிபுரம்; இதைச்சேர்ந்தாற் போலவே திருக்கச்சி மேற்றளி; ஓணகாந்தன்தளி; திருக்கச்சி அனேக தங்காபதம்; திருக்கச்சி நெறிக்காரைக்காடு; குரங்கணின் முட்டம்; மாகறல்; திருவோத்தூர்; திருப்பணங்காட்டூர்; திருவல்லம்; திருமாற்பேறு; திருவூறல்; இலம்பையங்கோட்டூர்; திருவிற்கோலம்; திருவாலங்காடு; திருப்பாசூர்; திருவெண்பாக்கம்; திருக்கள்ளில்; திருக்காளத்தி; திருஒற்றியூர்; திருவலிதாயம்; வடதிருமுல்லைவாயில்; திருவேற்காடு; மயிலாப்பூர்; திருவான்மியூர்; திருக்கச்சூர்; திருவிடைச்சுரம்; திருக்கழுக்குன்றம்; அச்சிறுபாக்கம்; திருவக்கரை, அரசிலி; இரும்பை மாகாளம்.

தொண்டை நாட்டு ஸ்தலங்கள்.

துளுவ நாட்டு ஸ்தலம்.—இதைச்சேர்ந்ததாகும் கோகர்ணம், என்னும் இடம்மட்டுமே.

இவைகளிற்சேர்ந்தவை ஐந்து: அவைமுறையே ஸ்ரீபர்வதம்; இந்திர நீலபருவதம்; அநேகதங்காபதம்; திருக்கேதாரம்; நொடித்தான்மலை என்னும் பெயர் பூண்டு வழங்குகின்றன. இவைகளில் முதலிற் கூறிய ஸ்ரீபர்வதத்துக்கு ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனபுரம் என்றும், நொடித்தான்மலைக்கு ஸ்ரீ கைலாசம் என்றும் பெயர் வழங்குகின்றது.

வடநாட்டு ஸ்தலங்கள்

ஒன்பது நாடுகளின் விவரத்தையும் அந்தந்த நாடுகளிலுள்ள ஸ்தலங்களையும்பற்றி ஒருவாறு மேலேயெடுத்துச் சொன்னோம். சிவனடித் தொண்டர்கள் தாம்யாத்திரைசெய்த க்ஷேத்திரங்கள் ஒவ்வொன்றிலும் ஆங்காங்குள்ள ஸ்வாமியின் பெயரையும் தேவியின் பெயரையும் குறிப்பிட்டுப் பதிகங்கள் பாடியிருக்கிறார்கள். ஸ்தலங்களின் சம்பந்தமாய்ப்பாடிய பதிகங்கள் 797 இருப்பினும் அவைகளில் பொதுப்படப்பாடிய பதிகங்கள் 48 போக ஏனைய 749 பதிகங்களும் க்ஷேத்திரங்களை யனுசரித்தே பாடப்பட்டிருக்கின்றன. அவைகளின் விமர்சை பின்வருமாறு:—சோழநாட்டுக்காகப் பாடப்பட்டவை 556; ஈழநாட்டுக்காக 3; பாண்டிநாட்டுக்காக 34; மலைநாட்டுக்காக 1; கொங்குநாட்டுக்காக 9; நடுநாட்டுக்காக 62; துளுவநாட்டுக்காக 2; வடநாட்டுக்காக 14.

பதிகங்களின் விமர்சை

இவைகளில் இப்போது கும்பகோணத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். இந்தப் புண்ணிய க்ஷேத்திரமானது முதன்முதற் குறிப்பிட்டபடி 18 சிவஸ்தலங்களால் சூழப்பட்டு மத்தியில் நிற்கின்றது. கங்காநதி ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தை எவ்வளவு மகத்துவ முடையதாகச் செய்கிறதோ அவ்வளவு மகத்துவமாகவே காவேரி நதியானது கும்பகோணத்துக்கும் ஒரு மகத்துவம் உண்டாக்குகின்றது. முதன்முதல் காவேரி நதியைக்குறித்துக் கொஞ்சம் சொல்லிவிட்டுப் பின் அந்தக் கும்பகோணப் பட்டணத்தை யெடுத்துப் பேசுவோம்; இது மேலைமலைத் தொடரைச் சேர்ந்த தலைக்காவேரியென்னும் இடத்தில் உற்பத்தியாகி மைசூர் ராஜ்யத்தின் தென்பாரிசத்தின் வழியாகப் பாய்ந்து வருகின்றது. வரும்வழியில் கோயமுத்தூர், சேலம் ஆகிய

காவேரி நதி

இவ்விரண்டுக்கும் எல்லையாய் ஓடி திருச்சிணுப்பள்ளிமார்க்கமாய்த் தஞ்சாவூரிற் புகுந்து பற்பல கிளைகளாய்ப் பிரிந்து இந்திய சமுத்திரத்திலே சங்கமமாகின்றது. இதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து வங்காளக் கூடாக்கடலில் சங்கமமாகும் பரியந்தம் மத்தியிலுள்ள சகல விடங்களையும் செழிப்பித்து, வரையாது வழங்கி வறுமையடைந்த வள்ளியார்போல 475 மைல்தூரம் ஓடிப் பிறகே கடலில் போய் விழுகின்றது. இதன் உற்பத்தி முதல் கடலில்போய் சங்கமம் ஆகும்வரையில் திருநயம் கிருஷ்ணபாரதிக்ள் என்ற செந்தமிழ்ப்புலவர் பாடிய திருவையாற்றுக் கீப்பல் என்பதிலிருந்து காவேரி நதியைப்பற்றிய பாகத்தை நட்டும் கீழே எழுதுகின்றோம்:-

கப்புல் பாட்டு.

அம்புயன்மால் தேடரிய—திருவை
யாற்றில் நிதம் அறம்வளர்த்தாள்
அம்பிகை தன் அருளாலே—பெருக்கம்
அணிந்துவரும் காவேரி.

முடுகு

1. அம்பரம் தொடுசையமலையில் நிலை பெற்று
அகத்திய மஹாமுனி கடத்தினில் உதித்து
அண்டர்புகழும் பிர்மகுண்டமதில் வந்து
அறிவொணுப்பாதாள நெறியினை அலைந்து,

2. திண்புவியிலே ராமநாதபுரம் கூடி
திருவேண்டிசென்ற ருத்திரர் அடியை நாடி
ஸ்ரீரங்கபட்டணத்திருபால் திகழ்ந்து
ஸ்ரீகண்ட நரசிங்கபுரமதில் இணைந்து,

3. வம்பு பெருகும் யானைக்குந்திமலை துனனி
மாதேவபுரம் சிவசமுத்திரம் பன்னி
மாநிலத்துயரும் பவானியை அடுத்து
வாஞ்சையுடனீரோ டாடுஞ்சலூர உற்று,

4. முன்பு கொடுமுடிவந்து வேலூரைச் சேர்ந்து
மோஹனூர்கண்டு நெறியூரருகில் சார்ந்து

| | | |
|---|---|---|
| | மோதிவருகின்ற அமராவதியைத் | தேக்கி |
| | முக்கூடல் மாயனூர அயிலூரைத் | தாக்கி, |
| 5. | செம்பொன்வளரும் கிருஷ்ணராஜ | புரமண்டி |
| | திருவேங்கிமலை கடம்பர்கோவில் | தண்டி |
| | சிறுகுமணி முசிரிபாலத்துறையில் | வாய்த்து |
| | செய்யகுண சேக்ரமந்தண நல்லூர் | பார்த்து, |
| 6. | பண்புபெருகும் திருச்சத்துறை | மருங்கி |
| | பார்புகழும் திருவாசிமாதலம் | நெருங்கி |
| | பாவுமிசை திருவரங்கேசரை | வணங்கி |
| | பகரும் உறையூர் திருசிரப்ரம் | இணங்கி, |
| 7. | அன்புபெருகும் கஜாரண்யம் | மதித்து |
| | அகிலாண்டவல்லி நாயகனடி | துதித்து |
| | அருகுறும் தோகூர்கல்லணையிற் | பொருந்தி |
| | அன்னமுதவும் கோயிலடியிற் | றிருந்தி, |
| 8. | தென்புடனே ஐராவதே ஸ்வரம் | மேவி |
| | திருக்காட்டுப்பள்ளி சாத்துப்பிள்ளையார் | கோவில் |
| | செப்புமகாராஜபுரம் கடுவெளியிற் | சென்று |
| | தேசமகிழும் திருநெய்த்தானமதில் | நின்று, |
| 9. | அன்புடன் திருவையாற்றப்பனைக் | கண்டு |
| | அறம்வளர்த்தாள் உத்தரவு பெற்றுக் | கொண்டு |
| | அரிய கணபதி அக்ரஹாரமதில் | ஊக்கி |
| | ஆடுதரை சோக்கிக் கபிஸ்தலம் | விளக்கி, |
| 10. | தண்பெருகு மாவிந்தபுரமேவி | தியாக |
| | சமுத்ர முமையாபுரம் நெருங்கி | நலமாக |
| | சாமி மலைமுருகனை யிறைஞ்சியுள் | மகிழ்ந்து |
| | தரணிபுகழ் திருவலஞ் சுழியிற் | புகுந்து |
| 11. | கும்ப்கோணம் கஞ்சனூர்திரிபு | வனமும் |
| | கூடி யிடைமருதூரில் வாசஞ்செய் | தினமும் |
| | குலவு மகராஜபுரம் திருக்கோடி | காவில் |
| | குத்தாலம் வல்லியம் கொரநாடு | தாவி, |

12. சம்பூர்ணமாக மயூரத்தில் நண்ணி
ஜகதீசனைப்பணிந்து தியானம் பண்ணி
தன் பேர்விளங்கும் நகரத்தில் மகிழ்ந்துள்ளம்
சங்கமும் வந்து கடல்கூடியது வெள்ளம்.

ஏலேலோ

**காவேரியைப் பற்றிய கதை**

தென்தேசங்களுக் கெல்லாம் தக்ஷிணகங்கை யென்று விளங்கும் காவேரியாற்றின் மார்க்கமுழுவதும் மிகவும் பரிசுத்தமானதென்று மதிக்கப் படுகின்றது. பிரதி வருஷம் துலாமாதத்தில் கங்காநதி பூமிக்கு உள்ளாக வந்து காவிரியிலே படிந்து, அதன்பால் தீர்த்தமாடிப் பாவ நிவர்த்தி செய்துகொண்ட யாத்திரிக குழாங்களால் அதனுக்கு நேருந் தோஷத்தைப் பரிஹரிக்கிற தென்பது புராண* மூலமாய் விளங்குவதாகும். அதை யொருவாறாய்க் கீழேகாண்க :—"மேன்மைதங்கிய அகஸ்திய மகாமுனி பூர்வம் ஸஞ்சரித்துக்கொண்டு வருகையில் மேலே மலைகளுக்கும் போயிருந்தார். அக் காலத்தில் ஆங்கிருந்த கவேரன் என்பவர் தம் புதல்வி காவேரிக்குக் கடிமணம் செய்விக்க விரும்பினர்; கவேரனின் அருந்தவச் செல்வியாய் உதித்திருந்தனள் காவேரி ; அவள் இருமுதுகுரவரும் அருமையினும் அருமையாய்ப் பாராட்டிச் சீராட்டிவளர்க்க வளர்ந்து யௌவன பருவ முற்றனள். அவ்வருந்தவச் செல்வி உதித்தது முதல் கவேரனுக்கு மனஉவப்பு மேன்மேலும் பெருகிற்று. அவன் போன விடமெல்லாம் புகழும் சென்ற விடமெல்லாம் சிறப்புமே எய்தினன்; அவன் திருமகளைக் கண்டோரெல்லாங் கொண்டாடி வந்தனர்; மலர்மனை துறந்துமன்னவன் மாடம்புகுந்த திருமகள் கொல்லோ வென்று இறும்பூ தெய்தி அவளைக் கொண்டாடா நிற்பர்

* காவேரிபுராணம்.

பலர். அவள் முகவிலாசங் கண்டார் மனக்குமுத மெல்லாம் மாண்பொடு மலரும்; உள்ளக்கவற்சிகள் ஒழிந்து பேருவகை பூப்பார். அவளது பரந்தவிழிகளும் இளநகையும் மெல்லியன் மேனியுஞ் சந்தவடிவுந் துறந்தார் மனத்தையும் பிணிக்கத்தக்கன. அவளழகிற்கேற்றவாறே அறிவும் ஒழுக்கமும் அன்புஞ் சூழ்ச்சித்திறனும் பொறையும் மானமும் அவளிடங் குடிகொண்டிருந்தன. மேலும் அவள் சாதுர்யசம்வாதிநி, மடந்தைப் பருவத்து மாதர்சிரோமணி, பல்கலை பயின்ற பாவையர்திலகம், பிரமகிரியிலே காவேரியின் தந்தையான கவேரமுனிவர் தம் ஐம்புலனையு மடக்கி யோகத்திலிருந்தபோது காவேரி தன் பிதாவுக்குப் பூவுலகிற் பெருங்கீர்த்தி உண்டாகவும் சகலஜனங்களும் அவரைத் துதிக்கவும் தக்கதாய்த் தான் ஒரு நதியாக அவதரித்து, பூமிக்கு நன்மைபுரிய ஆசைபூண்டிருந்தனள். அவ்வாசையைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று அரனை வேண்டினுள். அவளது பக்தி விதானங்களில் ஈடுபட்ட பிரமனும் அவள் வேண்டிக்கொண்டபடி ஒரு பெருநதியாய்ப் பிற்காலம் வர வரம் அளித்தனர். அகஸ்தியர் அவளைத் தமக்கு மனைவியாளாகும்படி வரித்தபோது அவள் தன் மனக்கோலமாற்ற மனமில்லாமல் முதலிலே மறுத்தும், பின்னர்த்தன்னை எந்நாளாயினும் அவர் தன்னந்தனியாயிருக்க விடுவாராயின், தான் அவரை நீத்து அகலுதற்கு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு சம்மதித்தாள். நெடுங்காலம் அகஸ்தியர் தமது வாக்கு அழியாமல் அவளைப் பிரியாமலிருந்தார். ஒரு தினம் அவர் தமது ஆசிரமத்திலே தமது அருள்மச் சீஷருள் ஒருவரை வைத்துவிட்டு, அவர் பிரமகிரியிலே தமது திருக்குளத்துக்குச் சமீபத்திலுள்ளதோர் நதியில் நீராடப்போனார். போனவுடனே அவர் மனைவி குளத்தில் விழுந்து மறைந்து ஒரு திவ்ய நதியாயினள், நீர் குளத்தினின்று வழிந்து பெருகத்தொடங்கியது.

அகஸ்தியருடைய சிஷர் அதனை ஓடாமற் சிறைசெய்ய முயல, அது தரையின் கீழாக ஊடுருவிப் பாய்ந்து சிறிது தூரஞ்சென்று வெளியே புறப்பட்டது. அகஸ்தியர் ஓடிவந்து, தம்மை மன்னித்து இல்வாழ்க்கையை இகவாமலிருக்கும்படி தம்பத்தினியை வேண்டினார். அவள் ஒருபுறந் தன் விருப்பை யொழிக்கவும், மறுபுறம் அகஸ்தியர் மனத்தை வருத்தவும் மாட்டாதவளாய்த் தன்னை இரு கூறுக்கினள். ஒரு கூறு காவேரிநதியாய்ப் பெருகியது; மற்றைக்கூறு வித்தக அகஸ்தியர் தம் பத்தினிவடிவாய் நித்தமும் அவர் பால் தங்கியிருந்தது.

காவேரியைப் பற்றிய மற்றுமோர் கூறல்

அகஸ்தியமுனிவர் ஒருவிசை பொதியமலையில் வசிக்கும் உத்தேசத்துடன் தக்ஷிணம் நோக்கி வந்தபோது தமது தினசரி பூஜைக்கு உபயோகமாகும் பொருட்டும் பரிசுத்தமான தீர்த்தம் தென்திசைக்கு உதவும் பொருட்டும் சிவபிரானின் உத்தரவுபெற்று கைலாசகிரியிலிருந்த ஸப்த நதிகளில் ஒன்ருன பொன்னி நதியைத் தமது கமண்டலத்தில் அடைத்து வந்தார். அக்காலத்திருந்த அசுரனுக்கு சூரன் என்று பெயர்; அவனுக்கு இந்திரன் மிகவும் அஞ்சி வேற்றுருவமைந்து வந்து சீர்காழியில் ஒரு புஷ்பவனம் வைத்து அங்கிருந்து பறிக்கப்படும் மலர்களாற் சிவனை அர்ச்சித்துக் கொண்டிருந்தான்; புஷ்பச் செடிகளுக்குப் போதுமான தண்ணீர்ப் பாய்ச்சலில்லை; மழையும் பெய்யவில்லை; ஆதலின் நந்தவனத்திலுள்ள நறுமணங்கமழும் புஷ்பச் செடிகள் அனைத்தும் வாடிப்போயின; ஆகவே இந்திரனது பூஜைக்குப் போதுமான புஷ்பம் அகப்படாமலே போயிற்று. பொன்னிநதியை ஒரு கமண்டலத்தில் அடைத்து அகஸ்தியர் கொங்கதேசக் கரையில் வந்திருப்பதை இந்திரன் நாரதமகா முனிய

லறிந்து, அதனுலாவது தன் நந்தவனத்துக்கு நீர் பாயாதா வென்று ஆலோசித்தான்.

இந்திரன் செய்த சூழ்ச்சி

பூர்வத்தில் ஒருவிசை தேவேந்திரன் காக்கைபோல உருவெடுத்து கௌதமருடைய ஆசிரமத்துக்கு வந்து நள்ளிரவிற் கத்திக் கௌதமருடைய பத்தினி அகலிகையைக் கெடுக்க முயற்சித்த சூழ்ச்சியைப் பலர் கேட்டிருக்கக்கூடும். அதுபோலவே இச்சமயத்திலும் ஒரு சூழ்ச்சி செய்யத் தான் கருதினனுயினும் முதலிற் பயந்து பிறகு அக்கமண்டலத்தைக் கவிழ்த்துத் தன் புஷ்பவனத்துக்கு நீர்பாயும்படி செய்யவேண்டும் என்று விநாயகரை வேண்ட, அவர் காக்கைவடிவாய்க் கமண்டலத்தில் உட்கார்ந்து அதனைக்கவிழ்த்தேகினர். அதிலிருந்த நீர் பெருகிக்காவேரியாய் என்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. லோபா முத்திரை அகஸ்தியருக்கு மனைவியாயிருந்ததால், அவர் பின்னும் ஒருத்தியிடத்தில் இச்சை கொண்டு, காவேரியைக் கடிமணஞ்செய்துகொண்டனர் என்பதைப் பார்க்கிலும், மூங்கியது பொருத்தமுடைய தென்க. மேலை மலைத்தொடரில் அகத்தியமலை யென்று மிகவும் கீர்த்தி பெற்றிருப்பதோர் மலையொன்று இப்போது மிருக்கின்றது.*

காவேரி புராணத்தில் ஒருவாறுகவும், சிவரகஸிய காண்டத்தில் மற்றொருவிதமாகவும் குறிப்பிடப் பட்டிருப்பதினுலே வெவ்வேறு விதமான அபிப்பிராயத்துக்கு இடமுண்டாகின்றது. காவேரியாறு ஓர் தடாகத்தில் உற்பத்தியாவதற்கும், தரையின் கீழ்ச் சிறிது தூரம் போய் அதன் பிறகு வெளிவந்து பாய்வதற்கும் இணங்க அகத்தியர் வசத்திலிருந்து தோற்றிய தென்னுங் காவேறி புராணக் கதை பிற்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்பது பலபேரது கொள்கை.

---

* ஸ்காந்த புராணம் சிவரகசிய காண்டம்.

காவேரியின் சிறப்பு.

காவேரியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து சங்கமமாகும் வரையில் உள்ள தீர்த்த விசேஷ ஸ்தலங்களனைத்தும் மிகவும் மேன்மையாய்க் கொண்டாடப் படுகின்றனவாயினும் அவைகளை இச்சிறு நூலில் அதிகமாய் விஸ்தரிக்க முடியாது. ஆயினும் அந் நதிக்கு சிறப்புண்டு என்பதைக் குறிப்பிட இரண்டொரு உதாரணத்தை மட்டும் காட்டுவோம். துலாமாச மெனப்படும் ஐப்பசியில் வெகுவாய் ஜனங்கள் காவேரி நதியைக் கொண்டாடுவார்கள். எலுமிச்சம் பழம், புஷ்பம், தேங்காய், கூடுமானால் நாணயங்கள் முதலியவற்றை தக்ஷிண தேசத்திலுள்ள ஜனங்கள் பலர் காவேரியில் துலாஸ்நானஞ் செய்து அந்நதிக்கு அற்பிதமாக ஓடும் வெள்ளத்தில் வீசி யெறிவார்கள்; புது வெள்ளம் வரும்போது மைதான வெளியிலுள்ள கழனிகளெல்லாம் நெல் நன்றாய் விளைந்து கதிர்கொண்டு தலை சாய்ந்து பார்த்தவர் மனம் மகிழும்படி செய்யும்; அக்கம் பக்கத்து மடுவுகளிலும், தோட்டங்களிலும், புல் வளர்ந்து பார்ப்பவர் கண்களுக்குப் பச்சைப் பசேரென்று புலப்படும்; நீர் நிலைகள் நிரம்பிப் பரந்து நிற்கும், உற்சவத்தின் நிமித்தம் குடகு நாட்டிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த இரண்டொருவரேனும் வராமலிரார். தலைக் காவேரிக்குப் போகும் யாத்திரிகர் அனைவரும் "நாராயணா" என்னும் நாம உச்சாரணத்துடனேயே பவனிபோவார்கள். தீர்த்தமாடப்போகாது வீட்டிலிருப்போருங் கூட துலாகாவேரி ஸ்நானத்தைத் திரஸ்காரம் பண்ணாது பெரும் பண்டிகையாய்க் கொண்டாடுவர். அரிசிமாவில் வாழைப்பழம் கலந்து தோசைவார்த்து, அவைகளில் சிலவற்றை நெற்கழனிகளில் கொண்டுபோய்க் காவேரியம்மனுக்கு காணிக்கையாகக் கோவில்களில் வைப்பதுமுண்டு. இதை யொட்டியே கோவின்கதையு மேற்பட்டிருக்கின்றது.

கோவின் கதை

முன்னொருகால் பசுக்கூட்டமொன்று ஓர் அடவியில் பச்சைப் பசேரென்று செழித்திருந்த புல்லை மேய்கையில் திடீரென வேங்கைப்புலி யொன்று அவற்றின்மீது பாய்ந்து புல் மேய்ந்த பசுக்களெல்லாம் திடுக்கிட்டுத் திசைதடுமாறி மூலைக்கொன்றாய் ஓடின. ஒன்று மட்டும் வகையறியாது வேங்கையின் ஆட்சியில் சிக்கிக்கொண்டது; எனினும் அப்பசு மனோதைரியத்துடன் வேங்கையை நோக்கி "நீ என்னைத்தின்ன விரும்பினாய், அப்படியே யாகட்டும்; ஒரு கணப்பொழுது என்மீது தயவுகூர்ந்து எனக்கு விடைகொடு, நான் என் கன்றினிடம் போய்க் கடைசியாய் அதற்குப் பால்கொடுத்துவிட்டு மற்றுமுள்ள பசுக்களிடம் என் கன்றை பாதுகாக்கும்படி சொல்லிவருகிறேன். அதுவரையில் மனம் கனியவேண்டும்" என்றது. பசுவின் தைரியத்தைப் பார்த்த புலியானது அதன் தைரியத்தை மெச்சினபோதிலும் இரையை விட்டு விட மனம் வராது "நீ திரும்பவும் வருவாயா? வருவாயானால் சத்தியம் செய்துபோ'! என்றது. அதற்கிணங்கி பசுவானது காவேரிநதியின்மீது ஆணையிட்டுப் பின்னர் தன் கன்றினிடம் போய் அதற்குப் பாலூட்டித் தன்பாலன்புள்ள சில பசுக்களிடம் தன் கன்றை ஒப்புவித்து, அது பால் குடிக்கப் பின்புறம்வந்தால் பின்னங்காலால் உதைக்காமலும், முன்புறம் வந்தால் கொம்புகளால் முட்டாமலும் இருக்கும்படி வேண்டி விடைபெற்றுக்கொண்டு புலியினிடம் திரும்பியது. மற்றபசுக்கள் மறுத்தும் கேழ்க்கவில்லை. காவேரியின் மீது வைத்த ஆணையை மீறுவதினும் நமனுலகம் சேருவதே நலம். என்று சொல்லிப் புலிக்குப் எதிராய் வந்து நிற்க சத்தியமும் சன்மார்க்கமுமே உருவெடுத்தாற்போற் தன் முன் வந்துநிற்கும் பசுவை வதைப்பதால் தன் பாவங்கள் ஒருபொழுதும் பரிகரிக்கப்படாவென்று நினைத்து,

விடாய்ந்து வந்த அந்த வேங்கை பசுவைத் திரும்பவும் அதன் கன்றினிடம் போகச் சொல்லித் தன் முழுவலிமையோடும் மேனேக்கிப் பாய்ந்து க்ஷமையோடுகூடின பசுவின் பாதத்தில் விழுந்திறந்தது. இன்னும் எத்தனையோ உதாரணங்களுண்டு.

மேலே சொல்லிவந்தபிரகாரம் காவேரி நதியால் சிறப்புற்றிருக்கும் ஆலம்பொழில், ஆவாடுதுறை, ஆனைக்கா, இடைமருதூர், ஐயாறு கடம்பந்துறை, கண்டியூர், காவேரிப்பூம் பட்டணம், கானூர், குடமூக்கு, வட் குரங்காடுதுறை, கோடிகா, சக்கரப்பள்ளி, சாய்க்காடு, சிராப்பள்ளி சோற்றுத்துறை, தலைச்சங்காடு, குற்றாலம், நணு, நீலக்குடி, பராய்த்துறை, பழனம் பழுவூர், கொடுமுடி, பாலைத்துறை, பெரும்புலியூர், மங்கலக்குடி, மயிலாடுதுறை என்கிற மாயவரம், மழப்பாடி, வலஞ்சுழி, ரத்தினகிரி, விளநகர், என்கிற தீர்த்த மகிமைஸ்தலங்களில் இக் கலியுகத்துக்காக மூன்றே பிரதானம் என்று கூறப்படுகின்றன. இவை, கும்பகோணம், ஸ்ரீரங்கம், காவேரிப்பட்டணம் ஆகிய மூன்றுமாம். இம் மூன்றினுள் கும்பகோணத்தையே சிலாக்கியமாகச் சொல்லுவோருமுளர். தேவர்களும் பூஜிக்கின்ற இந்த மகாக்ஷேத்திரம் விஸ்தீர்ணத்தில் பஞ்சக்ரோசம் கொண்டது. காச்யபதீர்த்தம் (சோலையப்ப முதலி அக்கிரகாரக்கோடி) முதல் ஈசான தீர்த்தம் (பக்தபுரிஸ்நாந கட்டம்) வரையில் உள்ள கரைகளில் ஸ்நாநம் செய்வதால் கால நியமமின்றிப் புண்யங்கிடைக்குமென்பது பெரியோரின் துணிபு. கும்பகோணத்தில் காவேரி நதி கூடியவரையில் அகல முள்ளதாய் உருவத்தில் சுருங்காமலேயிருக்கின்றது. இந் நகரின் ஜனத்தொகை ஐம்பதினாயிரத்துக்கு அதிகம். இங்கு ஸர்க்கார் வேலையிலிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்ட உத்தியோகஸ்தர் பலர் வஸிக்கின்றனர்.

கும்பகோணம் (side-note)

ஜனங்கள் வெவ்வேறு தேசத்துக்குத் தக்கபடி தமது அம் ருசிகளில் வேறு படுவதற்கு இது நல்ல திருஷ்டாந்தமாகும். ஒரு தேசத்தார்க்கு எது மிகவும் இஷ்டமானதோ அது மற்றொரு தேசத்தார்க்கு அஸஹ்யமாயிருத்தற்கும் இதுவே திருஷ்டாந்தமாகும். இந்துக்கள் மலை நாடுகளையும், அவ் விடத்தின் சீதோஷ்ண ஸ்திதிகளையும் வெறுக்கிறார்கள். ஐரோப்பியரோ அப் பிரதேசங்களுக்கு விருப்பமுடன் செல்லுகிறார்கள். கும்பகோணப்பட்டணமானது உக்கிரமான வெயிலுடன் நான்கு பக்கத்திலும் முடிவில்லாத நன்செய் வயல்களும் தோப்புந் துறவுகளுமாய் எவ்வளவு இந்துக்கள் விரும்புகிறார்களோ அவ்வளவு ஐரோப்பியர்களுக்கு வெறுப் பாயிருக்கும். இங்கு அரிசிமுதலான உணவு பதார்த்தங்கள் மலிவாயிருப்பதாலும் வெயில் கோடைக்கும் மாரிக்கும் அதிக பேதப்படாமல் ஒரே சீராக இருத்தலாலும் உடல் களைக்கக் குன்றேறி இறங்கவேண்டுவதில்லையாதலாலும், பத்துப் பன்னிரண்டு தேவாலயங்களும் ஸ்நாந பானங் களுக்கு யோக்கியமான புண்ணியநதியும் இருத்தலாலும், இது அவர்களுக்கு அவ்வளவு இனிமையாயிருக்கின்றது. கும்பகோணத்துக்கு இரண்டு மூன்று மைல் கிழக்கே இந் நதி பெருங்கிளைகளில் கடைசியான தொன்றைப்பெற்று, அதன் பின்பு ஓர் அற்பமான சிற்றாறுபோலக் குறுகிப் போகின்றது. மனிதன் தன் முடிவுகாலத்தில் குழந்தைத் தன்மையை அடைகின்றது போலவே இதுவும் குறுகி மெலிந்துபோயிருக்கின்றது. உலகத்திலுள்ள நதிகளில் காவேரி நதியைப்போலத் தன் ஜலத்தை ஒரு துளிகூடவீண் போக்காமல் மனிதருக்கு கொடுக்கும் ஆறு வேறு இல்லை யென்றே சொல்லவேண்டும். பல கிளைகளாகப் பிரிந்து நீரெல் லாம் இழந்து சொற்பஜலத்துடன் சிலு சிலு என்று பாய் கின்ற மணற்றரையின் மீது நாணல் நிறைந்த தீவுகளினூடே சுற்றிச் சுற்றிச்செல்லும் வழிப்போக்கன் போலச்செல்லும்

இதன் கதியை நாம் தொடர்ந்து செல்லுதல் அனுவசியம். கடைசியில் ஆசைப்பட்டு அடைய வந்த அலைகளின் ஓசையைக் காதால் கேட்கப் பெற்றுப் பிரகாசமானதும் அமரிக்கையானதும் நக்ஷத்திரங்கள் எழுந்து கீழ்த்திசையில் ஒளிவிட்டு தோன்றப்பெறுவதும் ஆன ஜலநிதி தனக்கு முன்னே விரிந்து தோன்றவும் காணப் பெற்று, மணமகனைத்தேடியடையும் காதலியைப்போலக் களிப்புற்றுக் கலக்கின்றது. இப்படிப்பட்ட காவேரி நதியின் மீதுள்ள ஸ்தலமாகும் கும்பகோணம். இது ஏமரிஷி முதலினோர் பூஜித்த ஸ்தலம்.

மஹாமகம்

இவ்வளவு அருமையும் பெருமையும் வாய்ந்த இந்த ஸ்தலத்தில் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை மஹாமக மென்று ஒரு விசேஷம் நடைபெறுகின்றது. பிருஹஸ்பதி ஸிம்மராசியில் வருகையில் சூரியன் கும்பராசியில் சேரும் மாதமாம் மாக மாஸத்தில் மகாநக்ஷத்திரம் கூடிய பௌர்ணமியில் மஹாமகம் என்கிற மஹோற்சவம் நடத்தப்படுகிறது.

மஹாமகக் குளம்

இந்த மஹாமக உற்சவம் வெகு பிரபல்மாய்க் கும்பகோணத்தில் ஒரு குளத்தில் நடக்கும். இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் வெகு விரிவாய்த் தெரிவித்திருக்கிறோம். ஆதலால் அக்குளத்தைப்பற்றிப் பொதுப்படச்சொல்லி இங்கு நிறுத்துவோம். ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் கோவிலுக்குத் தென்கிழக்குத் திக்கில் ஒரு பெரிய தடாகமிருக்கின்றது. அதற்குக் கன்யாதீர்த்தம் என்றும் சொல்லுவார்கள். இந்தத் தீர்த்தமாகிய மஹாமகக் குளத்தில் ஒரு தடவை ஸ்நாநமாடிய மாத்திரத்தில் பஞ்சமஹாபாதங்கள் நசித்துப் போவதோடு நூறு தப்தகிருச்சிர பலம் கிடைப்பதாகவும் ஐதிகம்.

**குளத்தைச் சுற்றிலும் கோவில்கள்**

இந்தத் தீர்த்தத்தின் வடகரையில் விசுவநாதர் கோவில் இருக்கின்றது. இவ்விடந்தான் உமையவள், மாந்தாதா முதலியோர் பூஜித்த ஸ்தலம். இதன் கீழ்க்கரையில் அமிருதநாயகர் என்னும் பெயருடைய அபிமுகேசுவரர் கோவிலும்; மேலைக்கரையில் கௌதமேசுவரர் கோவிலும், வடமேற்கு மூலையில் வில்வாரண்யபதியென்றும் பாதாளலிங்கம் என்றும் சொல்லப்படும் நாகேசுவரர் கோவிலும் இருக்கின்றன. இந்த நாகேசுவரசுவாமி கோவிலுக்கே திருக்குடந்தை கீழ்க்கோட்டம் என்று சொல்லுகிறார்கள். இது சூரியன் பூஜித்த ஸ்தலம். இங்கே பிரதிவருஷம் சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளிற் காலையில் சூரியகிரணம் சுவாமி சிரசிற்படுகின்றது. நாகேசுவரர் கோவிலுக்கு வடமேற்கு மூலையில் சோமலிங்கமும், இதற்கு வடக்கில் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலும் இருக்கின்றன. ஹேமரிஷி தபசு ஸித்தி பெற்றதை யொட்டி மகரஸங்கராந்தி புண்யகாலத்தில் விஷ்ணுபகவான் மகாலக்ஷ்மி ஸமேதராய் விமானத்தில் ஹேமபுஷ்கரணிக்கரையில், (பொற்றாமரை) அந்த ரிஷிக்குப் பிரத்தியக்ஷமாகி ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வரூபமாய் வஸிக்கிறார்.

**கும்பேசுவரனும் கும்பகோணமும்**

ஹேமபுஷ்கரணி யென்கிற பொற்றாமரைக் குளத்துக்கு மேல்கரையில் இருப்பது ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் கோவில்; ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற்றி, ஞானமார்க்கத்தை விருத்திசெய்து, பிரம்மாதி தேவர்களாலும் மற்றுமுள்ள பிரமதகணங்களாலும் பூஜிக்கப்பட்டு ஸர்வ தேஜோமயமாய் சாக்ஷாத் பரமசிவன் ஆதிகும்பேசுவர ஸ்வரூபியாய் அமர்ந்திருக்கிறார். பிரளயகாலம் வருவதற்குமுன் பிரம்மாவானவர் பரப்பிரம்ம ஸ்வரூபிமாய் ஆதியந்தமில்லாதிருக்கும் பரம்பொருளிடஞ் சென்று வேத

சாஸ்திரங்கள், சிருஷ்டிபீஜம், தீர்த்தங்கள், க்ஷேத்திரங்கள் முதலியவை பிரளயகாலத்தில் அழிந்து நசியாவண்ணம் பாது காக்க வேண்டுமென்று ஓர் உபாயங்கேட்க எல்லாம் வல்ல இறைவன் கூறலுற்றார். "என்னால் அமைக்கப்பட்ட சிருஷ்டி பீஜம் சாசுவதமானது; அதை அமிருதத்தோடு கலந்த புண்ணிய க்ஷேத்திரத்தின்கணுள்ள மண்ணினாற் செய்யப் பட்ட குடத்தில், அமிருதம் மத்தியிலிருக்கவைத்து, அக் குடத்தின் உள்ளேயே வேதசாஸ்திர புராணாதி கிரந்தங் களைப் பிரதிஷ்டித்து மகாமேரு என்கிற பர்வதத்தின் உச்சிநிலையில் (சிகரத்தில்) வைத்துவிட்டு உமதிருப்பிடஞ் செல்லுக" என்று சொன்னார். பரந்தாமன் கூறிய திரு வாக்கை யனுஸரித்த பிரம்மாவானவர் குடமொன்று செய்து அதனைப் பத்திர, புஷ்ப, பல, உபவீத, கூர்ச்சாதிகளால் அலங்கரித்து, தர்ப்பைப் புற்களாற் செய்யப்பெற்ற உரியில் வைத்து மகாமேருவின் சிகரத்தில் வைத்துவிட்டுப் புறப் பட்டார்; காலங் குறுகியபடி பிரளயமும் வந்தது. பூவுலகு முழுவதும் வெள்ளமே; நாடு, நகரம், வனம், வனாந்தரம் எல்லாம் பிரளயமே. ஜகத்மீதெல்லாம் ஜலத்தினுள் மூழ்கியது. ஆயினும் பிரம்மாவால் மேருவின் சிகரத்தில் வைக்கப்பட்ட குடத்தின் கதி என்ன? இந்த மாயப் பிரபஞ்சத்தின் நிமித்தம் பரமாத்மாவினாலேயே சிருஷ்டிக்கப்பட்ட அந்தக் குடமானது பிரளயகாலத்து வெள்ளத்தில், அது வைக்கப் பட்டிருந்த நிலையிலிருந்து புரண்டு மிதக்கலாயிற்று. பிரளயம் ஒரு புறம் பூரணமாயிருக்க மற்றோர் புறத்தில் பிரசண்ட மாருதம் அடித்துக்கொண்டிருந்தது; வெள்ளத்தி லாங் காங்கு சுழற்சியும், சோவென்னுமிரைச்சலும், எதிர்ப்பட்ட வைகளினும் உயர்வாய்ச் செல்லும் உறைவும் இருந்தது காரணமாக மேருவின் சிகரத்தினின்று புறப்பட்ட இக்குட மானது மெதுவாய் மிதந்து கொண்டே அந்த மலைக்குத் தெற்காய் வெகு தூரம் வந்துவிட்டது. பூர்வசமுத்திரத்

துக்குச் சிறிதுமேற்காய்க் குடத்தின்மேல் அலங்காரஞ் செய்யப்பட்ட கூர்ச்சமானது நழுவிவிழுந்தது. அதிலிருந்து சாக்ஷீசுவரர் என்ற திருநாமத்துடன் பகவான் ஆவிர்ப்பவித்தார். இது இருப்பது கும்பகோணத்துக்கு $1\frac{1}{2}$மைல் தூரத்தில். கூர்ச்சம் விழுந்த இடத்திற்கு தென்கிழக்காகக் குடம் நின்று விட்டது. தக்ஷணமே தேவர்கள் புஷ்பமாரி பொழிய அவ்விடமே உத்தமோத்தமமான க்ஷேத்திரமென்றே அசரீரி வாக்கும் உண்டாயிற்று. தேவர்கள் ஒருபால் ஸ்தோத்திரம் செய்து நிற்க மற்ருேர் புறத்தில் ஜயபேரிகை முழங்கியது. பிரளயம் அடங்கிக் குடமானது தரையில் நிற்கும் அச்சமயத்தில், அதன் மீதிருந்த பழமானது தென்கிழக்காக விழுந்தது. அதுவே தற்காலத்தில் விளங்கும் அபிமுகேசுவரர். அதற்குப் பக்கமாகக் குடத்தின் மீதிருந்த பத்திரங்கள் விழுந்தன. அவ்விடத்திலே தான் பாதாளமுக நாயகர் என்கிற விசுவநாதர் ஆவிர்ப்பவித்ததாக ஐதிகம். பின்னும் குடத்தின் மீதிருந்த யஜ்ஞோபவீதம் (பூணுநூல்) விழுந்தவிடத்தில் ஸூத்திரநாதர் என்னும் பெயரோடு பரமசிவன் விளங்குவதாகவும் கூறப்படுகின்றது. பிரளய காலத்தில் பிரசண்டமாருதத்தின் வீச்சினல் பிரதிஷ்டை செய்யப்பட்ட குடத்தினின்றும் சிதறிப்போன தெய்வீக வஸ்துக்கள் ஒவ்வொன்றும் போய்ச்சேர்ந்தவிடத்தில் சித்தமுத்த சுத்தனை பகவான் பலவிதப் பெயர்களோடு விளங்குகின்ருர்.

பொற்றுழரை

இதற்கு ஹேமபுஷ்கரணி யென்கிற வேருெரு பெயருமுண்டு. அமிருத குடமானது ஹேமபுஷ்கரணி தடத்தில் வந்து தங்கிற்று. பரமசிவனர் கிராத (வேட) ரூபியாய்த் தம் சிவகணங்களான ஸகல பரிவாரங்களோடு பூமண்டல முழுவதுஞ் சுற்றிக் கடைசியில் இந்தக் கும்பமிருக்குமிடத்தருகில் வந்துசேர்ந்தார். ஜகத்ரக்ஷகனன சிவபிரான் பிரபஞ்ச சிருஷ்டியைத் திரும்பவும் ஆரம்பிக்கும் பிரம்மா முதலான

தேவர்களை ரக்ஷிக்கும் பொருட்டு மேற்குறித்த குடத்தருகில் வந்து நின்றுகொண்டு பாணங்களால் அதைத்தகர்த்துடைக்க ஆரம்பித்தார். முதன்முதல் அது அசையாதிருந்தது. இறுதியில் சிவபிரானது முழுபலத்தினலடிக்கப்பட்டதும் உடைந்து உள்ளிருந்தது ஒரு யோசனை தூரம் பரவியது. அது பரவின விஸ்தீரணத்தைத் தன் தேவர்கள் பஞ்சக்குரோசமென்று புகழ்ந்துபாடினார்கள்.

குடம் உடைந்ததும் பகவான் கொஞ்சம் மண்ணையும் மணலையும் அமிர்தத்தோடு கலந்து மாசிமீ பௌர்ணமிதினம் பகலில் ஒரு லிங்கமாகப் பிடித்து உடைந்த குடத்தின் மீதுவைத்து, அந்த லிங்கத்துக்கு அமிருதத்தினல் அபிஷேகம் பண்ணினர். அப்போது தேவ கீதங்களும் நர்த்தனங்களும் நிரம்பி யிருந்தன. குளிர்ச்சி பொருந்திய மந்தமாருதமானது கமகம்வென்று பரிமளித்து வீசியது மிருதுவான மகரந்தப் பொடிகளைவாரி வந்தது போலுந் தென்பட்டது. குடமல்லிகைகள் வெள்ளிக்காளாஞ்சி ஏந்துவதுபோல தலையவிழ்ந்து மலர்ந்து விண்ணுலகினின்றும் லிங்கத்தின் மீது வந்து வருஷித்தன. அங்ஙனம் வந்துவீழ்ந்த மலர்களிலிருந்து மடைதிறந்தாற்போல்க் குபுகுபென்று குமிழிட்டுப்பாயும் இனியதேனையுண்டு கீதம் பாடுவதுபோல வண்டுகள் ரீங்காரம் செய்தன. சத்திரம் போல் அழகிய கலாபத்தை விரித்து மடமயில்கள் ஆடின, இளந்தளிர்களோடு கூடின பூங்கொடிகள் பொற்றொடிமாதர்போல் அசைந்து அந்த லிங்கத்தின் மீது சொரிந்தன. அரும்புகொண்ட சண்பகங்கள் அபரிமிதமாய்ப் பொழிந்தன. அவ்விடத்தில் லிங்கம் ஆவாகனமாயிற்று. கைலாஸ மலையிலிருந்து ஸர்வமங்கள ஸ்வரூபியான உமையவளை வரவழைத்துக் கும்பலிங்கத்துக்கு வடக்குத்திக்கில் ஸ்தாபனம் பண்ணினர். இங்ஙனம் பூஜைசெய்த கிராத

பரனும் தேவியும்

ரூபியான எம்பிரான் சகல தேவர்களுக்கும் முன்னிலையில் அன்று விருஷபலக்கினத்தில் அந்த லிங்காகாரத்தோடு ஐக்கியமானர். அதனாலே அந்த லிங்கத்துக்குக் கும்பேசுவரர் என்றும் ஜகதம் பிகைக்கு மங்களாம்பாள் என்ற பெயர் வழங்குகின்றது. ஜகத்சிருஷ்டிக்கு ஆஸ்பதமான ஆதிகுடத்தில் ஐக்கியமானர் என்பதற்காகவே ஆதிகும்பேசுவரர் என்னும் திருநாமம் இன்னும் வழங்குவதாயிற்று.

ஆதிவிசுவேசுவரர்.—இது கும்பேசுவரர் கோவிலுக்குத் தென்மேற்கில் உள்ளது; இவ்விடத்தில் தூமகேது முனிவருக்குப் பரமசிவன் தரிசனங்கொடுத்து வரமளித்தனர்.

வராஹம்.—மேற்சொன்ன ஸ்தலத்துக்கு வடக்கில் ஸ்ரீ மஹாவிஷ்ணு வராஹரூபியாய்ப் பூதேவியுடன் இருப்பதாக ஐதிகம்.

லக்ஷ்மீ நாராயணம்.—வராஹ ஸ்தலத்துக்கு வடமேற்கு மூலையிலும் மஹா விஷ்ணு ஸ்ரீ காசியப மகரிஷிக்குத் தரிசனங் கொடுத்தவிடம். லக்ஷ்மீ நாராயண ஸ்தலமென்று வழங்கப்படுவது இதுவே.

மதங்காபீஷ்டவரதர்.—மதங்க மகரிஷிக்கு மகாவிஷ்ணு பிரத்தியக்ஷமான இடம்; இது காவேரியின் வடகரையில் உள்ளது. மதங்காபீஷ்ட வரதரென்று சுவாமியின் பெயர் வழங்குகின்றது.

ஸ்ரீ சக்கிரபாணி.—சூரியனுக்கு அபீஷ்டத்தை கொடுத்துக் களிப்பிக்கவந்த மகாவிஷ்ணுவுக்கு ஸ்ரீ சக்கிரபாணியென்றே பெயர் வழங்குகிறது.

பாணலிங்கம்.—ஸ்ரீ சக்கிரபாணி கோவிலுக்குத் தென்கிழக்காய் அஷ்டாதச ஸ்தானங்களில் உத்தமமாயும் மேன்மை பொருந்தியதாயும் உள்ள ஸ்தலம். வியாஸபகவானுக்காக வேண்டிக் கைலாஸத்திலிருந்து வந்து பாணாசுரனால்

பூஜிக்கப்பட்டபடியால், இங்கிருக்கும் ஈசுவரனுக்குப் பாண லிங்கம் என்று பெயர்.

இத்தன் பிராபல்யம்

இவ் விதமாக சைவவைஷ்ணவ க்ஷேத்திரங்களாய்ச் சருத்தப் படுபவற்றுள் முக்கியமாய் 12 வரை யடங்கியுள்ள இந்த மஹாஸ்தலமே கும்ப கோண மெனப்படுவது. இந்த க்ஷேத் திரத்தின் மஹிமை, சுற்றிலுமுள்ள 3 யோ சனை தூரத்திலுமுள்ள இடங்களிலுமுண்டு என்று பௌ ராணிகர் கூறுகின்றனர். இதன் மகிமை திரேதாயுகத்தில் 2 யோஜனை வரைக்குந்தா னென்றும், துவாபரயுகத்தில் ஒருயோஜனை தானென்றும், கலியுகத்தில் $\frac{1}{2}$ யோஜனை தா னென்றும் சொல்லுவோருமுளர். ஆதிகும்பேசுவரரைப் பிரம்மா ஆராதனஞ்செய்து சந்த புஷ்ப வாத்திய கீதநர்த் தனங்களால் பகவானை யெய்ப்பித்து அர்ப்பணம் பண்ணிய பிற்பாடு பரமசிவன் மனமகிழ்ந்து பிரம்மாவை வேண்டும் வரன்களைக் கேட்கச் சொல்லவும் பிரம்மா பின்வருமாறு கூறுகின்றார் :—

## பிரம்மா வேண்டிய வரன்.

1. இதுமுதல் கும்பேசுவர தரிசனத்துக்கு யார்யார் வந்த போதிலும், அதாவது வந்த ஜனங்கள் ரோகிகளாயி னும், பிரவிகுருடராயினும், நொண்டிகளாயினும், எவ் வருணத்தவராயினும், எக் குணத்தவராயினும், அவர்க ளுக்குப் பேதாபேதமின்றி அவரவர்களது மனோபீஷ்டம் நிறைவேற வேண்டியது;

2. பிரதோஷ புண்யகாலத்தில் தரிசனம் பண்ணு வோர்க்குப் பாபபக்தியை யுண்டு பண்ணிச் சௌக்கியங் கொடுத்து இறுதியில் கைலாஸத்திற் சேர்ப்பிக்க வேண் டியது;

3. கிருத்திகை ஸோமவாரத்தில் ஒரு வில்வ தளத்தினால் அர்ச்சிக்கவோ அல்லது நெய்யூற்றி விளக்கு ஏற்றி வைக்கவோ செய்யும் ஜனங்களுக்கு சிவ ஸாயுஜ்யங் கிடைக்கவேண்டும்;

4. மாசி மாதத்தில் மகா நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமி தினத்தில் தேவரீரைத் தரிசனஞ் செய்தவர்களுக்குப் பிரஹ்ம ஹத்திபோன்ற தோஷங்கள் நிவாரணமாக வேண்டும்.

## வேண்டிய வரமும் வந்து சேர்ந்தது.

தேவரீருடைய ஆவிர்ப்பவ உற்சவத்திற்காக நான் இத்தினத்தில் த்வஜாரோகணஞ் செய்ய உத்தேசிக்கிறேன்; பக்தகோடிகளின் பிரயோசனத்தை யுத்தேசித்துக் கிருபாநிதியாகிய தாங்கள் எனக்கு உத்தரவு கொடுத்தருள வேண்டும். இதனிற் சம்பந்தப்படும் ஜனங்கள் கொடும் பாபிகளாயினும், அவர்களது பாபமெல்லாம் இந்த உற்சவத்தின் முன்பாகப் பறந்து போம். இந்த உற்சவத்திற்குத் தானஞ் செய்தோ, மற்றும் உபயோகமாகிற எத்தொழில் புரிந்தோ உதவுவோருக்குத் தேவரீர் ஸாயுஜ்யம் கொடுக்க வேண்டும். பிரதி மாசிமீ மகத்திலும் அம்ருத ஸரஸ் என்கிற மஹாமகக் குளத்தில் கங்கைவரும்படி செய்யவேண்டும். அன்றைய தினம் அந்த மஹா குளத்தில் ஸ்நானம் பண்ணுவோர்க்கு ஸர்வாபீஷ்டங்களும் ஸித்திக்க வேண்டும். வருஷவாரியில் மகா ஸ்நானத்தை மஹாமகக் குளத்தில் செய்வோர்க்கு 12 தப்தகிருச்சிர * பலனுண்டென்பதை தேவரீர் நிச்சயப் படுத்தவேண்டும்.

மஹாமகத்தைக் குறித்து ஸ்மரித்தலும் வாசித்தலும் கேட்டலும் குடந்தை நகரிலுள்ளார்க்கு மட்டுமேயல்ல, பூவுலகில் மற்றெங்கிருந்தபோதிலும் சரி, அவர்களுக்குப் பலனைக் கொடுக்குமென்பது திண்ணம். இந்த உற்சவத்திற்காக வரும்

ஜனங்களுக்குப் பதினாயிரம் அசுவமேதபலன் வித்திக்கட்டும். கோடானுகோடி மஹரி ஜனங்களின் மனோரதம் நிறைவேறட்டும். வந்துசேரும் யாத்திரிகர்களைச் சந்தோஷசித்தராக்கட்டும். 12 வருஷங்களுக்கு ஒருமுறை வருகின்ற இந்த மஹாமக உற்சவத்திற்காக நான் ஸர்வதேவகணங்களோடு ஒருவருஷத்திற்குமுன்னமேயே கும்பகோணக்ஷேத்திரம் வந்துசேர்ந்து மகோற்சவத்துக்குவேண்டிய ஸர்வ கைங்கர்யங்களையும் வெகுவிமர்சையாய்ச் செய்துவைத்து விக்கினமின்றி நிறைவேற்றத் தம் திருவுளமகிழ்ந்து வரங் கொடுக்க வேண்டுகின்றேன். இந்த உற்சவத்துக்கு வரும் துன்மார்க்கர்கள் சன்மார்க்கர்களாகித் தெய்வபக்தியோடிருக்கட்டும்; முத்திவேண்டுவோர்க்குச் சித்தியும், பவஸாகரத்தில் பரமஸுகமனுபவித்துப் பின்னர்ப் பேரின்பம் வேண்டுவோர்க்கு அதுவும், பின்னும் என்னால் சொல்லுதற்கரிய சகலவிதமான சுகபோகாதிவைபவங்களை இகத்திலோ, பரத்திலோ, நாடும் அடியார்க்கு அடியராகிய தொண்டர்களின் தெள்ளிய மனம் தேன்பொழிலுண்டிருக்க தயை புரியவேண்டும். இதுவே எனது கோரிக்கை; நான் மன்றாடிக் கேட்பதும் இதுவே எனவும், ஈசுவரனும் மனமகிழ்ந்து 'சரி' யென்று ஆனிகரமாய்ச் சொன்னார்.*

* தப்த கிருச்ரம் என்பது 12 நாள் நியமமாகச் செய்யவேண்டிய விருதம் முதல் மூன்றுநாள் ஜலபானத்திலும், அதற்கடுத்த மூன்றுநாள் பால்பானத்திலும், அதற்கடுத்த மூன்றுநாள் நெய் பானத்திலும், கடைசி 3 நாள் வாயுபட்சணம் பண்ணுவதுமாக 12 நாள் கழித்து வருவதுடன், ஆகாரங்களை உட்கொள்ளும் ஸமயம் போக மறுஸமயங்கள் ஸர்வேசுவரனைத் தியானிக்க வேண்டிய நியமமாகும்.

## அத்தியாயம்-II

---

# மஹாமகம்

அழைப்புப் பத்திரம்

சீரும் சிறப்புமிக்க மோக்ஷ சாம்ராஜ்யத்தைத் தரும் இந்த மஹாமக மஹோற்சவத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று பிரம்மாவானவர் கங்கணங் கட்டிக்கொண்டு சகல தேவர்களோடும் பரமபதியான பரமசிவன் முன்னர் அஞ்சலி பந்தனஞ்செய்து ஸ்தோத்திரம் செய்து அவரது திருவருள் பெற்றார். மஹோற்சவத்தை நடத்த அரனின் உத்தரவும் வந்து சேரவே பிரம்மாவுக்குண்டான பரமானந்தத்திற்கு அளவே இல்லை. அரனின் அருள் பெற்றோர்க்கு எக்காரியந்தான் சாயாது? சிருஷ்டி கர்த்தரான பிரம்மதேவர் இந்த மஹாமக உற்சவஞ் செய்ய ஆரம்பிக்கிறார். ஒருற்சவம் என்றால் இரண்டொருவரால் தீருமா? பலபேர் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் அமோகமாயிருந்து பராபரவஸ்துவின் திருநாமங்களை யுச்சரித்தும், அந்த ஏகோன்னத வஸ்துவின் தியானமே மனோலயத்தில் அடங்கியும் இருந்து, அனைவரும் ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்து பரவச மடைவதற்கே உண்மையாய்ப் பார்க்கப் புகின் உற்சவமெனத் தோன்றும். சிரேஷ்டமான சிற்ப வேலை யென்ன, சித்திரவேலை யென்ன, முத்துத் தோரணங்கள் என்ன, பவளக்கொடிகள் என்ன, தாளமிருதங்கங்களோடு கூடின வாத்திய கோஷமென்ன, நகரா, நௌபத்

முதலான பேரிகைகளென்ன, தேவகானமுழங்க, வேத பாராயணஞ் சொரிய, நடனங்களாகக் கும்பேசுவரர் கோவில் ஜ்வலிக்கின்றது; ஜனங்களெல்லோரும் நகரலங்காரஞ்செய்து மனஸுக்கு மிக்க இனிமையாய்த் தோன்றும்படி தத்தம் விடுதிகளை வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியாக கோவிலலங்காரம் ஒரு புறம், நகராலங்காரம் மற்றொரு புறமுமாய்ச் சிங்காரிப்பு முடியவே பிரம்மாவானவர் ஈரேழுபதினான்கு லோகங்களிலுமுள்ள சகல ஜீவர்களுக்கும் இந்த மஹா மகோற்சவத்துக்கு வரும்படி அழைப்பு பத்திரமனுப்பினார்.

துவஜாரோஹணம்

இவ்வளவு மகத்துவமாய் நடக்கும் பிரபலமான மஹா மக உற்சவத்தைப் பார்க்காத ஜன்மமும் ஜன்மமாவென்று அழைப்புப் பத்திரம் பெற்ற தேவர்களும் மற்றையோரும் தக்ஷணமே தத்தமிடங்களினின்றும் வெகு உல்லாஸமாய்ப் புறப்பட்டு வந்தார்கள். பரந்தாமனது திருவிளையாடல்களின் சிறப்பை இந்த மஹோற்சவத்தில் கண்டு களிப்போம் என்பர் பலர்; மஹாதேவனைத் தரிசித்து மகிழ்வோம் என்பர் பலர்; உமையவளின் திருமேனியைக்கண்டு இன்புறுவோம் என்பர் சிலர்; உகந்து நிற்கும் அற்புதங்களில் மாண்பு நிரம்பிய மகாமகோற்சவ அற்புதத்தைக் கண்டு களிப்போம் என்பர் பலர்; பெருமான் பவனிவருவதைப் பார்த்து மகிழ்வோம் என்பர் சிலர்; பவனிபோகையில் யாமும் செல்வோம் என்பர் பலர். இங்ஙனமாக எல்லோரும் பிரம்மாவிடுத்த அழைப்புப் பத்திரத்துக்கிணங்கிக் கும்பகோணம் வந்துசேர்ந்தனர். வந்தவர்களைப் பிரம்மா அழைத்துக்கொண்டு, ஊர்வலம்வந்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் கும்பலாயத்திற்குள் பிரவேசித்துத் துவஜாரோஹணம் செய்தார். துவஜஸ்தம்பம் நாட்டி மணி, விருஷபம்,

பட்டு முதலியவைகளால் அலங்கரித்து, வஸ்திர புஷ்ப ஹார கவச கிரீடாதிகளால் அலங்கரித்து, நிவேதனங்கள் அளித்து, வைபோகமாய் உற்சவத்தின்பொருட்டுத் துவஜாரோகணமும் நிறைவேறிவிட்டது.

**இரதா ரோஹணம்**

இதற்குப் பிறகு உற்சவத்துக்கு அவசியமானதும், கடவுளைப் பக்தகோடிகள் பலர்க்கும் தரிசனங் காட்டுதற்கு அனுகுணமாயிருப்பதும், பூஸுரசிரேஷ்டர்களான புண்ணியர் மனமுவந்து கைகூப்பி எம்பெருமானுக்கு வந்தனை வழிபாடு செய்வதும் ஆன சத்கிருத்தியத்திறகு உகந்தவாறு வாகனாதிகள் தயாராயின. திவ்யமான பல்லக்கு என்ன, யானைகள் என்ன, குதிரைகள் என்ன, இன்னும் திவ்யமான ரத்னகசிதமாய்த் தென்படும் வாகனாதிகளைச் செய்து வைத்தார். வாகனாதிகளில் பரமபதி அம்மாள் சமேதராய் வீற்றுப் பிரதக்ஷிணம் வருங்காலத்தில் பார்த்தோர் அனைவரும் இதுதான் பூலோககைலாஸமோ வென்று பரமானந்தப் பட்டனர்; எத்தனையோ தவங்கள் புரிந்தும், அப்படிப் புரிகையில் மத்தியில் வரக்கூடிய எத்தனையோ தொல்லைகளைக் களைந்தும் அதற்குப் பிறகே ஜனங்கள் ஐயன் தரிசனம் அடையவேண்டியிருக்கும். எத்தனைநாள் ஊழியஞ்செய்து சிவனை ஸ்மரித்துப் பிறகு நந்தன் தில்லையம்பலம்போய்ச் சேர்ந்து முத்திபெற்றான்? இன்னும் சிவபக்தர்கள் எத்தனையோ பேர் எவ்வெவ்விதமாகவோ தொண்டு புரிந்து பரமானந்தக் காக்ஷியைக் கண்டிருக்கின்றனர். தெய்வ விமானம் எனப்படும் அதே காக்ஷியைப் பூமியிலுள்ளார்க்குங் கொடுக்குமாறு பொன், வெள்ளி, முதலான விலையுபர்ந்த உலோகங்களினாலும் நீலம், கோமேதகம், பவளம், மரகதம், மாணிக்கம், ரதனம், வஜ்ரம், வைடூர்யம் முதலான விலையுயர்ந்த கற்களாலும் கண்டோர் கண்களைக் கவரும்வண்ணம் ரதங்க

ளும் செய்தனர். உற்சவத்தின் சம்பந்தமாய் ரதாரோஹணமும் ஆயிற்று.

உற்சவ தடபுடல்

மேற்சொன்னவாறு மற்றை வாசனங்களும் நிரம்பியிருக்க ஸ்வாமி, அம்மன், விக்னேசுவரர், சுப்ரமணியர், சண்டிகேசுவரர், ஆகிய ஐவர்க்கும் முறையே தனித்தனியாய் ஆஸ்தானங்கள் செய்வித்து, அவ்விடங்களில் அவர்களைப் பிரதிஷ்டைசெய்து, பிரம்மா உர்சவீத்தை ஆரம்பித்தார். உர்சவவிபர்ஸசையை யாமெங்ஙனம் எடுத்துரைப்பது. என்னே சிறப்பு! என்னே மகிமை! வாகனத்தில் ஸ்வாமி புறப்பட்டு வீதிவலம் வரும்போது பார்த்து மகிழ்ந்தோரது பூரிப்பை இதில் எழுதமுடியாது. உர்சவம் ஆரம்பமாகி முடியும்வரையில் வந்திருந்தோர்க்குப் பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களோடு உணவும், பூஸுரர்கள் மனம் பூரிக்கப் பக்தி சிகாமணிகளுக்சென்று வந்திருக்கும் பாந்தாமனது திவ்யக்காட்சியும் பார்த்தோர்க்கே புலப்படும். என்ன அற்புதம்! என்ன ஆனந்தம்! உற்சவம் ஆரம்பமான தினம் முதல் தினசரி வேதபாராயணகோஷம் ஒருபுறமும், நடனம் புரிந்தாடும் நங்கையர் ஒரு புறமும், சங்கீத சாஹித்திய மிகுந்தப் பண்டிதோத்தமர் மற்றோர்புறமும், மேளதாள மிருதங்க கோஷிப்பு மற்றோர் புறமும் நிரம்பியிருக்க உற்சவமானது நடைபெற்றது. ஒவ்வொருதினத்து உற்சவமும் ஒவ்வொரு மாதிரியாகச் சிறப்புக்கொண்டிருந்தது. முத்துமாலைகள், பட்டு வஸ்திரங்கள், குதிரைகள், மணிகள், மற்றும் சிற்பிகளால் செய்யப்பட்ட அற்புத வேலைகள் நிரம்பியிருந்த ரத்னகசிதமான ரதத்தில் ஸ்வாமி எழுந்தருளினர். ரதாரோஹண மகோற்சவமும் பூர்த்தியாயிற்று. ஊர்முழுவதும் விருந்தினர் நிரம்பி வாத்திய கோஷமே மேம்பட்டிருந்தது; சுருக்கிச் சொல்லின் 10-நாள் உற்சவமும் வெகு தடல்புடல்களோடு நடைபெற்றது.

உற்சவாரம்பத்தில் முதன் முதலாகச் சிறப்பிக்கவேண்டியது மகாதீர்த்தமேயாம். இந்த மகாதீர்த்தம் எனப்படுவதே மஹாமகக்குளம் என்று சொல்லப்படுகின்றது. இந்த உற்சவத்தின்கண் இந்தக் குளம் மஹா சிறப்புடையதாதலின் இதற்கு மேன்மை யுண்டென்பதைத் தெரிவிக்கப் பிரம்மாவானவர் ஆரம்பத்தில் குளத்தைச் செப்பனிட்டு அலங்காரம் பண்ணினர்; குளப் படித்துறைகளைச் செம்மையாய்க் கட்டியும் மண்டபங்களைச் சுற்றும் அமைத்தும், கைப்பிடிச்சுவர்களைப் பாங்காய் எழுப்பியும், குளத்தைச் சுற்றிலும் வாழைகள் நாட்டித் தோரணங்கள் தொங்க, மாவிலைசரங்கள் ஆடப் பாக்கு மரங்கள் ப்ரபலிக்க, அந்த மஹாதீர்த்தத்தை அலங்கரித்தார்.

மகா தீர்த்தம்

இந்தக்குளத்தில் மஹாசிரேஷ்டமான நதிகளாகிய சக்திகள் ஒன்பது சேர்ந்திருப்பதாக ஐதிகம் வழங்குகின்றது. அவையாவன:—கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, மஹாநதி, பயோஷ்ணீ, (பாலாறு), ஸரயூ இவ்வொன்பதாம். சாதாரணமாக இந்த நதிகளை இந்தியாவின் நாற்புறங்களிலும் காணக்கூடும். ஒவ்வொரு நதியின் பிரபாவத்தை எடுத்துக் கூறுவதெனின் முடியாது. காவேரியின் சிறப்பை முதல் அத்தியாயத்திலேயே எடுத்துக் கூறினோம்.

மகாதீர்த்தத்திலுள்ள நவநதிகள்

இனி கங்கையின் சிறப்பைக் குறித்துக் கூறுவோம். ஹிமாசலத்தில் உற்பத்தியாகும் நதிகளில் இதுவு மொன்று. மேற்குறிப்பிட்ட ஒன்பது கன்னிகைகளில் கங்கையையும் ஒரு கன்னிகையாய்ப் பௌராணிகர் மட்டும் சொன்னவரல்லர். தமிழ் நாடுகளிலும் கங்கையைத் தேவியாகப் பாவிக்கப்படுகிறது. "கங்கை யென்றலுகெலாங்

கங்கையின் பிரபாவம்

கைதொழத்தகும்-மங்கை'' * யென்றும் பலர் படித்திருப்பார்கள். பஞ்ச பூதங்கள் ஆரியப் புதல்வர்களால் தெய்வாம்சமாகத் தொழப்படுவதை யொப்ப மலைகளையும் ஆறுகளையும் நம்மவர் தெய்வாம்சங்களாகவே தொழுகின்றனர். வெண்மையான நீராவிப்படலங்கள் ஆகாயத்தினின்று இழிந்து இமயமலையின் உச்சியில் தங்கிப் பின் சூரியோஷ்ணத்தால் உருகி அதன் சாரல்வழியாய்த் தாரைதாரையாக வெளேரென்றிருக்கும் நுரையுடன் ஓடிவருவதைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் அழகு பொருந்திய தேவக்கன்னிகைதான் வெண்மையான வஸ்திரமுடுத்துப் பூமிநோக்கி மலைச்சாரலின் வழியாய் இறங்கிவருகிறாளோ வென்றும் ஐயமிருக்கும். இவ்வாறு இழிந்து வந்த அம்மாதின் பாதம் பட்டவிடமெல்லாம் செழித்து, நாட்டிற்கு நன்மையுண்டாகவே பூவுலகத்தவர் அந்நதியினைத் தேவகன்னிகையென்றே மதிக்கவாரம்பித்தனர். கங்காதேவி ஆகாயத்திலிருந்து புறப்பட்டு அதிவேகமாய் வருகையில் சிவனாது ஜடாமகுடத்தில் மறையுண்டுறைந்து பின்பு பூமியின் கண் பெருகினளென்று கூறப்பட்டிருக்கும் பிரபாவத்தைப் புராணங்களிற் காணலாம். இம்மாதிரியே சகல பிரபாவங்களும் ஒருங்கமையப் பெற்றவையாம் மற்றை நதிகளும்.

**கடவுளை நாடிய கன்னியர்**

ஆதியில் இந்த நதிகள் அனைத்தும் கன்னிகைகளின் உருவெடுத்து ஆபரண பூஷிதைகளாய் ரத்னகஞ்சுகங்கள் தம்மீது ஜ்வலிக்க தம்மையண்டினோரது மனத் துயரையும் சரீர வழுக்கையும் போக்குவோராய் ஒன்று கூடி ஆலோசனை செய்துகொண்டு பார்வதிதேவியோடு பரமன் கொலுவிருக்கும் கைலாஸ பர்வதத்திற்குச் சென்றார்கள். எண்ணிறந்த ஜனங்கள் வந்து ஸ்நானமா

* வில்லிபுத்தூராழ்வார்.

டித் தந்தம் பாவத்தைத் தீர்த்துக் கொள்வதனால் அந்தப் பாவம் அவர்களிடத்தி னின்றும் விலகித் தம்மிடம் வந்து சேருகிறதென்றும், அப்பாபங்களை ஒருவாறு ஒழித்துக்கொள்வதற்கு வழி எது வென்றும் ஆலோசித்துக் கைலாஸபதியை அண்டினார்கள். ஒன்பது கன்னிகைகளும் ஏகோபித்துக் கடவுளைத் தியானித்தவராய்த் தம்மிடம் பிரதிநிமிஷத்திலும் சுமந்துகொண்டிருக்கும் பாபங்களைப் போக்கிக்கொள்ள ஒரு மார்க்கம் கற்பிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்; மன்றாடினார்கள்; அரனின் சரணமலர்களில் வீழ்ந்தார்கள். சம்போ சங்கராவென்று துதித்தார்கள். யோசனைகேட்க வந்த கன்னிகைகளைப் பார்த்து மனமிரங்கிய ஈசுவரர் பின் வருவாறு கூறலுற்றார்:-

சிவனார் கொடுத்த திருவாக்கு

"கண்டார் மனக்குழுத மெல்லாம் மலரவடிக்கும் மாண்புகொண்ட மடந்தையர்காள்! நீங்கள் யாதொன்றுக்கும் சஞ்சலப்பட வேண்டாம். பாபகர்மிகள் நிரம்பிய இந்தப் பவஸாகரத்தில் நிமிஷந்தவறாமல் நடந்தேறும் எண்ணிறந்த கொடுஞ்செயல்களுக்குக் கணக்கில்லை. அத்தனை பேர்களுள் ஒரு பகுதியரே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானமாடிப் பாபத்தைத் தொலைத்துப் போகின்றனர்; எல்லோருமே ஒன்று சேர்ந்து பாபத்தைக் கழிக்க வாரம்பித்தால் நீங்கள் சகிக்க மாட்டீர்கள்; அவரது பாபம் ஆங்காங்கு தொலைவுறவேண்டுமென்பதற்கே எண்ணற்கரிய க்ஷேத்திரங்கள் நாடெங்கும் பரவியிருக்கின்றன. அது போகட்டும், உங்களது பாபங்கள் ஒருவாறாய் ஒழிந்து போவதற்காக ஒரு உபாயஞ் சொல்கின்றேன். இந்த தினத்திலேயே நீங்கள் புறப்பட்டு எமக்கும் ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கும் பிரீதிகரமாயுள்ள கும்பகோணத்துக்குச் செல்லுங்கள்; மாக மாஸம் பௌர்ணமிதி

தியன்று பகலில் விருஷபலக்னத்தில் கும்பேசுவருடைய ஆலயத்தின் தென்கிழக்கில் பரப்பிரம்மத்தின் ஆக்ஞை காரணமாக அமிருததாரையால் நிரம்பப்பெற்ற சுத்தஸ்படிகமான தண்ணீர் கொண்ட தடாகமொன்றிருக்கின்றது. அதற்கே மஹாமககுளம் என்னும் திருநாமமுண்டு. அக்குளத்து நீரில் பக்தி புரஸ்ஸமாய் ஸ்நானமாடுங்கள்; பகவானைப் போற்றுங்கள்; உங்களிடத்து அணுகின பாபமெல்லாம் அகன்று விடும். அது முதல் உங்களுக்குச் சகல மகிமைகளும் ஏற்பட்டுவிடும்; உங்களை யண்டி ஸ்நானமாடுவோரது பாபமெல்லாம் பறந்தோடுவது ஒரு புறமிருக்க மற்றோர்புறத்தில் உங்களுக்கும் தீர்த்தமாடுவோரது துர்க்கிருத்தியங்களாகிற பாபங்களுக்கும் அணுவளவேனும் சம்மந்தமுமிராது; ஆதலால் உங்களது திருப்புகழ் புவிமுழுவதிலும் பரவட்டும்; உங்களது ஸ்மரணை பக்தர்களிடம் பின்னும் பிராபல்யமாகட்டும்."

**சிவனுக்கும் கன்னியருக்கும் சம்பாஷணை**

இதைக் கேட்ட கன்னியர்கள் ஒன்பது பேரும் "ஸ்வாமி, எங்களுக்குக் கும்பகோணமும் தெரியாது; கும்பலிங்கமும் தெரியாது; தங்களுடைய திருவடிகளையே யாம் அறிவோம்; சரணம் சரணம்" என்றனர். அதற்குச் சிவபிரான் நீங்களெல்லோரும் ஸ்ரீகாசி என்கிற வாரணாவத க்ஷேத்திரத்துக்குச் செல்லுங்கள். அவ்விடத்திற்கு நான் வந்து எனது பிரமத கணங்களோடு விருஷபாரூடனாய் விசுவநாதன் என்ற பெயரோடு, உங்களையும் அழைத்துக்கொண்டு கும்பகோணம்போகிறேன்; நீங்கள் பாபம்வந்து அணுகிவிட்டதேயென்று சிந்தைப்படாதேயுங்கள்; சந்தோஷமாயிருங்கள்; மனவில்பக்தி பண்ணிக்கொண்டிருங்கள்; ஹரஹர வென்று சொல்லுங்கள்; சம்போவென்று ஸ்மரியுங்கள்; சங்கராவென்று நவிலுங்கள். நாமெல்லோரும் அவ்விடம்போய்ச் சேர்ந்த பிறப்பாடு

மஹாமக தீர்த்தத்தின் வடகரையில் ஸ்தானமாயிருப்போம். அவ் விடத்தில் உங்களோடு உற்சவத்திற்காக நான் வருகிறேனாதலின் நீங்கள் ஒன்பது பேரும் கூடவேயிருந்து நடக்கும் வைபவங்கள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருங்கள். நீங்கள் செய்யவேண்டுதென்னையெனின், உங்களுடைய தெய்வீக ஜீவிதாமிசத்தின் ஒருபகுதியை உங்களது எப்போதுமுள்ள ஸ்தானங்களில் வைத்துவிட்டு மற்றோர்பகுதியை நாமிருக்கப்போகிற குளத்தருகில் வைத்திருக்கவேண்டியது'' என்றார்.

**கும்பகோணத் திற்கு விஜயம்**

கன்னிகைகளான நவநதிகளும் அமிழ்தினும் இனிய பெருமொழிகளை அரனின் திருவாயின்றும் இன்புடன் உணர்ந்து ஆனந்த பரவசராகி கங்கர்நதிக்கரையின் வடகரையிலுள்ள ஸ்ரீ காசிக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களுக்கு வாக்களித்த பிரகாரமே பரமபதியானவர் விசுவாகாரமான ரூபத்தோடு விசுவநாதர் என்ற பெயருடன் அந்நகரத்தில் எழுந்தருளிக் கன்னியர்களுக்குக் காக்ஷிகொடுத்துப் பின்னர் அந்த ஒன்பது பேரோடும் ஸர்வேசுவரன் புறப்பட்டார்; சிவகணங்களெல்லாம் புடைசூழ்ந்துவர திருத்தாண்டவமாடக்கைலாஸபதியானவர் கும்பகோணக்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். வாத்தியகோஷமும் வேதகோஷமும் பிரபலமாயிருக்கவும், பரிவாரங்களின் ஆரவாரிப்பு தடபுடலாயிருக்கவும், பக்தகோடிகளின் மனம் புளகிதமாக வந்து சேர்ந்தார்.

**அபிமுகேசுவரர்**

இங்ஙனம் ஈசுவரன்வரும் பெருமுழக்கத்தைக்கண்டு கிழக்கு முகமாய் வீற்றிருந்த கடபலேசுவரர் அம்பிகை சகிதமாக மேற்குமுகமாய்த் திரும்பினார். அபிமுகேசுவரர் தம்முடைய சுதாவல்லி யம்பிகையோடு தெற்குமுகமாய்த் திரும்பினார். மற்றுமிருந்த பல தேவர்கள் பிரமிப்பும்

ஆச்சரியமும் அடைந்தார்கள். ஒன்பது கன்னிகைகளும்வரு கின்ற ஸ்ரீவிசுவநாதரைப்பார்த்து இங்கு இவர்கள் இம்மாதிரி மாறுவதற்குக் காரணம் என்னை யென்று கேட்டார்கள்; அதற்குக் கைலாஸ பதியானவர் புன்சிரிப்புக்கொண்டு நவதீர்த்தங்களையும் நோக்கி "புண்யதீர்த்தங்களே, அவர் களுக்கும் எனக்கும் பேதமில்லை; சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய இம்மூன்றும் ஒருங்கேயமைந்த சின்மயாநந்தஸ்வரூபி யாவோம் யாம். பல பேர்களுக்குப் பலபெயர்களோடு பல பல ரூபகாரமாய்த் தென்படுவோம் யாம். அவர்களுக்கும் எனக்கும் யாதொரு பேதமுமில்லை. லோகானுபவ நம்பிக் கையையொட்டி ஒருவித்தியாசம் இருக்கவேண்டும் என் பதற்காகவே இவ்விடம் ஒருவிதமாயும் மற்றோரிடம் மற் ரோரு விதமாயும் பக்தகோடிகள் கண்களுக்கு யாம் புலப்படு கின்றோம். நாமெல்லோரும் புறப்பட்டுவருங்கால் பிரம்மாண் டத்தைப் பிளக்கும்படியாயுண்டான பெருஞ்சப்தத்தைக் கேட்டவுடனே அவர்கள் திரும்பியதாகுமேயன்றி வே றொன்று மில்லை யென்றார். நவதீர்த்தங்கள் தக்ஷணமே பரமனை நமஸ்கரித்து இம்மகாதீர்த்ததிற்கு எதிராயிருக்கும் எங்களை ரக்ஷிப்பது தங்கள் பெரும்பாரமாகும் என்ற பொறுப்பை அவர்மீது சுமத்திப் பின்னர்த் தங்களை இன்று முதல் அபிமுகேசுவரர் என்றழைக்கின்றோம் என்று வணங்கிக் கேட்டுக்கொண்டார்கள்.

பிறகு எல்லோருமாக அந்த மஹாமக குளத்தைச் சுற்றிவரப் புறப்பட்டார்கள்; வரும்போது விசுவநாதன் ஒவ்வொரு இடத்திலுமுள்ள மண்டபத் திலும் ஒவ்வொரு கணம் நின்று குளத்தைப் பிரதக்ஷிணம்செய்தார்கள்; உபவீத ஈசுவரரைப் பார்த்துக் கன்னியர் ஆனந்த பரிதமாகிப் பின்னர் நேர்வழியே சென்று வடக்காய்த் திரும்பினர்; குளத்துநடுவில் நின்று பார்க்கு

மிடத்து வடமேற்கு முகமாக இவ்விடந்தெரியும்; இவ்விடத்திலேதான் கன்னிகைகள் நின்றுவிட்டார்கள்; விசுவநாதரும் மேற்குப்பாகத்தில் விசுவலிங்கமென்று பெயர்கொண்டு தங்கினார்.

**தீர்த்தாடனத்துக்கு தேவர்கள் புறப்பட்டு வருதல்**

நவகன்னிகைகளான புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் வந்திருப்பதைப் பிரம்மா பார்த்து மகிழ்ந்து இதுவும் திருவருளின் கருணைதானென்று மதித்து வாத்திய கோஷத்துடன் மகோற்சவத்தை சங்கற்பஞ் செய்ய வாரம்பிக்கிறார். ஸ்ரீ ஆதி கும்பேசுவரர், மங்களாம்பிகை, சுப்ரமணியர், மகாகணபதி, சண்டிகேசுவரர் ஆகிய இப் பஞ்சமூர்த்திகளையும் அவரவர்களுக்கு உரித்தான வாகனாதிகளில் ஏற்றிக்கொண்டு சகல முஸ்தீப்புக்களும் பரிவாரங்களும்ஜய விஜயீபவ வென்றும் 'ஹர ஹர' வென்றும் கருணையங்கடலான கடவுளின் நாமோச்சாரணஞ் செய்துகொண்டு கோலாகலத்துடன் வர, பிரம்மாவானவர் இந்த பவனிக்கு முன்னதாகச் சென்று வேதவாத்திய நிருத்திய கீதங்கள் செம்மையாய் நடை பெறுகின்றனவாவென்று அவ்வப்போது விசாரித்தவாறே கும்பேசுவரர் கோவிலின் மேற்குப் பக்சத்தில் வந்தார். சம்பட விசுவநாதரை விருஷபாரூடராய் சகல பரிவாரங்களோடு விமானத்தில் ஆரோகணித்துப் பின்னர்க் கிழக்கிலிருக்கும் ஸோமேசுவரரை விருஷபாரூடராகவே விமானத்தில் விஜயம் செய்வித்து ஏகோன்னத மனோல்லாஸத்துடன் பாதாளபீஜநாதரையும் பரிந்து அழைத்து வாகனத்தில் ஏற்றி வந்துகொண்டிருக்கும் வழியில் காசி விசுவநாதரைக் கைவிடாமல் கூட்டிச் சேர்ந்து மகாமக தீர்த்தத்தை வலம்வந்தார். வருகையில் குளத்துக்குக் கீழ்த்திசையிலிருக்கும் அபிமுகேசுவரரும் சேர்ந்து பிரதக்ஷணம்வர ஆங்குள்ள கௌதமீசுவரரும் இம்மகோற்சவத்தில்

மனம் வைத்துப் புறப்பட்டார். எல்லோருமாக அமளியாயிருக்கும் கும்பேசுவருடன் சேர்ந்து அந்தக்குளத்தைப் பிரதக்ஷிணமாகவந்து வடமேற்குக் கரையில் ஸ்வாம்சபூதர்களான ஆறுபெயர்களையும் கும்பேசுவரரையும் வைத்து அவர்களுடைய திருச்சன்னிதானத்தில் தீர்த்தானேற்சவம் பண்ணுகிறதற்காகப் பிரம்மா ஸாக்ஷாத்தேவருக்கு அபிஷேகம்பண்ண ஆரம்பித்தார். பத்திரம் புஷ்பம், பலம் முதலியவைகளால் ஆராதனம் பண்ணினர்.

**தீர்த்தத்தின் திவ்விய நாமங்கள்**

சுத்த ஸ்படிகமான ஜலம் நிரம்பிய தடாகத்துக்கு மஹாமக குளம் என்றபெயர்எங்கும் வழங்குவது சாதாரணமேயானாலும் வேறு ஐந்து பெயர்கள்வைத்து அக்குளம் அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொருவிதமான மகிமை பொருந்தியிருப்பதனாலே இவ்வைந்து பெயர்களில் ஏதொன்றைச் சொல்லினும் பலன் உண்டு என்று பௌராணிகர் கூறியுள்ளார். அவ்வைந்து பெயர்களாவன :—

1. மாக ஸரோவரம்
2. கந்யா தீர்த்தம்
3. பாபப்பநோதனம்
4. ஸ்தா தீர்த்தம்
5. பசு தீர்த்தம்.

இந்த ஐந்து தீர்த்தங்களும் மஹாமக தீர்த்தத்திற்கே குறிப்பாய்ப் போவதுபற்றி ஒவ்வொரு தீர்த்தத்துக்கும் உள்ள அர்த்தம் வெகு அற்புதமாய்க் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

முதலாவது மகாஸரோவரம்.—'அகு' என்றால் "பாபம்"; மா என்பதற்கு 'இல்லை' யென்று அர்த்தம். எனவே, இந்தக் குளத்தில் ஸ்நானம் பண்ணின பெயர்களுக்கு பாபமென்பதே கிடையாது; அணுகியபாபம் தொலைந்துபோம்; பாபி

கள் என்கிறபெயர் அவர்களுக்கில்லை. 'ஸரோவரம்' என்றால் சிரேஷ்டமான குளம்; அதனாலேயே பாபமணுகாததும் சிரேஷ்டமான மாகஸரோவரம் என்னும் பெயர் இதற்கு வந்தது.

இரண்டாவது, கன்யாதீர்த்தம்.—மகாள் என்னும் பெயர் புனைந்த கன்னியர் இந்தமகா ஸரோவரத்தில் குடிகொண்டிருக்கிறார்கள். வெகுதூரத்திலுள்ள யாத்திரிகர்கள் இந்த தீர்த்தத்தின் மகத்துவத்தைக்கேட்டு சந்தோஷங்கொண்டு இதனில் நீராடப் புறப்பட்டு வருகிறார்கள்; இப்படிப்புறப்பட்டுவந்து ஸ்நானம் பண்ணுகிற ஜனங்களின் வழுக்களை (பாபங்களை)ப் போக்குவதற்கே அக்கன்னியர் உற்பவித்திருக்கிறார்கள். இந்த மகாள் என்கிற மகாகன்னியரோடு நவநதிகளும் * வந்து சேர்ந்திருக்கின்றன. இவர்களும் இத்தடாகத்தில் ஸான்னித்யம் செய்கிறபடியால் இதற்குக் கன்யாதீர்த்தம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

மூன்றாவது, பாபாபநோதனம்.—கொலை, கொள்ளை, நரசோரம், பிரஹ்மஹத்தி முதலான பெரிய பெரிய பாபங்களுக்கு நிவாரணமே கிடையாதென்று பல பெரியோர்கள் சொல்லியிருந்தாலும் பிரம்மாவினால் ஆரம்பித்துப் பரம்பொருளே பிரத்தியக்ஷமாகித் தீர்த்தாடனஞ் செய்யும் இந்த மகாதீர்த்தமே அப்பாபாதிகட்குப் போதிய பிராயச்சித்தமென்று விளங்குவதாகின்றது. முதன்முதல் பிரம்மாவும், அதற்குப்பின்னர் கன்னிகைகளான நவநதிகளும் பரமனை வரங்கேட்டு வாங்கி யிருக்கிறபடியால் பிரமஹத்தியாதி பாபங்களுக்கு இம்மகாகுளமே பிராயச்சித்தமாகும் என்பது நிதர்சனமாகின்றது. ஆகவே இக்குளத்துக்குப் பாபாபநோதனம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

---


* கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவேரி, மகாநதி, பயோஷ்ணி, ஸரையூ.

நான்காவது ஸுதாதீர்த்தம்.—சிருஷ்டி பீஜகடத்தின் கோணமானது கிராதரூபியான பரமேசுவரனால் பிளக்கப்பட்டபோது கடம் விரிந்துபோயிற்று; விரிவுண்ட பிளப்பின்வழியாக அமிருதமானது பூமியில் பெருகிவந்து தாரையாய் ஓடி இத்தடாகத்தில் போய் விழுந்தது. ஆகவே இதற்கு ஸுதாதீர்த்தம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஐந்தாவது, பகுதீர்த்தம்.—அநேக தீர்த்தங்கள் இக்குளத்தில்வந்து சேர்ந்திருப்பதே மேற்குறித்த பெயருடன் இது பிரகாசிப்பதற்குப் போதிய காரணம்.

மஹாமககுளமும் அதில் இருக்கும் பற்பல தீர்த்தங்களும் பார்ப்போர் கண்களுக்கு இனிதுவிளங்கும்படி கீழே ஒரு கட்டத்திற் குறிப்பிட்டிருப்பதைக் காண்க:—

# தீர்த்த நிலையின் அமைப்பு.



கன்னியாதீர்த்த மென்பது முக்கியமானபடியால் இக்குள முழுவதுக்குமே அப்பெயர் பிரகாசித்து நிற்கின்றது. அதனாலேயே அதை மத்தியஸ்தானத்தில் மேலேகுறிப்பிட்டிருக்கிறோம். இந்தக் குளத்தில் 66கோடி தீர்த்தங்கள் அடங்கியிருப்பதாக ஐதிகம்;

**இவ்வமைப்பின் விரிவு**

இவையல்லாது மற்றும் எத்தனையோ தீர்த்தங்களுமுண்டு அவைகளை விவரித்துரைக்கப்புகின் கணக்கிலடங்கா ; கீழ் திக்கில் இருக்கும் அபிமுக்தேசுவரர் சந்நிதானத்தில் தோன்றுவதுதான் இந்திரதீர்த்தம் ; ஆக்னேயமூலையில்அக்கினிதீர்த்தம்; நேர்தெற்கில் உள்ளது யமதீர்த்தம் ; தென்மேற்கு மூலையாகிய நிருதிமூலையில் இருப்பது ராக்ஷஸ தீர்த்தம் ; மேற்குதிக்காய்த் தோன்றுவது வருணதீர்த்தமும் தேவதீர்த்தமுமாம். வாயுமூலையாகிய வடமேற்கில் வாயு தீர்த்தம்; வடக்கிலோ பிரம்மதீர்த்தமும் குபேரதீர்த்தமும்; வடகிழக்கு அல்லது ஈசானதிக்கில் ஈசானதீர்த்தம்;வாயு தீர்த்தத்திற்கும் பிரம்மதீர்த்திற்கும் மத்தியில் நிற்பதே கங்கா தீர்த்தமாகும் ; பிரம்மதீர்த்தத்துக்கும் குபேரதீர்த்தத்துக்கும் மத்தியில் யமுனை தீர்த்தம் ; இப்படியே, மேற்குறிப்பிட்ட குறிப்பைப் பார்த்து அந்தந்த தீர்த்தத்தின் நிலையை யறிந்துகொள்ளலாம் ; இவ்விதமாக விவரிப்பில் அடங்கிய மொத்த தீர்த்தங்கள் இருபதெனவழங்கப்பட்டு வருகிறது.

பஞ்ச மகாபாதகங்கள் என்று பெரியோர் சிறியோர் பலராலும் பிரதிதினமும் பீதிகொள்ளக்கூடிய துர்க்கருமங்கள் நிரம்பிய இந்த மாயப் பிரபஞ்சவாழ்க்கையில் . இப்படிப்பட்ட தண்ணீர்தடம் ஒன்றிருப்பதே தரணியிலுள்ளோரது பாபரிமனத்துக்கு உரிய பரமௌஷதமென்று கருதினர் அநேகர்; இந்த மகநீய ஸரோவரத்தின்

**தீர்த்தாடணம் செய்தல்**

175373

சிறப்பைக் கொண்டாடுகையில் மத்தியானம் விருஷபலக்ன த்தில் தேவரிஷிகளும், பிரும்மரிஷிகளும், ராஜரிஷிகளும் நிரம்பிப் பின்னுமுள்ளதேவதைகள் பலரும் ஒன்றுகூடியிரு க்க ஸாவித்ரி, ஸரஸ்வதி சமேதராய் சிருஷ்டிக்கர்த்தரான பிரம்மதேவர் சங்கற்பாதிகிரியைகளை முன்னிட்டுத் தீர்த்தா டனஞ் செய்தார்; அதேஸமயத்தில்தான் மற்றைத் தேவர்க ளும் ரிஷிகூட்டங்களும் ஸ்நானமாடினர். அதுவே புண்ய காலமெனப்படுவது; மாகதீர்த்தமகிமைகொண்டதும் அது வே; மகாமகாபாபங்களை வேரறுத்து ஏப்பேர்ப்பட்டவனை யும் மகநீயனுக்கும் மகாகௌரவம் படைத்துள்ளதும் அது வேயாம். ஸகலதேவர்களோடும் ஸ்நானமாடி பிரமதேவர் கரைநோக்கிவந்து வெகு மனோஹரமாயும் ஆனந்தபரவச முண்டாக்கும் கருணையங்கடலான எம் பெருமானது ஆஸ்தானவிடமாகப் பிரகாசிப்பதாயுமிருந்த ஸர்வாலங்கிரு த மண்டபத்தில் பிரவேசித்தார். ஆங்குத் தன் அம்சஸ்த ராய் ஆரோஹணித்திருக்கும் 6 பேர்களுடன் அமர்ந் துள்ள கும்பலிங்கேசுவரரை அவர் பலவிதமாய்ப் பூஜித்துப் புகழ்ந்து கொண்டாடினார்.

இத்தகைய வைபவங்களோடு இந்த மகோற்சவம் நிறை

பவனிச் சிறப்பு

வேற்றிற்று. விஜயஞ் செய்திருந்த மஹா ஜனங்கள் எல்லோரும் வெகு மனப்பூரிப் போடுகும்பேசுவரரையும் மற்றும் அறுவ ரையும் தரிசனம் பண்ணிக்கொண்டு தீவட்டி மத்தாப்புக்கள் ஜ்வலிக்க, வாண வேடிக்கைகள் பிரதிபலிக்க, வாத்தியகோஷம் முழங்க அவர் களை ரதவாஹனரூடராய்ப் பவனிநடத்திவருஞ் சிறப்பே சிறப்பு! கைலாஸபதியின் காருண்யமிகுந்த திருத்தரிசனங் கொண்டுய்யும் பக்தகோடிகள் எத்தனையோ, சிவவென்றும், ஹரஹரவென்றும் கருணைவள்ளலான கருணாநிதியைப் போற்றுவோர் எத்தனையோ, மந்தாரபீடத்தில் மந்தஹாஸத்

துடன் வீற்றிருக்கும் மங்களாம்பிகையின்முன் மனமுவந்து நமஸ்கரிப்பார் எத்தனையோ, காதம்பகாந் தாரவாஸப்ரியேயென்று கரங்குவித்துக்கதறுவார் எத்தனையோ, பரமாநந்தபரவசராகிப் புகழ்படைத்துப் பூபாரந்தீர்க்க வந்த புண்ணியவதியென்று புகழ்வா ரெத்தனையோ; சாதுர்ய ஸம்வாதினி, சாமளி, கோமளி யென்று சரணமடைவா ரெத்தனையோ; நாகசுரம், மற்றுமுள்ள தேவகீத மிகுந்த வாத்தியகோஷ விமர்சை யெத்தனையோ, நடனமாதர்களின் நாட்டியங்கள் எத்தனையோ, பின்னும் வழியில்வழங்கும் கோலாகலங்கள் எத்தனையோ செப்பவியலாது.

ஊர்ப்பவனியானது இத்தன்மைய கோலாஹலத்துடன் மஹாமக குளத்திலிருந்து புறப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. சகல தேவர்களும் சூழ்ந்து முன்னிலையில் பிரம்மாவானவர் நடத்திச்செல்கின்றார். பாந்தவிழிகளும் இளநகையும் மெல்லியபின்மேனியும் சாந்த வடிவும் துறந்தார் மனத்தையும் பிணிக்கத்தக்க நடனமாதர்களாம் தேவரடியார்கள் மத்தியிலாங்காங்குநின்று நடனம்புரிந்த விமர்சையை யென்னென்றுரைப்பது! இந்திரலோகத்தில், ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை முதலான அப்ஸர ஸ்திரீகளே இவ்விடத்தில் கும்பலிங்கேசுவாருக்கு எதிராய் நவரஸ உல்லாஸ விநோத சங்கீத சாஹித்தியங்களோடு வீணாவேணுகான கடதாளமிருதங்க வாத்திய கோஷிப்புகள் நிரம்பியிருக்க அபிநய பரதசாஸ்திர பும்ஸிகர்களாய் முன்னடந்து வந்தார்கள்; அவர்களது வனப்புக்கேற்றவாறே அறிவும் ஒழுக்கமும் அன்புஞ் சூழ்ச்சித் திறனும் பொறுமையும் மானமும் அவர்களிடங்குடி கொண்டிருந்தன. மடைந்தைப்பருவத்து மாதர் சிரோமணிகளாவரவர்; பக்கலைபயின்ற பாவையர் திலகங்கள்; அவர்களைச் சேர்ந்துவரும் மாதர்கள்யாவரும் ஒருவருவப்பது, மற்றவரு

(தேவரடியார்களின் தாண்டவம்)

முவப்பர். தாம் பரமனது உயிர்பாங்கியரென்று தமக்குள்ளேயே அவர்கள் பரமானந்தமுண்டு பரிகசித்துக்கொள்வர். இவ்விதமான சந்தோஷ சித்தர்களாய்வரும் நடனமாதர்களான அப்ஸரஸ்திரீகள் பரந்தாமன் முன்னிலையில் மண்டபத்திலிருந்தே ஊர்ப்பவனிமுழுவதும் தாண்டவமாடி வந்தார்கள்.

**அப்ஸரஸ்திரீகளின் நாட்டியம்**

இனி நாட்டியத்தை ஒருவருய்ச் சொல்லி மகோற்சவத்தை முடிப்போம்; நடனமாதர்களான அப்ஸரஸ்திரீகள் தமது செய்தொழி னலங் காட்டிப் பரமபதியின் உள்ளந் திரைகொள்ளத் துணிந்து தன் விழிவேலால் அவர் மார்பம்போழ்ந்து, தம் நல்வரிக்கோலம் நன்னர் விளங்க, மந்தநகையால் அவர்மனத்தினையுருக்கிமானெனத் துவண்டு, மேகலை நெகிழ்த்துப் பிடியெனநடந்து, தம் மழலைச் சொற்களால் திள்ளையெனப் பேசி, குயிலென வாய்திறந்து, கலாபம் விரித்தாடும் மயில்களெனத் தம் துயிலுடைகளை விரித்தாடிக் கறங்கெனச் சுழன்று, தரையினிற்படிந்து வணங்குநர்போலத் தலைக்கோலங்காட்டித் தளிர் நலங் கவற்றுந்தாள்களையெடுத்தும் விடுத்தும் மடித்தும் நடித்துச் சதிநயந்தெரித்து நடநவிகற்பங்காட்டி இயத்துடன் ஒன்றி, இன்னிசைபாடிப் புள்ளொலியெழுப்பிப் பல்வகை கானசாலமுஞ்செய்து, எவரையுங் கவனியாது பரமனையே தியானமாய்க்கொண்டு எங்கும் நிறைந்த நாட்டியமாடிய நங்கையரை சிருஷ்டித்த கர்த்தாவான பிரம்மாவின் மனவெழுச்சியே யெழுச்சி! நடனமாதரின் நன்னயம், சொன்னயம், பொருணயம் பொருந்திய கீதமே கீதம்! எல்லாம் ஈசுவரனைக்குறித்துச் செய்யும் இந்த மஹாமக உற்சவத்தின் பெருமையையே குறிப்பிட்டுக் காட்டுவதாய்ப் பிரம்மா மனமகிழ்ந்தார்.

வந்திருந்தோர் விடைபெற்றுத்திரும்பினர்

இவ்வளவுதூரம் விக்கினமில்லாமல் செம்மையாகவே உற்சவாதிகள் நிறைவேறவேண்டுமென்று பிரம்மா பிரார்த்தித்துக்கொண்ட பிரகாரம் எல்லாம் நடைபெறுவது திருவருளின் புண்யமெனக் கருதித் தேவர்களை அவரவர்களின் இருப்பிடஞ் சேர்ப்பித்துப் பின்னர் 'விடையாத்தி' யென்னும் புனரோற்சவத்தையுஞ் செய்து ஈசுவரனைத்தியானித்தவாறே தமக்கு இம்மகோற்சவத்தின் பலன் ஸித்திக்க வேண்டுமென்று நமஸ்கரித்துக் கேட்டார். பிறகு உற்சவத்துக்கு வந்த மகா ஜனங்களுக்கு வஸ்திராபரணங்கள் கொடுத்து சன்மானித்து அவரவர்களிருப்பிடத்திற்கு அனுப்பிய பிற்பாடு கும்பேசுவரருக்கு வருஷ உற்சவம், பஞ்சபர்வோற்சவம், தினஸரிபூஜை, நிவேதனாதிகள் முதலானவைகளுக்கு வேண்டிய திரவியத்தையும் கிராமாதிகளையும் ஏற்பாடு செய்துவிட்டுப்புறப்பட்டார்; மகேசுவரரிடம் விடைபெற்றுக்கொண்ட பின்னர் ஸ்ரீசாரங்கபாணியையும் ஸ்ரீகோமளவல்லியையும் தரிசனம் பண்ணி நமஸ்கரித்துத் தம் இருப்பிடமாகிய சத்யலோகம்போய்ச் சேர்ந்தார்.

புஷ்கரம்

இம்மாதிரியாகவேதான் பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதடவை மஹாமக உற்சவம் கும்பகோணத்தில் நடைபெற்று வருகின்றது. ஒரு வருஷத்துக்கு முன்னதாகவே பிரம்மா சகல தேவர்களோடு அவ்விடம் போய்ச் சேருவதாகவும், சேர்ந்து பின்பு சகல கைங்கர்யங்களையும் வெகு விமர்சையாய்ச் செய்வதாகவும் ஐதிகம் வழங்குகின்றது. கன்யர்களான நவ நதிகளும் ஈசுவரரோடு புறப்பட்டுவந்து உற்சவமான பிற்பாடு தம் அம்சத்தில் ஒன்றைமட்டும் விட்டுப்பின் தத்தம் இடம் போவதாகவும் ஐதிகம். கும்பகோணத்தில் 12 வருஷங்களுக்கு ஒருமுறை இந்த மகோற்சவம் நடைபெறுவதை யொப்பவட இந்தியாவிலுள்ள புண்ணிய நதிகளுள்ள க்ஷேத்

திரங்களில் நடக்கும் இத்தகைய உற்சவத்துக்குப் புஷ்கர மென்று சொல்லுகிறார்கள்.

**மகாமகமே மனக்குறை தீர்க்கும் மருந்து**

இந்த மஹாமக உற்சவத்திற்கு இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்தும் தொலைதூரத்திலிருந்தும் லக்ஷக் கணக்காய்ப் பக்தர்கள் வந்து சேர்ந்து நடத்துவதன் உள் அந்தரார்த்மிகத்தை ஆராய்வோமானால் பலப்ராப்தி யாவது உண்மையென்றே யேற்படுகின்றது. இந்த புண்ணியதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பகவானைத் தோத்திரிப்பதனால் ஒருமனுஷ்யன் அது பரியந்தம் அவன் செய்திருக்கக்கூடிய பாப கர்மங்களெல்லாம் பறந்துபோய்விடுவதாகக் கூறப்படுகிறது. பக்தி சிரத்தையோடுகூடவரும் யாத்திரிகர் எல்லோரும் இந்த மஹாமக குளத்தில் வந்து நீராடுவதைக் கண்கொண்டுபார்க்கும் போது நரஸாகரமே கரை புரண்டதுபோல் ஒருவனது கண்களுக்குப் புலப்படக்கூடும். ருதுவாகாத மடந்தையரும், புர்த்தா ஹிதமில்லாமல் கடூரமாய் வாய்க்கப்பெற்ற துரதிர்ஷ்டசாலிகளும், ரோகமுள்ள மாதர்களும், ரோகிகளான புருஷர்களையடைந்த பெண்களும் பரமபதியினது ஞாபகத்தை மறவாமல் அவர்மீது பாரத்தைச் சுமத்தி இப் புண்ய காலத்தில் ஸ்நானமாடி மிருஷ்டான்னபோஜனம் இடுவாராயின் அவர்களது மனக்குறை நீங்கி மனோபீஷ்டம் நிறைவேறுமென்பது பெரியோரது துணிபு.

**குளத்தில் ஸ்நானமாடும் விமர்சை**

சாதாரணமாக இந்த மஹாமககுளத்தில் தீர்த்தாடஞ் செய்யவருவோர் அனைவரும் தத்தம் சக்திக்கு இயைந்தவாறு தமயஞ்செய்வது வழக்கம்; ஸ்நானஞ் செய்யும் மாதர்கள் தமக்கு வேண்டிய வரன்களைக் கொடுக்கும்படி கன்யா ரூபமாயுள்ள நவநதிகளைப் பிரார்த்தித்துக்கொள்ளுவார்கள்; குங்குமம கண்ணாடி, புஷ்பம்,

வெற்றிலை பாக்கு, மஞ்சள் ஆகிய இவைகளை மடியில் கட்டிக்கொண்டு ஸ்நானம் பண்ணுவார்கள்; சிலர் கணவனும் மனைவியும் ஒருங்கே யொருவர் கையை யொருவர் பிடித்துக் கொண்டு கைகோர்த்துத் தீர்த்தமாடுவது முண்டு. இம் மாதிரியாகப் பூர்ணபக்திவைத்த மாதர்கள் பலர்.

குலதர்ம பத்தினிகள்

தங்கள் தங்களுடைய கணவரிடம் தாம் இனிது வாழ வேண்டி கங்கணங்கட்டி நமனுடன் கூடப் போட்டிபோட்டு ஜயித்தமாதர்கள் பலர், எனவே அம்மாதர்களிடம் தர்மம் என்பது தாண்டவமாடுகையில் கூற்றுவன் அவர்களது ஜீவாத்மாவைக் கொண்டுபோக பயப்படுவான் என்பதைக் காட்டவே மேலே அவ்வித முறைத்தோம். அவர்கள் கூற்றுவனின் (யமனின்) கூற்றுக்குள் அடங்காமல் பரம் பொருளின் பரிபூரணகிருபைபெற்று இன்றும் தம் பர்த்தாக் களுடன் இனிது வாழ்வதாகப் புராணங்களால் தெரியவரு கிறது. உதாரணமாக ஸாவித்ரி ஸத்யவான், அருந்ததி வஸிஷ்டர், அனஸூயை அத்திரி, பிரியாதேவி சூர்யன், ஸதிதேவி கௌசிகர் முதலான தம்பதிகள் இன்னும் பூலோக, விண்பங்களுடன் ப்ரமனது திருவடிமலர்களைப்போற்றி வாழ் வதாகவும் கூறப்படுகின்றது. ஸாவித்ரி, அருந்ததி, அனஸூயை, பிரியாதேவி, ஸதிதேவி முதலான மாதர்கள் குலதர்ம பத்தினிகளாய் விளங்குவதில் தடையென்ன? இதனைப்படிப்போர்க்கு இவர்களில் ஒருவரைப்பற்றியாவது விரிவாய்ச் சொல்லுதல் பொருந்துமென்று ஸாவித்ரியின் உதாரணத்தைமட்டும் கீழெடுத்துச் சொல்லுகிறோம்.

ஸாவித்ரி ஸத்தயவான்

அசுவபதி யென்னுமோர் அரசன் அருந்தவஞ்செய்து பெற்ற ஸாவித்ரி என்கிற புதல்வியை வெகு அன்போடும்பக்ஷத்தோடும் வளர்த்துவரும் நாளில் புதல்விக்குத் தகுந்த வயது வந்த பிற்பாடு அவளது மனத்திற் கினியமண

வாளனைக் கலியாணஞ் செய்விக்க அரசன் மனங்கொண் டனன். வனப்பும் வாலிபமும் பொருந்திய ராஜகுமாரர் பலர் ஸாவித்ரியை மணந்துகொள்ள முயன்றும் பலியாமல் போயிற்று. ஏனெனில் ஸாவித்ரிக்கு அவர்களெவர் மீதும் இஷ்டமில்லை. வீதியில் நல்லாடையற்றுத் தன்னந்தனியே என்னவோ நினைத்துப் போய்க்கொண்டிருந்த வாலிபபருவ முள்ள புருஷனையே தான் மணப்பதாக நிச்சயித்துவிட்டாள். மடந்தைப் பருவத்து அம்மாது சிரோமணி மணந்த அப் புருஷனே ஸத்தியவானவன்.

**அரசனின் மனத்துயர்.**

தன்னைப்போன்ற யோக்கியதையும் அந்தஸ்தும் குபேர சம்பத்தும் இருக்கும் ஒரு ராஜகுமாரனுக்கு நம் புதல்வியை விவாகஞ் செய்துகொடுக்க நாம் நினைத்திருக்கையில் அவளது மனம் வீதிவழிபோன ஒருவன்மீது சென்று விட்டதே யென்று அரசன் மனங்கலங்கினன்; சித்தமுருகினன்; வெந்து வெதும்பினன்; ஐயோ சிவனே யென்பான்; சமீபத் திருப்போரைக் கட்டிக் கண்ணீர் உதிப்பான்; ஸத்யவா னுக்கு ஆயுள் இருபதுவயதுதானென்று ஆதியில் நாரதர் கூறியமொழி அடிக்கடி அவனுக்கு ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருந்தது. வந்தும் என்செய்வது! பாபம்! பெண் ணின் சம்மதம் எப்போது ஒருவன்மீது சென்று விட்டதோ அவள் அவன் ஞாபகத்தைவிட்டு மற்றொருவன்மீது மனஞ் செலுத்துவது அவளது கற்புக்குச் சிறிதேனும் அழகாக மாட்டாது. கணவனது குறிப்பை யறிந்து நடத்தலே பெண்டிர்க்கழகு; கணவனென்று மனதினில் ஸ்மரித்த பிற்பாடு அவனிடத்தை விட்டுமற்றோரிடம் மனம்வைப்பது பாதிவிருத்ய லக்ஷணத்துக்குச் சிறிதேனும் பொருந்தாது.

**பதிவிரதைகளின் லக்ஷணம்.**

ஸாவித்ரிக்கு மனத்தில் தோன்றியதே பிடிவாதமாகி விட்டது; தன் தந்தை எவ்வளவுதான் கூறினும் அதற்கு அவள் அந்த விஷயத்தில்

மட்டும் அணுவளவேனும் இணங்கவில்லை. தான் ராஜ புத்திரியா யிருந்தாலுமென்? தெருவிலோடிய தனிப் புருஷன் மீது மனம் வைத்தாலுமென்? தனதன்பு எந் நிமிஷம் எந்த விடத்தில்போய் லயப்படுகிறதோ அந்நிமிஷமே அவள் அந்த விடத்துக்குரிய நாயகியாய் விடுகிருள். அவ்விடத்தை நினைக்கும் மாத்திரத்தில் அன்பு நிரம்பிப்போகின்றது, அவளுக்கு விவாகமும் நடந் தேறிவிட்டது; தன் பர்த்தாவுக்கு எவ்வெவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமோ அவ்விதத்திற்குக் குறைவொன்றும் அவள் செய்வதில்லை. பதிவிரதைகளின் லக்ஷணம் என்னை யென்னின்,

> பதிவ்ரதா பதிப்பிராணு ஸாநாரீ தர்மபாகினீ
> சுச்ருஷாம் பரிசர்யாஞ்ச கரோத்யவிமனுஸதா."

"தன்னுடைய பர்த்தாவினிடத்தே விரதம் நடத்து பவளாயும், அவனிடத்தே பிராணனுள்ளவளாயும், அவ னுக்கு சுச்ருஷையும் பரிசர்யை (ஏவல்வேலை)யும் மனத் திற் பிரீதியுடன் செய்கின்றவளே புண்யவதி., அவளே தன் பர்த்தா (கணவன்)வுடன் தர்மபாக முள்ளவளாவள்."

இதை இன்னும் விவரித்துக் கூறுவோம். 'பர்த்தாவி னிடத்தே விரதம் நடத்துவது': கணவனைத் தவிர வேருரு வர்மீதும் ஆசைவையாதிருத்தல். 'அவனிடத்தே பிராண னுள்ளவள்': தனது பிராணனை அவனுக்கு ஒப்புவித்து, அவன்வேறு தான்வேறு என்று பாவியாதிருத்தல், இதனு லேயே கணவனுக்குப் பிராணநாயகன் என்ருெரு பெயரு முண்டு. 'சுச்ருஷை'யாவது ஏவுதலில்லாமல் கணவனுடைய மனதையறிந்து, அவனுடைய சௌக்கியத்தையும் சந்தோ ஷத்தையும் உத்தேசித்துத் தானுய்ச்செய்யும் உபசாரங் களாம். "பரிசர்யை" ஏவின காரியத்தைச் செய்தல். 'ப்ரீதி யுடன்': ஏவாமற் செய்யப்பட்ட காரியமாயினும், ஏவுதலின்

மீது செய்யப்பட்ட காரியமாயினும், அதனை மனமுவந்து கணவனைத் திருப்திப்படுத்த வேண்டுமென்னும் மனப்பூர்த்தியான விருப்பத்துடன் செய்யவேண்டும். இல்லையெனின், வேலைக்காரன் சம்பளத்தினிமித்தம்செய்யும் காரியத்திற்கும் மனைவிசெய்யுங் காரியத்திற்கும் வித்தியாஸமில்லாமற் போம். கணவனுடைய சுகமே தனதுசுகம். அவனை சந்தோஷிப்பிப்பதே தனது சந்தோஷமெனக்கொண்டு செய்பவளே மனைவியாவள். கணவனுடைய அதிகாரத்துக்குப் பயப்பட்டுச் செய்பவள் மனைவியாகாள். ஏனெனின், மாதா மாதம் சம்பளம் வாங்கும்வேலையாளனானவன், உணவு, ஆடையாபரணம் முதலிய பற்பல ரூபமாய்ச் சம்பளம் வாங்கியும் சம்பளமில்லாச் சேவகம் என்று நினைக்கும் பெண்டிர்களை விடச் சிரத்தையுடனும் பயத்துடனும் செய்வானென்பது நிச்சயமன்றோ? "புண்யவதி" இவ்வாறு கணவனென்னப்படும் மற்றோர் ஆன்மாவைத் திருப்திப்படுத்திச் சந்தோஷிப்பிக்கும் பாக்கியம் எல்லோருக்குமே கிடைப்பதரிது. உடல் வேறாயினும் உயிர் ஒன்றாகி, இருவரும் ஒருமித்து ஐஹிக (இவ்வுலகத்துச்) சுகங்களை அனுபவித்துக் கடமைகளை விதிப்படி செய்துமுடித்து, ஒருவருக்கொருவர் நற்றுணையாய் நின்று, வாழ்நாளை நல்வழியிற் செலுத்தி ஆனந்தித்துப் பரலோகம் சேர்ந்து பகவானையடையும் பாக்கியம் எல்லோர்க்குமே கிடைக்குமா? அரிது, அரிது முக்காலுமரிது.

"தர்மபாக முள்ளவள்": கணவன் செய்யும் புண்ய கர்மங்களது பயனிற் பாதி மனைவியைச் சேருமென்பது சாஸ்திர சித்தாந்தமாம். அதனாலே அவளுக்குத் தர்மபாகினீ என்று பெயர் வந்தது. மேற்சொல்லியவிதமாக அவள் நடப்பாளாயின் அவள் தர்மபாகினீயே யாவள். அவ்வாறு நடவாதவள் மனைவியுமாகாள், தர்மபாகினீயுமாகாள் இவ்வாறு ஆர்யர்கள் சொல்லியிருப்பதனால் இத்தன்மையான மனைவி வாய்ந்தவன் உலகத்திற் பூஜ்யனெனப்படுவான். புருஷன்

பூஜியதையடைவானுயின், அவனுடைய மனைவிக்குக் குறை வென்னை? அவளுடைய ஆசைகளும் விருப்பங்களும் அவன் மூலமாய் நிறைவேறுமென்பது உண்மையாம். அஃதன்றி, பந்து மித்ராதியர்க்கு இவர்களிடத்தில் விசேஷ கௌரவமு முண்டாகும். இந்த நன்குமதிப்புண்டாவதற்குக் காரணம் ஸ்திரீயானவள் தன்னுடைய ஸ்வதர்மத்தை நெறிவழுவாது முரண்பாடின்றி ஆசரித்தலேயாம்; வேறன்று.

தீர்க்க ஸுமங்கலீ பவ

ஸாவித்ரிக்கு விவாகமாய் 12 மாதகாலங்கழிந்து மிகுந் திருப்பது ஒருதினந்தான்; சத்தியவான் ஆசிரமத்தில் வஸித்துக்கொண்டிருக்கையில் அவனுடன் கூடவேயிருந்து சகல சுச்ரூஷை களை ஸாவித்ரி செய்துவருவதனுலே அவனை விட்டு அச்சமயம் ஓர் அரைக்கணமேனும் பிரிய அவளுக் கிஷ்டமில்லை. தன் மாமி மாமன்மார்களிடம் விடைபெற்றுக்கொண்டு கணவன் சொற்படி நடப்பதே தனது குலதர்மமென்று மதித்து ஸமித்து நர்ப்பை முதலி யன கொண்டுவரும்போதும்தான் கூடவே சென்றுள். அவள் மனதில் பயம் என்னவென்றுல் நாரதர் குறிப்பிட்ட கால வரை முடிந்துவிடும் பக்ஷத்தில் யமன்வந்து ஸத்தியவானைப் பாசக்கயிற்றினுற் கட்டிக்கொண்டு போய்விடுவான். அப் போது தனக்கு வைதவ்யம் வந்துவிடுமென்று பயந்து சித்த முருகித் தனது அன்பிற்கும் பிரியத்துக்கும் உரியபர்த்தா வைப் பிரியாமலே நின்றுள். தீர்க்க சுமங்கலித்வம் தனக் கிருக்கவேண்டுமென்பதே அவளது கருத்து. கணவனிடத் தில் மனம் ஒருங்கே அமைந்துவிடுமிடத்து, அவன் அங் கேயோ அங்கேதான் அவளுமிருப்பாள் என்பதற்கு ஐய முண்டோ? ஆகவே கூற்றுவன்வந்து கணவனைக் கொண்டு போகையில் தன்னையுங்கூடச் சேர்த்துக்கொண்டு போகட்டு மென்று கருதினுள் அவள்.

காலனின் காரியம் பலிக்கவில்லை

கானகத்தில் தர்ப்பை ஸமித்துக்களைப் பொறுக்கிச் சேர்த்து ஒருமூட்டையாய்க் கட்டிக்கொண்டு ஆங்காங்கு அலைந்து திரிந்த சிரமத்தினால் மெய்சோர்ந்து சத்தியவான் தன்தர்மபத்தினியின் மடிமீது தலைவைத்து நித்திரை போய்க்கொண்டிருந்தான்; அச்சமயம் அவனது 20-வது வயது நிரம்பியது. முனிபுங்கவர் கூறியது உண்மையாய்விடுமேயென்ற மனக்கிலேசத்துடன் ஈசுவரத்தியானம் ஒருபுறமும் மற்றோர் புறம் தனதாசைக்கிசைந்த அருங் கணவனின் திவ்ய ஸ்வரூபத்தைக் கண்கொட்டாது பார்த்தவண்ணமாயும் இருந்தனள். அப்போது சற்றுதூரத்தில் கருமேகம் கரைபுரண்டு சென்றாற் போல் கருத்த மேனியோடு ஒருவன் சமீபிப்பதைக் கண்டு உடல் பதைத்துக் கண்ணீர்சொரிந்து கணவனை யொருகரத்தால் அணைந்து மற்றொரு கரத்தால் கடுகிவராதேயென்று கையமர்த்தி ஸாவித்ரி அலறவும், வந்த கருத்த உருவம் தான்தான் காலன் எனவும், ஸத்தியவானுக்கு ஆயுள் முடிந்துவிட்டதனால் அவனைக் கொண்டுபோகவேதான் வந்திருப்பதாகவும், அவனை விட்டுவிடும்படிக்கும் சொன்னான். தன் கணவனை விட்டுத் தனக்கு வேறோர் விஷயத்தில் கவனங் கிடையாதென்றும், தனக்கு அவர் தலைவராதலின் அவருடன் கூடவே தானிருப்பது தன் கடமையெனவும் தைரியமாய்ச் சொல்லித் தன் முழுமனதையும் அவன்மீது லயப்படுத்திவிட்டாள். நின்று நின்று பார்த்தும் காலநேமியின் காரியம் பலிதமாகவில்லை.

ஸாவித்ரீயின் மனவுறுதி

பிறகு அவன் கோபமிகுந்தவனாய் உதடுகள் துடிக்கக் கண்கள் சிவக்க ஸாவித்ரியை நோக்கி பெண்ணே, நீ பதிவிரதை; அதனாலே நான் இவ்வளவுதூரம் தாமதித்தேன்; என்னை தடைசெய்யாதே நீ தடைசெய்வாயாயின்

வேறு கடூரமான வகைகளினால் உன் கணவனுயிரைக் கொண்டுபோய்விடுவேன்; சிருஷ்டிகர்த்தரின் ஆயுள்காலத்துக்கு ஹானி நேரிடலாகாது" என்று சொல்லவும், அவள் அவனது வார்த்தைக்குச் செவியேகொடாது மானஸீகமாய்த் தன் சித்தமுழுவதையும் பர்த்தாவின்மீது செலுத்திவிட்டாள். பாசக்கயிறுபோட்டுப் பர்த்தாவைக் கொண்டு போகையிலுங் கூடவே மானஸீகத்தினாற் சென்றாள் சாவித்ரி; தன் பர்த்தாவின்மீது பூரணமான பக்தி வைத்திருந்தாளாதலின் அவன் மரித்த பிறகு, தான் உயிரோடிருப்பது ஸஹிக்கக் கூடாத விஷயமென்று மதித்தாள். நாயகன் நாரூபத்தில் இருந்தாலன்றோ நாயகியும் அவனுடனிருந்து வாழ்வதற்கு? நாயகனில்லாத நாயகி யிருந்தென்ன, யிறந்தென்னவென்று மதித்தாளவள். இவளது மனோதிடத்தையும் கற்புநிலையையுங் கண்டு சந்தோஷித்து யமனிரங்கி அவளுக்கு வேண்டியவரனைக் கேளென்றுரைத்தனன். "அவளது மாமனார் அவரது பௌத்ரனை வைத்துக் கொஞ்சிக் குலாவ வரன் அளிக்க வேண்டு"மென்று பிரார்த்திக்கக் காலன் "அங்ஙனமே யாகுக" என்று சொல்லிவிட்டான். தக்ஷணமே ஸத்தியவான் நித்திரை தெளிந்தெழுந்தவன்போல் எழுந்துவிட்டான். பிறகு ஸாவித்திரியும், ஸத்யவானும் சிரஞ்சீவிகளாய் வாழ்ந்து வருகிறார்களென்றும் இவர்களைப்போலவே சிரஞ்சீவிகளாய் மற்றைப் பெண்களும் தத்தம் பர்த்தாக்களுடன் பாமுனடிபோற்றிக், கும்பகோண க்ஷேத்திரத்தில் வாஸஞ்செய்கிறார்களென்றும் புராண கதைகளினால் தெரியவருகிறது.

உத்கிருஷ்டமான தீர்த்தம்

இந்த கன்னியாதீர்த்தமென்னும் மஹாமககுளத்தில் மாதர்கள் மட்டுமல்ல, சித்தனேயா ஆடவர்களும் சுகிர்தமடைய வேண்டுமென்றும், கொண்டாடுதற்குறிய சைககண்டதெய்வம் கனமிகுந்திருக்கும் இடம் இந்த கும்பகோண

க்ஷேத்திரமேயென்றும், பலர் பூஜைபண்ணிப் புகழ்கின்றார்கள். இந்த ஜன்மத்தில் அவதியடைந்தாலும் மறு ஜன்மத்திலாவது ஸாபல்யம் பெறுவதற்கு இன்றியமையாத ஸ்தலமாகுமிது. தேவராதி சகல புண்யர்களுக்கும் நரகராதி சகல பாப கர்மிகளுக்கும் அவரவர்களுக் கிருக்கும் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொடுக்கும் மான்மியம் பொருந்திய ஸ்தலமும் இதுவே. புண்யபுருஷர்கள் ஜீவோத்கிருஷ்டமான இந்த ஸ்தலத்தில் இன்றும் வஸிப்பதாகவே ஐதிகம். கன்யா தீர்த்தத்துக்கு இணையான தீர்த்தம் கிடைப்பதரிதென்பதே பலரது சித்தாந்தம். ஒருவிசை கன்யா தீர்த்தத்தைப் பிரதக்ஷிணம் பண்ணினால் நூறுவிசை பூமண்டலப் பிரதக்ஷிணம் பண்ணின பலப் பிராப்தியாவதாகப் புராணப் பிரஸித்தம். தீர்த்தத்தை நமஸ்கரித்தால் தேவர்களை நமஸ்கரித்த பலன்; அதை ஸ்பரிசிக்கும் மாத்திரத்தில் கைலாஸபதியின் திருவடிகளை ஸ்பரிசித்துச் சமீபத்தினிற்கும் பெரும் புகழ் உண்டாகிறது; தீர்த்தபானம் பண்ணுமிடத்து அது பரியந்தம் அவனது பூதவுடலில் ஓங்கியுள்ள சகல பாபங்களும் ஒழிந்துவிடுவதென்பது மேலோரது தர்மம்.

**தீர்த்த பலன்கள்**

கங்காநதி தீரத்தில் வஸித்துக்கொண்டு திரிகால நியமப்படி தேவாராராதனை செய்து வந்தால் எவ்வளவுபலன் சித்திக்குமோ அவ்வளவும் இந்த மாகமாஸத்தில் இந்த மாகஸரோவரத்தில் ஸ்நானம் பண்ணுவதினாலும், ஆசார உபசாரத்தோடு கும்பேசுவரரைச் தரிசிப்பதனாலும் உண்டாவதாகப் பெரியோர் நிச்சயித்திருக்கிறார்கள். புத்திரசந்தான மில்லாதவர் தீர்த்தயாத்திரை போவதும் பக்தஜனங்களுக்கு வன்போஜனம் போடுவதும் கோயில்களுக்குச் சென்று அபிஷேக அர்ச்சனாதிகள் செய்து பிராகாரப் பிரதக்ஷிணங்கள் செய்வதும், புண்ணிய நதிக்கரைகளுக்குச் சென்று நாகப்பிரதிஷ்டை செய்வதும் வழக்கம்; ஆயினும்

அவர்கள் 5 தினம் விதிப்பிரகாரணங்களோடு இந்த ஸரோவரத்தில் நீராடி ஈசுவரனைத் துதித்தால் அவர்களுக்குப் புத்திரோற்பத்தியாவது உண்மையாம். குளத்தில் நீராடும் பக்தர்கள் சங்கற்பமந்திர முச்சரித்து மும்முழுக்காடிய பின்னர் மூன்று முறை அர்க்கிய பாத்திரங் கொடுத்துப் பலதானங்கள் செய்வது உத்தமம். இம்மாதிரி ஐந்து தடவை செய்யவேண்டியதென முதியோர் குறிப்பிட்டிருக்கின்றனர். பிரதிவருஷமுந் தவறாமல் மாகமாஸத்தில் அந்த மஹாமககுளத்தில் ஸ்நானம் பண்ணிவருவோர்க்குக் கடைசியாய் சாயுஜ்யபதவி கிட்டுவதாகத் தெரிகிறது. கன்யாதீர்த்தத்திலுள்ள நான்கு திக்கு தீர்த்த கட்டடங்களிலும் பக்தி சிரத்தை விதானங்களோடு ஸ்நானமாடுவோரால் 108 தலைமுறைப்பிதுர்க்கள் நற்கதி யடையாவார். மஹாமகதினத்தில் சிவதரிசனம், விஷ்ணுதரிசனம் ஆகிய இவ்விரண்டும் செய்வது உசிதமாகும் அல்லது அத்தினத்திற்கு முன்தினத்திலாவது தேவர்களை தரிசனஞ் செய்து உபவாஸமிருந்து ஹிரண்ய சிரார்த்தாதிகளை பிதுர்க்களின் சற்கதிக்காக வேண்டிச் செய்து, அதன்பின்னர்க் கூடியிருக்கும் பரமபக்த சிகாமணிகளுக்கு வயிறுற அறுசுவையோடு கூடின. பஞ்சபக்ஷிய பரமான்னங்களோடு சந்தர்ப்பணையுஞ் செய்விக்குமிடத்து இகத்தில் சுகமும், பரத்தில் பதவியும் பலியாமற் போகாதென்பது திண்ணம். இந்த ஸரோவரத்தில் ஸ்நானமாடி முத்தியடைந்த சிலரைக் குறித்து அடுத்த அத்தியாயத்திற் பேசுவோம்.

## அத்தியாயம்—III

# மஹாமக மகிமை

### 'க்ருமிகண்டத்வ'த்தினால் கஷ்டமடைந்த கணிகையின் கதை.

*வேங்கடார்யரின் புதல்வன்.*

பூர்வம் சௌராஷ்டிர தேசத்தின்கண் வேங்கடார்யர் என்கிற பிராமணோத்தமர் இருந்தார். அவர் சௌனகுலத்தில் பிறந்த சற்புருஷர். அவருக்குப் புதல்வன் ஒருவனுண்டு; அவனுக்கு சத்தியசீலன் என்று பெயர். அப் புதல்வனை வேங்கடார்யர் வெகு சுசீலமாய்க் கவனத்துடன் போஷித்துவந்தார். ஐந்தாவது வயதில் அக்ஷராப்பியாசம் செய்வித்து, ஏழாவது வயதில் உபநயநகர்மத்தை முடித்துப் பதினைந்தாவது வயதில் விவாகத்தையும் நிறைவேற்றிவைத்தார். தகுந்த பண்டிதோத்தமர்களைக்கொண்டு அவ்வருப் பெரும்புதல்வனுக்கு வேதசாஸ்திர புராணாதி சற்கிரந்தங்களைச் செவ்வையாய் ஊட்டினார். இதன்றி வேதாந்த விசாரணைகளிலும் பழக்குவித்தார். யக்ஞாதி கர்மங்களைப் பயிலுவித்துத் தேவர்களுக்கு மகிழ்வூட்டும் மார்க்கத்தைக் காண்பித்தார்.

*புவியைத் துறந்த பெற்றோர்*

சத்தியசீலன் பண்டிதோத்தமர்களுட் சிறந்தவனெனப் பெயரெடுத்து தனது பெற்றோருடனும் தனதின்னுயிர்த் துணைவியாகிய மனைவியிடனும் காலங்கடத்தி வருநாளில் வேங்கிடார்யர் பூவுலகினின்று பிரிந்து அய்யனடிபோய்ச் சேர்ந்தார். அக்கால வழக்

கத்தின் பிரகாரமே வைதவ்யமடைந்த சத்திய சீலனின் தாயானவள் தம் பர்த்தா பாரிலிருந்து பிரிந்தபின்பு தானிருப்பது உசிதமல்ல வென்றும் சாஸ்திர சம்மதமாகாதென்றும் மதித்துப் புருஷனுடனேயே உடன்கட்டை யேறினாள். உடன்கட்டையேறும் பெண்டிர்கள் அருந்ததிக்கு ஒப்பாவா ரென்று கருதப்படுவதனாலே புருஷனிருக்கும் நிலைமையிலேயே தானுமிருக்கவேண்டுமென்பது அவளது சித்தாந்தமாயிருந்தது. கணவனுக்கு அடுக்கிவைத்திருந்த சிதையிலேயே தானும் படுத்துப் பரலோகஞ் சேர்ந்தாள். சத்தியசீலன் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகள் அனைத்தையும் நெறிவழுவாது முறண்பாடின்றிச் செய்து, புதல்வனை தன்னைப் பெற்ற அப்பெரியோர்க்குச் சற்கதி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

சத்திய சீலனின் சற்குணம்.

இவ்வித மிருக்குநாளில் சத்தியசீலனின் பத்தினி மங்கைப்பருவம் நீங்கி மடந்தைப்பருவம் அடைந்தாள். உடனே அவளது பெற்றோர் நல்ல வேளையில் நிஷேதபிரஸ்த முகூர்த்தத்தையும் முடித்துத் தம் புத்திரியைப் புக்ககம் கொண்டுவந்து சேர்த்தனர்; இல்லாள் கிரகம் வந்துசேர்ந்ததும் சத்திய சீலன் அந்தணனுக்குரிய ஔபாஸன அக்கினிஹோத்திராதிகளை ஆரம்பித்தான். தான் கற்றுக்கொண்ட பல கலைகளையும் தன்னை அண்டினார்க்கு உபதேசித்தான். பசியென்று வந்த பிராம்மணோத்தமர்களை வந்தவழியே போகவிடமாட்டான். அவர்களுக்குத் தன்னால் கூடுமான வரையில் அறுசுவையோடு அன்னம் ஈந்து தக்ஷிணை கொடுத்து உபசரிப்பான்; சுருக்கிச் சொல்லின், 'தேஹி' யென்று கேட்டவர்க்கு 'நாஸ்தி' என்று பதிலுரைக்கும் வழக்கம் அவனிடத்திலில்லை. சிராத்த தினங்களில் பல்கலைபயின்ற பண்டிதர்களை யழைத்து அன்னம் போட்டு உபசாரணை செய்வான். வெளியூரிலிருந்து வந்த

யாத்திரிகர்களை வெகு மேன்மை கொண்டு அழைப்பான். அவர் வாயினின்றுவரும் பக்தியோடுகூடின கீர்த்தனங்களைப் பரிவுடன் கேட்பான். இவ்வளவு சற்குணம் பொருந்திக் கணவன் இருக்க, மனைவியோ துர்குணம் நிரம்பிய தூர்த்தையாயிருந்தனள்.

சத்திய சீலனின் மனைவி

'கடுகடு'த்த முகமும் 'சிடுசிடு'த்த நடையும் 'வெடுவெடு'த்த தன்மையும் பேராபரணமாய்க் கொண்டவள் அவள்; தந்நலங்கருதும் தன்மயவள்; வாது மிகுந்த வன்மைகொண்டவள்; வினையும் சூதும் ஒருங்கமையப் பெற்றவள். அவள் எப்போதும் ஏதேனும் முணுமுணுத்துக்கொண்டேயிருப்பாள்; பர்த்தாவென்று தன் கணவனை மதியாள். ஒன்றுக்கில்லாவிடில் மற்றொன்றுக்கு அவன்மீது குற்றங் கண்டுபிடிப்பதே அவள் வழக்கம். கடூரமொழிகளை உரையாடுவதிலே அவளுக்குக் கவனம் அதிகம், ஸ்திரீகளுக்கு உரியநாணம், மடம், அச்சம் பயிர்ப்பு என்னும் உத்தமக்குணங்கள் நான்கும் அவளிடமில்லை. நல்லவார்த்தை அவள் வாயில் வருவதில்லை; வருவன வனைத்தும் வசவுகளேயாம். பாபகர்மங்களிலேயே அவள் எப்போதும் மனஞ்செலுத்துபவளாயிருந்தாள். ஸகஜமாய்ப் பெற்றோரைப் போலிருப்பரேயன்றோ புதல்விகளும். சாகலன் என்னுங்கொடியப் பிராமணனின் புதல்வியானமையின், அவனது சற்குணங்களைத் தவிர்த்துத் துர்க்குணமனைத்தையுமே இவள் குடிகொண்டாள். இந்த சாகலன் வேதசாஸ்திர பண்டிதனாயிருந்தபோதிலும் அவைகளிற் பொதிந்துள்ள நல்ல விஷயங்களைக் கிரகிக்கவே மாட்டான்; அவனது மனமானது கொடுஞ்செயலையே நாடும்; அப்பழக்கமே அவனது புதல்விக்கும் வந்து விட்டதுபோலும். சாகலனும் அவனது மனைவியும் செய்துவந்த மகாதோஷங்களினால் அவர்களிருந்த விடுதி தீப்பிடித்துப் பஸ்

மீகரமாயிற்று. ஊரார் அனைவரும் சாகலனைத் திட்டிக் கொட்டித் திரஸ்கரித்தார்கள். இனி ஊரினுள் வசிப்பது உத்தமமல்லவென்று கண்ட சாகலன் தன் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு மற்றோரிடம் போகப் புறப்பட்டான். அப்போது சகுனம் சரியாயிருக்க வில்லை; தீங்குறிகள் தென்பட்டன. ஆந்தையின் கோட்டாரமதிகரித்திருந்தது, எனினும் லக்ஷியம்பண்ணுமல் இவன் ஓர் அடவிமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் மின்னல் பளிச் பளிச் என்று கண்களைப் பறிக்குமாறு மின்னிக் கொண்டிருந்தது; மழை தாரைதாரையாய்ப் பொழிந்து கொண்டு மிருந்தது. இடிமுழக்கமோ பெரு முழக்கம்; புதல்வியோடு தம்பதிகள் பிறந்தவிடத்தை விட்டுவிட்டு வெளிப்போய்க் கொண்டிருந்த அந்தவேளையில் அவர்கள் செய்த பாபகர்மங்களின் பலனுக இடிவிழுந்து தம்பதிகள் பரலோகஞ் சேர்ந்தனர்; குழந்தைமட்டும் அநாதையாகி அவ் அடவியிற் கிடந்தது. வழிப்போக்கர் சிலர் அச் சிசுவின்மீது கருணையுடன் அதை ஸௌராஷ்டிர தேயத்தின் கணுள்ள காம்பில்யபட்டணத்தில் வசிக்கும் ஓர் அந்தணன் கிருகத்திற் கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்தணன் அந்தக் குழந்தையின் உறுப்பிலக்கணங்களைச் செவ்வையாய் ஆராய்ந்து அதற்கும் தனக்கும் ஏதோ கொஞ்சம் 'ருணம்' இருப்பதனுலேயே அது தன்னிடம் வருவதற்கு இடமிருந்ததென மதித்து, அப்பெண் குழவியைத்தன சொந்தப் புதல்வியை யொப்பப் பாதுகாத்து வந்தான். பிராமணன் கிருகத்தில் அன்னவஸ்திரத்துக்குக் குறைவொன்று மில்லை: மேலும் அவனுக்கு வேறு குழந்தையுமில்லை; ஆகவே, வந்து சேர்ந்த பெண்மணி அந்தப் பிராமணனுக்கு அரும் பெருஞ் செல்வியாய் வளர்ந்து வந்தாள். அடக்குவாரின்றி அக் குழந்தை இஷ்டம்போல் வளர்ந்து வந்ததனுலே நற்பழக்கம் படியாமல் துர்ப்பழக்கமே படிய ஆஸ்பதமாயிற்று.

இவளே வயது வந்தபின்னர் ஸத்தியசீலனின் மனைவியாய் வாழ்க்கைப்பட்டனள்.

இவளது ஸாகஸம்.

சிறுவயதில கஷ்டம் அனுபவியாமல் சுகத்திலேயே யிருந்து காலந்தள்ளி வந்த இப் பெண் சத்தியசீலனின் சுசீலத்துக்கு உரியவாறு காலந் தள்ளுவள் என்று வளர்த்த பிராமணன் மதித்திருந்த நம்பிக்கைக்கு முழுவதும் மாறாகவே இவள் ஒவ்வொன்றையும் செய்து வந்தனள். புருஷனும் நம்மைப் போல் மானிடப் பிரகிருதிதானே. அவனுக்கிருக்கும் சுதந்தரம் ஸ்திரீகளுக்கேன் இருக்கலாகாது என்று வாதமாடுவள். பர்த்தாவுக்கிருக்கும் தைரிய வீரிய மெல்லாம் தனக்கு முண்டென்று வீரியம் பேசுவள்; சம்பாஷிப்பதில் தனக்கு நிகர் எவருமே யில்லையென்று தனக்குத் தானே புகழ்ந்து கொள்வள். யௌவனபருவத்தில் பெண்ணானவள், ஆணுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்பது அவளிடத்திற் பலியாது. பார்த்தாவுக்குப் பணிவிடைசெய்து புகழுடைவோமே யென்ற மனோநிச்சயம் அவளிடமில்லை. பதியே கதியெனப் பூவுலகமங்கையர் பரிந்து பேசுவதைப் பரிகசிப்பாளிவள். சத்தியசீலன் தன் வெளித்தொழில்களை முடித்து வீடுவந்து சேர்ந்தகாலத்து, மனைவி வெகு உல்லாசமாய் வீற்று அவனுக்கு ஏவலிடுவாள்! அவன் சிறிது கடுகடுப்புடனிருப்பனாயின் அச்சமயம் பலவித காஜாலஞ் செய்வாள்; வயிற்றுப் பொருமல், தலைவலி, கால்வலி யென்று பல்விதமாய்ச் சொல்லி யழுவாள்; தலைவிரிகோலமாய்த் தரையிற் படுத்து 'இதோயிறப்பேன், காலன் என் முன் வந்து தோற்றுகின்றான்' என்று கூறிப் பர்த்தாவைப்பயமுறச் செய்வாள். சத்தியசீலன் ஏதேனும் இரண்டொருவார்த்தை அதிகாரப்பாங்குடன் செல்லிவிடும்பக்ஷத்தில் அவள் சீறிச் சினந்து அவனது சித்தங்கலங்கச் சீறவடிப்பாள். வீட்டினின்று வெளியேறினாற் போதுமென்று

நினைப்பானவன்; உடனே வாயிற்கதவை தாழ்ப்பாலிட்டு வாசலைப் பொருந்தியு தைலாதிகள் தேய்த்து ஸ்நானமாடி நல்லுடையுடுத்து நற்சாந்திட்டு சந்தனம் பூசி, புஷ்பம் அணிந்து, ஆபரணாதிகளால் அலங்காரஞ் செய்து கொண்டு, பின்புறவாயிலால் தன் மனத்திற்கினிய நாயகன் வர, அவனுடன் வீற்றுச் சிரித்துக் கொஞ்சிக்குலாவிச் சுகமாயிருப்பள். கணவன் வந்து அவளது சரீர ஸ்திதியைக் குறித்து விசாரிக்கையில் "அவள் ஐயோ, நான் ஒரு நடைபிணம் போலிருக்கிறேனே; நாளுக்குநாள் எனக்கு வியாதி முற்றி வருகிறதே; அணுவளவாவது ஆகாரஞ் செல்லவில்லையே; உம்மைத்தேடி வாழ்க்கைப்பட்டதன் பலன் அனுபவிக்கிறேன் இப்போது" என்று வாய்கூசாமல் பர்த்தாவின் மனம் பரிதவித்துக்குமாறு பதில் சொல்லுவாள். இருந்தாற்போலிருந்து கதறுவாள்; தன்மனத்திற் பழைய நினைவு வந்தது போல மலமலவென்று தன் விழிமுளரிளினிறும் வெண்முத்துதிர்ப்பாள். மார்பில் அடித்துக் கொண்டு மன்றாட்டஞ் செய்வாள்; சத்தியசீலன் இதுவும் தன் கர்மமென்று கருதி வீட்டிலிருப்பதினும் வெளியிற்போய்விடுவதே நலமென்று புறப்பட்டு விடுவான்: கணவன் வெளியேறவேண்டுவது தான், பின் வழக்கம்போல் இப்பெண் ஆரம்பித்துவிடுவாள். புருஷனறியாமல் வீட்டுப்பண்டங்களை விற்றுப் பணமுடிசேர்ப்பாள். குஞ்சு குழந்தைகளைக் கண்டால் அவளுக்கு ஒருவிதமான வெறுப்பு வந்துவிடும், பிடித்து அடித்து அவர்களை ஓலமிடச்செய்து வேடிக்கை பார்ப்பாள். அப்பப்பா அவள் செய்த பதிதூஷணை இன்னும் விரிக்கிற்பெருகும்.

இத்தன்மைய காட்சிகளையும் ஸாகஸ விசேஷங்களையும கண்ணுறும் போதே சத்தியசீலனுக்குத்தன்னை யறியாமல் துக்கம் வந்து அதை மாற்றிக் கொள்ளத் தன்னாலான மட்டும்முயன்று மனஸைத் தேற்றிக்கொள்வான்; கன்

ஜன்மாந்தர பாபம்

மனைவி மதிகெட்டுச் செய்யும் பெரும்பிழைகள் அனைத்தையும் சாந்தமும் க்ஷமையும் உருவெடுத்த ஸத்திய சீலன் மனமுவந்து பொறுத்துக் கொள்வான்; சிற் சில சமயங்களில் மனைவியின் செயல் தன் பொறுமைக்கடலுக்கும் மிஞ்சிவிடுமானால் ஒன்றும் பேசாமல் வெளியேறி விடுவான்; தனியாய் ஓரிடத்தில் உட்கார்ந்து தன்மனக் குறைவை ஒரு கல்லுருவிடத்தேனும் புல்லுருவிடத்தேனும் சொல்லி யாற்றிக்கொள்வான். ஓரோர் சமயத்தில் தான் மற்றோர் கன்னிகையை மணஞ்செய்து கொள்ளலாமென்று சிந்திப்பான்; அவள் குணவதியல்லாது கொடியவளாயின் என்செய்வதென்று மனங் கலங்குவான்; பூர்வத்தில் தான் செய்த பாபகர்மமே பெண்ணுருவாய்த் தன்னிடம் வந்து வந்து வாட்டுவதென்று வெதும்புவான். இவ்விதமாக அந்த ஸ்திரீயோடு ஸத்தியசீலன் அறுபது வருஷகாலம் கழித்தான். வார்த்திகம் ஒருபக்கம், மனக் கலக்கம் ஒருபக்கம்; இல்லறத் துன்பம் ஒருபக்கம்; இல்லாள் தன் மனம்போல் இராதது மற்றொருபக்கம்; மனக்கவலை பின்னுமோர் புறம்—ஆக ஸத்தியசீலன் மனம்புழுங்கி நாளுக்கு நாள் ஒடுங்கிச் சரீரத்தில் வலிமை குன்றிவிடக் கடைசியாய்க் கண் குருடாயுமாய் விட்டான். தேள் கொட்டியதென்று மருந்து தேடப்போன விடத்தில் பாம்புகடித்த பான்மைபோல் ஏதோ வாழ்நாளைக்கழித்து விடலாமென்று நினைத்துக்கொண்டிருந்த சத்திய சீலனுக்கு முன்னிலும் பதின்மடங்கு அதிகமாய்விட்டது துன்பம். கண் குருடாகி இவன் தனியே வீட்டின் ஓர் மூலையில் வீற்றிருந்து தனது ஜபதபாதிகளைக் கவனித்திருக்குங் காலத்தும் ஓயாமல் அவனது மனைவி திட்டிக்கொண்டேயிருப்பாள். ஐயோ, ஜகதீசா, இந்த பாபபூமியிலிருந்து என்னை அப்புறப்படுத்தலாகாதா? இந்தப்பாபியின் வாயகப்பட்டு வருந்துகின்றேனே, என்று தானக்குத்தானே புலம்புவான். மூன்று

வருஷகாலம் கழிந்தது; நாளுக்குநாள் சத்திய சீலனுக்கும் துன்பம் மேலிட்டது; சரியானபடி சரீர போஷணையில்லாததினாலே பித்தபாண்டு ரோகம்போன்ற பலவித வியாதிகளினால் அவன் பீடுண்டு பின்பு பரமபதமடைந்தான். யமகிங்கரர்கள் அவனை நரகத்துக்கு அழைத்துப்போய்விட்டார்கள். ஜீவன் ஆங்குபதினாயிரம் வருஷமிருந்தது.

பாபபுண்யங்களுக்குத் தகுந்தகதி

துஷ்டையான மனைவியின் ஸம்சர்க்கத்தினாலே சத்திய சீலனுக்கு இவ்வளவு கஷ்டமுண்டாயிற்று. புருஷன் எவ்வளவுதான் சுசீலனாயினும் கல்மஷமற்ற கண்யனாயினும் மனைவி சரியாயில்லாவிடின் இவனது சுசீலத்துவமும் கண்யமும் வெயிலில் வைத்த விளக்குப்போலாகிவிடும். ஆதலின் சத்திய சீலனுக்கு ஜன்மாந்திரபாபத்தினால் தனக்குப் பத்தினியாய் அமைந்தவளாலேயே செப்பவொண்ணாத் துன்பம் நேரிட்டது. எனினும், அவன் வெங்கிடார்யருக்குப் புத்திரனாயுதித்து வேதசாஸ்திரப்பிரவீணராய் அமர்ந்து தன் கிருத்தியங்கள் எல்லாவற்றையும் தன் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாத வழியிற் செய்துவந்ததனாலே மறுபிறப்பில் காதி (Gadhi) ராஜாவுக்குப் புதல்வனாய்ப் பிறந்தான். தபோநிதியான வசிஷ்டராலும் அவனுக்குப் பிரமரிஷிபட்டம் கிடைத்துவிட்டது. இது நிற்க. மனைவியின் கதி என்னவாயிற்றென்று பார்ப்போம். சத்தியசீலன் உயிர் துறந்த சிலதினங்களுக்கெல்லாம் அவனது ஒரேபுத்திரனும் பரகதியடைந்தனன். மனைவி முன்போல தன்மனம்போனபடி நடக்க, வைதவ்யம் குறுக்காய் வந்து நேரிடினும், அதனையொருபொருட்டாய்க் கருதாமல் துர்க்கிருத்தியங்களிலேயே கவனஞ்செலுத்திவந்தாள்; ஊர்ஜனங்கள் அவளைத் தூற்றியும் வாய்க்குவந்தபடியெல்லாம் பேசியும் வந்ததோடு இவளைக் கண்டால் காரியுமிழ்வதே சரியென்றுங் கருதிவந்தனர். ஜனங்களின் நிந்தனைக்கு உட்பட்டு ரோகிஷ்டையாய்ப் பாய்ப்

படுக்கையில் இவள் படுத்திருக்கையில் ஓர் அரவந்தீண்டி விட்டது; மறலி (யமன்)யே அரவரூபமாய் இவளது படுக்கையண்டை வந்து காத்திருந்து, நள்ளிரவிற் பிடுங்கிப் போயினனேவென்றும் பலர் எண்ணினர். இவ்விதமாக இந்த சத்தியசீலனின் குடும்பமே பவஸாகரத்தில் மூழ்கி நிலைகுலைந்து போயிற்று. இவையனைத்தும் பூர்வாந்தர பாப புண்யங்களுக்கு உரிய பலன்களே யன்றோ?

வினையே வியாதி உருவாய் வந்தது

நல்மரணம் அல்லாமல் துர்மரணமடைந்த சத்தியசீலனின் மனைவி தான் செய்த அக்கிரமங்களுக் கெல்லாம் போதியவாறு நரகத்தில் யமகிங்கரரால் வாட்டப்பெறறுத் திரும்பவும் பிரமன் ஆணையால் புவியில் வேறு ஜன்மமெடுத்தனள். முன்ஜன்மத்தில் இவள் பதித்துரோகஞ் செய்து பதிதூஷணையே பிரதானமாய்க்கொண்டு, பதியினது துக்கத்துக்கும் அசூயைக்கும் பாத்திரமாயிருந்தும் பிராம்மணனுக்கு வாழ்க்கைப்பட்ட தன் ஒருகாரணத்தைமட்டும் ஒட்டி இவளுக்குண்டான மறுஜன்மத்தில் பெண் ஜன்மமே கிட்டியது. கோதாவரி தீர்த்தத்திலுள்ள பிரமேசுவரர் கோவிலில் தொண்டுசெய்யும் தேவரடியாளாய்க் காலங் கடத்திவந்த ஸுப்பிரபா வென்னும் வேசியின் வயிற்றிற் பிறந்தனள். புருஷன் இறந்தபின்னர்க் கைம்பெண்ணாய் அவள் இருந்தகாலத்துத் தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கிருத்தியங்களைச் செவ்வையாய்ச் செய்யாமலும் சிரார்த்தங்களை விட்டுவிட்டும் இருந்ததே அவள் பிந்தியஜன்மத்தில் வேசியின் வயிற்றிற் பிறக்கவேண்டியதற்குக் காரணமாயிற்று. தாஸிப் பெண்ணாய்ப் பிறந்துவளர்ந்து மங்கைகடந்த மடந்தைப் பருவத்தில் பற்பல துர்க்கிருத்தியங்களுக்கு இடங் கொடுத்தனளாதலின் க்ருமி கண்டத்வம் என்கிற மூத்திர க்ருச்ரவியாதி அவளைப் பிடித்துக்கொண்டது. முன் ஜன்மத்தில் கணவன் ஸமீபத்தில் வரும்போது இனிய மூத்

துடன் அவனை உள்ளழைத்து உபசரிப்பதை விட்டு கால் வலி, தலைவலி என்றும் பொய்யும் புனைசுருட்டுமாய்ச் சொல்லி அவனுக்குத் துயரமுண்டுபண்ணியதன் பலனே இவள் இப்போதெடுத்த ஜன்மத்தில் விபாதியின் வாய்ச் சிக்குண்டதற்கு இடங்கொடுத்ததுபோலும். இவள் சமீபம் சென்றாலோ துர்நாற்றம் வீசும்; தானாகவே ஒருகாரியம் செய்து கொள்ளுதற் கியலாது; ஒவ்வொருமிசத்துக்கும் ஒவ்வொருவருடைய உதவியை நாடவேண்டியிருந்தது.

கோதாவரி யாத்திரிகர்

இவளைப்பார்த்தோர் அனைவரும் முகச்சுளிக்கத்துடன் போகாதிரார்; இவ்வளவு அகோரரூபியையும், ரோகிஷ்டிப்பயும் பூமியில் பிரமன் சிருஷ்டிப்பானேன் என்பர் பலர்; இவளைப் பார்த்தமாத்திரத்தில் பிரமஹத்திதோஷம் வந்துசேருமென்று நிந்திப்பார் பலர். இப்படியாகப் பலபோரது நிந்தனைக்குட்பட்டு சுப்ரபாவின் வயிற்றில் பிறந்த பெண்ணானவள் காலங்கடத்திவருநாளில் கோதாவரி தீரத்துக்கு வந்திருந்த சிற்சில யாத்திரிகர் இவளது வீட்டுக்குப் பக்கத்தில் தங்கிப் பக்திமார்க்கத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களது சம்பாஷணையில் இவளுக்கு ஒருவிதமான ஆசக்தி யுண்டாகத் தானும் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். வந்திருந்த யாத்திரிகர் திருக்குடந்தையில் நடைபெறும் மஹாமகத்துக்குப் போவோர் என்று அவர்களது சம்பாஷணையினால் தெரிந்துகொண்டனள்.

கணிகையின் கவனம்

12-வருஷங்களுக்கு ஒருவிசை கும்பகோணத்தில் நடைபெறும் மஹாமகம் மிகவும் பிரசித்தியடைந்த மகோற்சவமென்றும் பிரம்மாதி தேவர்களால் நடத்தப்படுவதென்றும் யாத்திரிகள் பேசிப் புகழ்ந்துகொண்டிருக்கையில் அந்த

மகோற்சவத்துக்குத்தானும் புறப்பட்டுப் போய்ப் பாபசமனம் செய்து கொள்ளவேண்டுமென்று இந்தக் கணிகை எண்ணினள். புண்ணிய காலத்தையனுஸரித்துச்சொல்வோர் மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானமாடினால் அவர்களுக்கு யாதொரு குறைவும் வராதென்றும், அவர்கள் செய்த பாப கர்மங்களெல்லாம் தொலைந்து விடுமென்றும், ரோகிஷ்டர்கள் ஆரோக்கிய திடகாத்திரராய் ஆவார்களென்றும், ஸம்பன்ன சீல மிகுந்து வாழ்வார்களென்றும் யாத்திரிகர் சொல்லக் கேட்டுத் தன் வியாதியும் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானமாடினால் நீங்காதாவென்று மதித்துத் தானும் அவர்களோடு கும்பகோணக்ஷேத்திரத்துக்குப் புறப்பட்டுவருவதாய் வேண்டினள்; எத்தனையோ ஔஷதங்கள் சாப்பிட்டும் பிரயோசனமாகவில்லை யாதலின் இம்மூலமாகவாவது தனக்கு நற்கதி பிறக்கட்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளவே, அவளைச் சற்றுத் தூரமாகவே வரும்படி சொல்லி, அழைத்துப்போக யாத்திரிகர் இசைந்தனர்.

கும்பகோணம் சேர்ந்தனர்

பின்பு யாத்திரிகர் எல்லோருமாக மறுநாள் விடியற்காலையில் கோதாவரி தீரத்தினின்றும் புறப்பட்டார்கள். போகும் வழியில் அவர்கள் இப்பெண்ணின் துர்த்தசையைச் செவ்வையாய் அறிந்துகொண்டு அவளுக்குப் பலவிதமாய்ப் பரம்பொருளின் பிரபாவத்தை உபதேசித்துப் பயமுறாமல் இருக்கும்படி செய்து நடக்கும் தூரம் தோன்றாமல் வழி நடந்து வந்தார்கள். வரும் மார்க்கம் முழுவதிலும் பெண்ணுக்கு நல்லுபதேசஞ்செய்வதையே யாத்திரிகர் கங்கணமாய்க் கட்டிக்கொண்டு வந்ததன் காரணமாக இப்பெண்ணுக்கு மஹாமகத்தில் முழு நம்பிக்கை உண்டாய் விட்டது.

எல்லோரும் கும்பகோணக்ஷேத்திரம் வந்து சேர்ந்து

கணிகை கைலாஸம் அடைந்தாள்

மஹாமக தீர்த்தத்தைத்தரிசனம் செய்தார்கள். இப்பெண் தன் பாபமுழுவதும் தீர்ந்து, தன்னைத்துன்புறுத்தும் வியாதி ஒழிய வேண்டுமென்று ஈசனை ஸ்மரித்துக் கன்யா தீர்த்தத்தைப் பிரதக்ஷிணம் செய்து வந்தாள். விசுவேசுவரலிங்கத்தை ஆராதனம் செய்து கன்யாரூபமாயிருக்கும் கங்கை முதலான நவநதிகளுக்கும் அர்சனைகள் முடித்துப் பஞ்சக் குரோசயாத்திரை செய்ததற்கப்புறம் பிரம்மதீர்த்தத்தில் ஸ்நானமாடி அதன் பிறகு மஹாமக தீர்த்தத்திற்கு வந்தார்கள். வந்திருந்த யாத்திரிகர்களையொப்ப இநதப் பெண்மணியும் சங்கற்பாதி நியமங்களையனுஸரித்துக்கொண்டு அந்த மஹாமக புண்யகாலத்தில் கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதும், அவளுக்கு வியாதிகண்டித்துவிட்டது, ரோகம் ஒழிந்துபோயிற்று; சுந்தரரூபம் வந்து சேர்ந்தது; யௌவனத்துக்குரிய சகல ரூபலாவண்யங்களும் அவளிடம் பொருந்தியிருந்தன. தன்னைத்தானே ஒருவிசை பார்த்துக்கொண்டாள்; பகவதீசனைப் புகழ்ந்து பாடினாள்; ஜகதம்பியைக் கைகூப்பி ஸ்தோத்திரம் பண்ணினாள்; கும்பேசுவரர், விசுவநாதர், நவநதிகள் அபிமுகேசுரர், கௌதமேசுவரர் முதலினோரைத் தரிசனம் செய்து அபிஷேக ஆர்ச்சனாதிகள் பண்ணி அருள்பெற்று வந்த யாத்திரிகருடன் திரும்பிக்கோதாவரி தீரம்போய்ச் சேர்ந்து வெகுகாலம் சுகசரீரியாய் ஈசுவரத்தியானஞ் செய்துகொண்டு வாழ்ந்திருந்து இறுதியில் கைலாஸம்போய்ச் சேர்ந்தனள். கைலாஸபதியின் திருவடிமலர் அடைந்த இக்கணிகையின் 'க்ருமிகண்டத்வம்' ஒழிந்து சுகபோகாதி வின்பங்கள் சித்திக்கச்செய்தது ஓரோயொரு மஹாமக ஸ்நானமேயன்றோ? ஆ, ஆ, மஹாமகத்தின் மகிமையே மகிமை.

## 2. மகாமகஸ்நானத்தினுல் புத்திரனுண்டான கதை.

---

ஹம்ஸ தூளிகா மஞ்சம்

பொறுமை, அடக்கம், பக்தி ஆகிய இம்மூன்றிலும் நற்பெயரெடுத்த அரசனொருவன் பூர்வத்தில் வஸித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஹேஹயன் என்று பெயர். தணிவும் பணிவும் அவனிடம் பொருந்தி யிருந்தது போலவே தர்மகுணமும் மேம்பட்டிருந்தது. ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை யெப்போதும் ஸ்மரித்துக்கொண்டே யிருப்பான். எனவே அவன் மாசுமருவில்லாத விஷ்ணுபக்தன். அவன் வாக்கில் வருவதொவ்வொன்றும் விஷ்ணுவின் நாமோச்சாரணமேயாகும். விஷ்ணு பக்தர்களைக்கண்டால் அவன் செய்யும் ஆசார உபசாரங்கள் கணக்கிலடங்கா. கீர்த்தனங்கள் பாடும்போதும் விஷ்ணுவைப்பற்றியே பெரும்பாலும் போற்றிப் புகழ்வான். இவ்வளவு தர்மகுண சீலத்துவத்தோடிருக்கும் ஹேஹயனுக்கு சோபனாங்கி என்னும் இனியபெயர் புனைந்த மாதராள் மனைவியாயிருந்தனள். இவளுடன் வேறு ஐவர் அவனுக்கு மனைவியாயிருந்தும் சோபனாங்கி வனப்பிற்சிறந்த வனிதா சிரோமணியாயிருந்து எப்போதும் அரசனை விடாதிருந்து வந்தாள்; மணமாலை சூட்டி மாண்புடன் பிரகாசிக்கும் மங்கையர்த்திலகம்; பதிபக்தியெனக் கருதி உழைத்துவரும் உத்தமி; சௌந்தர்யத்திற் சிறந்த சண்பகவல்லி; குணவானுக்கேற்ற குணபூஷணி; அரசனுக்குரித்தான ஆருயிர்த்திலகம்; இவை யெல்லாவற்றிலும் அவளிடம் சிறந்து விளங்கிய தென்னவெனில் பதிபக்தி; அரசன் தனக்கு இம்மாதிரியான பெண்மணி பத்தினியாய் வந்தமைந்த மாண்பையெட்டி மனமகிழ்ந்திருந்தனன். தான் பூர்வஜன்மத்திற் செய்த பூஜாபலனே பத்தினியுருவெடுத்துத் தன்

பக்கத்திலிருந்து பாதுகாப்பதாகவும் தன் தர்மத்தைப் போஷிப்பதாகவும் அவன் அடிக்கடி தனக்குத் தானே நினைத்துக்கொள்வான். சௌந்தர்யம் என்று சொல்லுதற் குரிய சகல ரூபலாவண்யமும் சோபனாங்கியிடம் குடி கொண்டிருந்த காரணம்பற்றி அரசன் அவளை விட்டு அரைக்கணமேனும் பிரிந்திருக்கமாட்டான் மனைவி சூரிய நமஸ்காரம், பஞ்சாக்ஷரஜபம் முதலியவைகளைச் செய்து தான் எப்போதும் தன் கணவனைவிட்டுப் பிரியலாகாதென்று கரங்குவித்து ஸர்வேசுவரனை ஸ்தோத்திரஞ் செய்வாள். இங்ஙனம் ஒருவர்க்கொருவர் இணைபிரியா நட்பினராய், சொள்ளையில்லாச் சோபிதராய்க்காலங்கடத்தி வந்தார்கள். சுருக்கிச்சொல்லின் பத்தினிக்கு ஏற்றபர்த்தாவும், பர்த்தா வுக்கேற்றபத்தினியுமாயிருந்தனர். அமோஹமாய் அரசனும் அரசியும் அரண்மனையில் வாழ்ந்துவருநாளில் ஒருதினம் தம்பதிகள் இருவரும் தமது ஹம்ஸதூளிகாமஞ்சத்தில் வீற்றிருந்தார்கள்.

அந்த மஞ்சத்தின் சிறப்பை என்னவென் றுரைப்பது! எழுதும் இறகினாலும் இயலாது; கதாநிபு ணத்வம்வாய்ந்த கடுகிய கவிசிரேஷ்டராலும் மாளாது. தேவசிற்பியும் மயனும் ஒருங்க மைத்துச் சேர்த்தனரோ அந்தக்கட்டிலை யென்று பார்ப்போர் கண்களுக்குப் புலப் படும். நவரத்னங்களும் வெகுசிங்காரத்துடன் அமைக்கப் பெற்றதாகும் அந்தக் கட்டில் ஓரங்களில் வரிசைக்கிரம மாய்க்கோர்த்திருக்கும் முத்துக்களும், அவைகளுக்கு நடு வில் ஓடுக்கு விட்டுப் புதைத்திருக்கும் கோமேதகக் கற் களும், இவைகளுக்குக் கீழ்வரிசையாய் ஓரேநேராக நீலக் கற்களும் மாட்சிமையுடன் மரகதங்களும் ஜ்வலித்துக்கொண் டிருக்கும் மாணிக்கக் கற்களும், பளபளவென்று கண்களைப் பறிக்கும் சக்திபொருந்தி தீட்சண்யமான பிரகாசத்தோடு

அதன் அமைப்பு

வீசும் வஜ்ரவைடூர்யங்களும் ஒன்றாய்ச் சேர்க்கப்பெற்ற இந்த மஞ்சமானது அக்காலத்தில் மிகவும் மேன்மை கொண்டிருந்தது. மஞ்சமே மனோஹரமாயிருக்கையில் அதன் கண் வீற்றிருப்போர் எத்தன்மையா யிருக்க வேண்டுமென்பதை யாம் இவ்விடத்திற் கூறுவ தனாவசியம். இப்படிப்பட்ட மஞ்சத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்த வினோதமே செப்பத்தரமன்று; மெல்லிய பளபளப்பான பட்டு நூலினால் தலையணைகள் இழைக்கப்பெற்றும், அப்போதைக் கப்போது புதிதுபுதிதாய்ப் புஷ்பங்கள் வர அவைகளின் அடிக்காம்புகளைத் தரித்துவிட்டு மிருதுவான மலர்ப்பாகத்தினால் சயனத்தைச் செம்மைப்படுத்தியும் வைத்திருப்பர் வேவுகாரர். தூங்கியெழுந்தவுடன் கண்விழித்துப்பார்க்க எதிரில் ஒரு நிலைக்கண்ணாடியும், நாற்புறத்திலும் கையிற் சாமரம் பிடித்து வீசுவதுபோலும் புஷ்பமாரி பொழிவதுபோலும் தேவதூதர்களை யொப்ப பொம்மைகளைத் தாங்கியும் அந்த மஞ்ச மானது அமைக்கப்பெற்றிருந்தது.

இத்தன்மைபொருந்திய மஞ்சம் இருந்தவிடமெங்கு?

மஞ்சத்தில் வீற்றிருந்த ராஜதம்பதிகள்.

பூக்கள் மலர்ந்து வாசனை வீசாநிற்கும் அரும் பூங்காவனத்தினடுவிலே மந்தமாருதம் வீசிக் கொண்டிருந்தது; புஷ்பக்கொண்டைகள் கொண்ட இளஞ்செடிகள் அம்மாருதத்தினால் மெதுவாய் அசைந்தாடின. அந் நந்தவனத்தின்கணுள்ள நீர்நிலைகளில் தங்கியிருந்த தண்ணீர் மெல்லிய அலைகளோடு சோபித்தது; அப்போது மாலைப் பொழுது, மஞ்சள் வெயிலாயிருந்த சமயம்; மேற்குமலையிற் போய் விழும் சூரியனின் செவ்வானக் கிரணங்கள் உத்தியானவனத்துத் தண்ணீர்த்தடத்தில் பிரதிபிம்பித்தன. பட்சிவர்க்கங்கள் ஒன்று கூடிக் கூட்டங்கூட்டமாய்ப் பகற்பொழுது முழுவதும் புறந்த வருத்தந்தீர அவையவை தத்தம் உறைவிடங்களுக்குப் போய்க்கொண்டிருந்தன. தூரத்தினிற்கும்

மலைக்குன்றென்றும், அதன்மீது பச்சைப்பசேரென்று படர்ந்திருக்கும்புல்வகைகளும், வளர்ந்திருக்கும் விருக்ஷங்களும் பார்ப்பவர் கண்களுக்கு இனிமையாய்த் தோன்றின. இவ்வளவு மனோஹரமான மாலைக்காக்ஷியை அரசனும் அரசியும் பார்த்தானந்தித்தவாறே தம் உத்தியான வனத்தினடுவிற் கட்டியுள்ள பர்ணசாலையின் மூன்றாம் உப்பரிகையின்மீது போடப்பட்டிருந்த ஹம்ஸதூளிகாமஞ்சத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

**புத்திரனில்லாத குறை**

புவியெலாம் புகழ்படைத்தோங்கிய பிரதாபம் வகித்துக் கண்டோர் கரங்குவிக்கவும் பெயரைக் கேட்டோர் பக்தியுடன் போற்றவும் இருந்தாலுமென்? தான் ராஜ்யாதிகாரம் வரப்பற்ற உத்தமசீலனாயிருந்தாலுமென்? தன் தர்மகுணத்துக்கேற்ப தன்னை யொருத்தியைப் பத்தினியாய் அடையப்பெற்றிருந்து மென்? அவளுடன் மாலைப்பொழுதில் மந்தஹாஸத்துடன் மஞ்சத்தில்வீற்று மாலைப்பொழுதின் மாண்பை வருணித்துக்கொண்டும், அக்காட்சியின் வைபவத்தைப் பார்த்துக்கொண்டும் இருந்தாலுமென்? நா அசையுமுன் நாடு அசையவும், உதடு அசையுமுன் ஊர் அசையவும் தலை அசையுமுன் தரணி அசையவும் அதிகாரம்வகித்து தலைதூக்கு முன் தாஸராய்வந்து கைகட்டிக் காத்திருக்கும் ராஜாதிராஜனாயிருந்தாலுமென்? அவனுக்கு ஓர் புதல்வனில்லாக்குறையே பெருங்குறைவாயிருந்து வந்தது. ஆனால் அதை அவன் வெளிக்காட்டாமல் தன் மனவினுள்ளேயே நினைத்து நினைத்துப் புழுங்கினனாயினும் மடந்தைப்பருவத்து மாது சிரோமணியாய்த் தன் பக்கத்திருந்து மனைவிசெய்யும் ஆசார உபசார கைங்கர்யங்களைப் பார்த்துப் பார்த்து அரசன் மனமகிழ்ந்திருந்தனன்.

தம்பதிகளிருவரும் இவ்விதமான ஆனந்தசாகரத்தில்

புத்திரப்பேறே
பெருர்பேறு

மூழ்குண்டு ஹம்ஸதூளிகாமஞ்சத்தில் வீற்றிருந்த சமயத்தில் அரண்மனையைச் சார்ந்திருந்ததொரு தெருவில் ஏதோ அமளி நடப்பதாய்த் தெரிந்தது. பத்துப் பதினைந்துபேர் ஒரு கூட்டங்கூடிப் பேசியிறைவதுபோல் இரைச்சலும் கேட்க, மஞ்சத்திலிருந்து எழுந்துவந்த அரசன் அப்பேரிரைச்சலுக்குக் காரணம் என்னையென்று கவனித்துக் கொண்டிருந்தான். கோரரூபத்தோடு ஓரிளைஞன், பலர் அவனைச்சுற்றி நகைத்தும் கைகொட்டி ஏளனஞ்செய்து கொண்டுவர, தன் அரண்மனைக்கு முன் நிற்பதையும் அவ்விளைஞனை ஒரு சூத்திரன் கட்டி மார்போடணைத்து உச்சிமுகந்து முத்தமிட்டுக் கொண்டிருப்பதையுங் கண்டு அஃதென்னையென்று அரசன் தன் வாயிற்காப்போனைக் கூப்பிட்டுக்கேட்டான். அரசனது ஆக்ஞையைச் சிரமேல்வகித்த காவலன் தான் அறிந்ததைச் சொல்லலுற்றான்.

காக்கைக்குத்
தன்குஞ்சு
பொன்குஞ்சு

“ஸ்வாமி, அடுத்ததெருவில் சூத்திரஜாதியானொருவன் வஸித்துக்கொண்டிருந்தான்; தான் ஏதோ பாடுபட்டுத்தேடிய பணத்தை வைத்துக் கொண்டு தன் மனத்திற்கினிய மனையாளுடன் காலங்கடத்திவருகையில் வெகு காலம் அவர்களுக்குக் குழந்தையில்லாமலேயிருந்தது. காலம் ஆய்க்கொண்டேவர இறுதியில் ஈசனருளால் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தைதான் பிறந்ததே! அதென்ன சுபலக்ஷணங்களோடும் மனஸை வசீகரிக்கும் தன்மையோடும் பிறந்ததா? இல்லை, இல்லை. அரசே, அதன் லக்ஷணத்தை நான் எவ்விதம் சமுகத்தில் எடுத்துரைப்பேன். தாங்களே சற்று முந்திப் பார்த்திருப்பீர்களே. ஐயோ, அந்த கோரரூபத்தைக் கண்ணெடுத்துப் பார்த்தல் இயலாது. மூக்கேயில்லையென்று சொன்னாலும் தகும். எனவே முகமுழுவதும் சப்பை. ஓரே

யொரு காதுதான்; ஒரேயொரு கண், அதுவும் கோவைப் பழம்போற் சிவந்திருந்தது, கோரைப்பல்லொன்று வெளியில் நீட்டிக்கொண்டிருந்தது, குறுகிய நெற்றியும் ஒட்டிய சன்னமும் அக்குழந்தையின் முகத்தைப் பின்னும் ஆபாசமாக்கிவிட்டன; ஒரு கை சாதாரணமான மனுஷ்யக்கையும் மற்றொருகை மரம்போலு மிருந்ததோடு சரீர வுறுப்புக்க ளெல்லாம் தாறுமாறுயுமிருந்தன. பாதங்கள் எல்லோர்க்கு மிருப்பதுபோல் நேர்மையாயிராமல் வக்ரமாயிருந்தன. இத்தகைய குழந்தையைப் பெற்றோர் அதைப் பார்த்துச் செய்யக்கூடிய தென்னே? ரத்தக்கலப்பால் பிறந்த சிசுவைப் பெற்றோர் குப்பைமேட்டிற் கொண்டுபோய்த் தள்ளிவிடுவார்களா? அது அழும்போது அதற்கு அன்ன மூட்டிப் பாலூட்டி வளர்த்து அதற்குத் துக்கம் வந்த காலத்து அது தம் துக்கமென்றும், அது சந்தோஷமாய் விளையாடுங்காலத்து அது தமது மனமார்ந்த களிப்பென்றுங்கருதி வேளாவேளைகளிற் கவனித்துப் போஷித்து வந்தார்கள். இவ்விதம் 3 வருஷ காலமாயிற்று. பிறகு சமீபத்தில் ஒரு நாள் ஜீவனார்த்தமாக அக்குழந்தையின் தந்தையான சூத்திரன் அயல் கிராமத்துக்குப் போக நேரிட்டது. குழந்தையை வெளியில் விடாமல் சாவதானமாய்ப் பார்த்துக்கொள்ளும் படிக்கும், பிறர் அக்குழந்தையைக் கண்டுபலவிதமாய்ப் பரிகசித்தாலும் அதை யொரு பொருட்டாய்க் கருதாமல் குழந்தையைப் பாதுகாக்கும் படிக்கும் சொல்லிப்போயினுன்.

புத்திர சோகம்

கணவன் கூறியதைக் கேட்டு மனைவி மனமொப்பித் தான் குழந்தையைப் பார்த்துக் கொள்வதாக வாக்களித்ததன்மேல் தந்தை வேலைக்காக வெளியிற் புறப்பட்டுப் போனுன்.

அண்டை வீட்டுக் குழந்தைகளோடு இக் கோரரூபச் சிறுவனும் தினேதினே ஆடுவது வழக்கம்.

அன்று வீதியில் விளையாடிக் கொண்டிருந்தபோது தன் வீட்டுக்குக் கொஞ்ச தூரமாகக் குழந்தைகள் எல்லோரும் வந்து விட்டார்கள். குழந்தையின் தாயோ வீட்டுவேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அபூர்வமான இக்குழந்தையைக்கண்டு பரிசித்த மற்றைக் குழந்தைகள் எல்லாம் கைகொட்டிச் சிரிக்க வீதியிலுள்ள ஒவ்வொரு வீடாய்ப் புகுந்து புகுந்து இவ்வரூபி வெளிவந்து கொண்டிருந்தது. இச்சமயத்தில் அயல் கிராமத்துக்குப் போன தந்தை வீடுவந்து சேர்ந்தான். தனதருமைக் குழந்தையைக் காணாமல் மனைவியை வினவ, அண்டை வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்ததாய்ச் சொன்னாளவள். பிறகு தந்தை வீட்டுக்கு வெளியில் வந்து அங்குமிங்கும் தன் புதல்வனைத் தேடியுங் காணாமல் மனக்கிலேசங் கொண்டு இவ்வீதி வந்து சேர்ந்தான். குழந்தையைக்கண்டான். குழந்தையைக் காணோமென்று சோகமுற்றவனாய்த் தேடிக் கொண்டிருந்த தந்தைக்கு அப்புதல்வனகப்பட்டால் எத்தன்மைய சந்தோஷம் இருக்கவேண்டுமென்பதை என் அரசே, நானெடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை.

புதல்வனைக் கண்ட பரம சந்தோஷம்

குழந்தையைக் கண்டது தான் தாமதம், தந்தை ஓடோடியும் வந்து அதை வாரியெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு ‘அப்பா கண்மணி, எனது விருத்தாப்பியத்தில் உதித்த வள்ளலே, எங்கு ஓடினாயடா, என்னை இதுபரியந்தம் பரிதபிக்க விட்டு சிநேகிதர்களோடு வீடுவீடாய் ஓடிவந்தனையோ, குழந்தாய், அரைக்ஷணத்தில் எனது அங்கமெல்லாம் சோரவடித்தாயடா, பதறுதடா என் தேகம்; போகட்டும் சோகத்தினால் கண்மூடுமுன்பே எனக்கு நீ யகப்பட்டுத் திரும்பவும் என் கையில் விளையாடுவது நான் பூர்வத்திற்செய்த பூஜாபலனே

யாகும்,'' என்று சொல்லிப் பின்னும் அவன் "குழந்தையில்லா ஜன்மம் இருந்தென்ன, போயென்ன, எவ்வளவு தனமிருந்தாலும் ஒரு குழந்தையினால் உண்டாகும் சந்தோஷத்துக்கு எதுவும் இவ்வுலகில் ஈடாகாதே என்று சொல்லிக் குழந்தையையெடுத்துக்கொண்டுபோனான். அதுதான் வீதியில் பெருங்கூச்சலுக்குக் காரணமாயிருக்கிறது.''

* பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங்கில்லாதவர்.

ராஜனுக்கு
உண்டான
தாபம்

தனது அரண்மனைக்காவலன் இங்ஙனம் உரைத்ததைக் கேட்ட ஹேஹய ராஜன் சரியென்று தலையசைத்து அன்னவனை யனுப்பிவிட்டுத் தன் மார்பில்சாய்ந்து கொண்டிருந்த பத்தினியைப் பார்த்து 'நேசம் நிரம்பிய நங்காய், வயிற்றிற்பிறந்த புத்திரன்மீதிருந்த வாஞ்சையைப் பார்த்தனையா, அவன் எவ்வளவு கோரரூபியாயிருந்தும் புத்திரனென்று உதித்துவிட்டானாயின் அவன் றி தந்தைக்கு வாத்ஸல்யம் எப்படியிருக்கிறது பார்த்தனையா? கொஞ்சநேரம் குழந்தையைக் காணாமல் அந்த சூத்திரன் தவித்த தவிப்பை என்னவென்றுரைப்பேன். எங்கேயோ யெல்லாம் சுற்றிச் சுழன்று கடைசியில் அந்த சூத்திரன் நம்மரண்மனைவாயிலில்வந்து அவனது குழந்தையைக் கண்டதும் அவனுக்குண்டான ஆனந்தத்தை அளவிட்டுச்சொல்ல முடியாமலிருந்ததே. அதுவல்லவோ வாஞ்சை! புத்திரன் இருந்தால் அந்தவாஞ்சை வேறுதான். அந்த சூத்திரன் குழந்தையைப் பார்த்ததும் அதை முத்தமிட்டுத் தோளில் போட்டுக்கொண்டு அவன் வீடுதிரும்பியபோது சொன்ன

---

* நளவெண்பா

தைக் கவனித்தாயா? அவன் "புத்திரனில்லாக்குலம் குலமேயல்ல, அந்தவமிசம் விளங்காது; அந்த வமிசத்தில் ஏதேனும் செய்தாலும் அது நிஷ்பிரயோஜனமாகிவிடும். புத்திரனில்லாதவனுக்குச் சம்பத்திருந்தென்ன? ஆயுள் நீடித்திருந்தென்ன," என்றுசொல்லிக்கொண்டே போயினு னன்றே? நீ இவ்வளவு ரூபவதியாயிருந் தென்ன பிரயோ ஜனம். உன் வயிற்றில் எனக்கென்று ஒருபுதல்வன் உதிக்க வில்லையே. ஏ! ஈசா, எனக்குத் தாபம் அதிகரிக்கிறதே, என்றுசொல்லிச் சற்றுநேரம் மௌனமா யிருந்தனன்.

அரசனின் மனநிலைமை

திடீரென்று அரசனது மனம் தாபமடைந்ததைப் பார்த்த சோபனாங்கிக்கும் மனம் ஒருவாறு கரைந்தது. தான் புத்திரபாக்கியம் கிடைக்கப்பெறாத பெரும்பாபியென்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். முகம்வாடினாள்; மனம் வெதும்பினாள்; மெய்சோர்ந்தாள்; தன் பர்த்தாவைத் தேற்றினாள். எவ்வளவு தேற்றினாலுமென்ன? அவனுக்கு என்னவோ மனம் இணங்கவில்லை. ஹேஹயன் கண்விழித்துப் 'பெண்ணே' அந்த சூத்திரன் கூறிப்போன தனால் எனது தாபம் அதிகரித்துவிட்டது. புத்திரபாக்கியம் இருக்கவேண்டுமென்ற பேரவாவே எனக்கு ஜாஸ்தியாயிருக்கின்றது. இனி அரைக்ஷணமாவது இல்லறம் நடத்த என்னால் முடியாது. இத்தனைநாள் இல்லறம் நடத்தியும் ஸந்தானம் கிட்டாமல்போகவே இனியும் கிட்டுமென்பதில் எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை. ஈசனேபார்த்து அருளவேண்டும். ஆதலால் நான் தபஸ்செய்யப்போகிறேன். நான் ஒரு பெரும்பாபி; புத்திரஹீனன்; புத்திரஹீனன் முகத்தைப் பார்த்தால் சூரியனை உடனே தரிசனம் செய்க, என்று வேதம் கூறுகின்றது. புத்திரஹீனனைத் தொட்ட மாத்திரத்தில் எண்ணிறந்த தோஷங்கள் உற்பவிக்கின்றன. எவ்விதமான சற்காரியத்துக்கும் புத்திரஹீனன் உதவமாட்

டான்; சிராத்தாதி சற்காரியங்களுக்கு அவன் அருகனல்லன்; ஐயோ, நான் ஜன்மாந்தர பாபியானேனே! அதனாலல்லவா எனக்கு ஸந்தானமில்லை! ஏ கிருபாநிதி! இது நின்கருணையோ, ஏ பராசக்தி, இது நின் திருக்கூற்றோ? உன்னை நம்பினோரை நீ கைவிடுவதில்லையே! என் மீது திருவுளம் பற்றலாகாதா?

* "பதியுண்டு! நிதியுண்டு! புத்திரர்கள், மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்!
பவிசுண்டு! தவிசுண்டு! திட்டாந்தமாக வெம
படரெனுந் திமிரமணுகாக்!
கதியுண்டு! ஞானமாங்கதிருண்டு சதிருண்டு
காயவித்திகளு முண்டு!
கறையுண்டகண்டர் பாலம்மை! நின்றாளிற்
கருத்தொன்று முண்டாகுமேல்;
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவாநந்த வொளியே!
நாதாந்தரூபமே! வேதாந்தமோனமே!
நானெனு மகந்தை தீர்த்தேன்!
மதியுண்டமதியான மாணிக்கவல்லியே
மது[illegible]தனன் றங்கையே!
வரை ராஜனுக் கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப் பெண்ணுமையே."

அரசனின் வெறுப்பு

ஐயோ, நான் எவருக்குத் தீங்கிழைத்தேன், ஒருவருக்குமில்லையே. சிவன், விஷ்ணு என்கிற பேதம் பாராட்டினேனோ? இல்லையே. சிவாபாராதம் செய்தேனோ? விஷ்ணுத்துரோகியாய் நின்றேனோ? புஷ்பித்தமலர்களோடு கூடின இளஞ்செடிகளை முறித்தேனோ? நறுமணம் கமழும் வாசனைக்கொடிகள் நிரம்பிய நந்தவனத்தையழித்தேனோ? ஒன்

* தாயுமானவர்.

றுமில்லையே. சிவாலயங்கள் செப்பனிடுவதை மறுத்தேனா? வழிப்போக்கர்க்கு அனுகுணமான சத்திரஞ்சாவடிகளை இடித்தேனோ? ஸ்நானபானாதிகளுக்குதவும் கிணறு, குளம் முதலியனவற்றைத் தூர்த்தேனா? அல்லது பசியிருந்தழும் குழந்தைகளுக்குப் பாலில்லையென்று உத்தரவிட்டேனா? ஐயோ, எதுவுஞ்செய்யவில்லையே. நிரபராதியான என்மீது கருணைவள்ளலான கிருபாநிதி, தம் கடைக்கண்பார்வை வைக்கலாகாதா? என்னையேன் சோதிக்கின்றீர்? என்மனந் ததும்புகின்றது; தாமரையிலைத் தண்ணீராய்த் துவளுகின்றது. புத்திரனில்லாக் குறையே பெருங்குறையாய் எனக்கு இப்போது தோன்றுகின்றது. ஸந்தானமுள்ள விடங்களிலேதான் லட்சுமிவாஸமிருப்பள்; ஸந்தான மிருப்போர்க்கேஸௌகமும் கௌரவமும். மற்றெந்தத் தனமிருந்தாலும் அது புத்திர சம்பத்துக்கு ஈடாகாது. ஏ சோபனாங்கி, என்னருமைக்கண்மணி, நான்தான் பாபி, நீ எனக்கு மனைவியாய் வந்ததன் பலனாகவாவது எனக்கு ஒருமகவு உண்டாகலாகாதா? உன் அதிர்ஷ்டமோ அல்லது என்னதிர்ஷ்டமோ, புத்திரபாக்கியம் இல்லாது தவிக்கின்றோம். இனி இவ்வுலகத்தை வெறுத்தேன். என் இன்னுயிர்க் காதலி, இம்மாயப் பிரபஞ்ச வாழ்க்கையின் மீது எனக்கு வெறுப்பு உண்டாகி விட்டது. அம்மணீ, இனிநான் அடவியிற்புகுந்து மனதை ஒரு நிலைப்படுத்துவதே சரி," என்று சொல்லி மலமலவென்று கண்ணீர் சொரிந்தான்.

சாகல்ய முனிவரின் விஜயம்

புத்திரனில்லாப் பெருங்குறையை நினைத்து நினைத்து அரசன் விசனமடைந்து கூறியதனத்தையும் கேட்ட சோபனாங்கி திடீரென்று மஞ்சத்திலிருந்து கீழ் குதித்துக் கைகூப்பி நாதரின் சரணமலர்களைத் தொழுது பின்னர் ஆதிகுருவான பரம்பொருளைப் பார்க்

கும் வண்ணம் ஆகாயத்தை நோக்கியவாறே விழிமுளரிகளி னின்றும் வெண்முத்துதிர்த்தாள். இருவரும் கடவுளை நோக்கித் தியானஞ் செய்தார்கள். அரசன் அடவிக்குப் போகுமிடத்துத் தானும் ஆங்கு புறப்பட்டு வருவதாகக் கூறினாள். ஸந்தானம் வருவதும், போவதும் சற்குருவின் கருணையென்று கணவனிடம் விளம்பினாள். இங்ஙனம் தம்பதிகள் ஒருவரை யொருவர் பார்த்துத் தத்தம் மனோ நிலையைச் சொல்லிக் கொண்டிருக்கையில் அரண்மனைக்காவலன் ஓடிவந்து முனிவரொருவர் வந்திருப்பதாகத் தெரிவித்தான். தக்ஷணமே, அரசன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, முனிசிரேஷ்டரை எதிர்கொண்டழைத்து ஆசனத்தமர்த்தி, அர்க்கியபாத்தியாதிகள் கொடுத்து, விதிபூர்வகமாய் உபசரித்த பிறகு ஏழையாகிய தன்னால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் இருக்குமாயின் அதைச் சொல்லும்படி அரசன் முனிவரை விநயத்துடன் கேட்க, ஆரம்பத்தில் அரசனுக்குக் குழந்தைகள் எத்தனை யென்று முனிவர் கேட்டார். அரசன் அதற்குப் பதிலுரைக்கு முன் முனிசிரேஷ்டர் திரும்பவும் தான் ஸரஸ்வதி நதிக் கரையில் ஹேமாத்மகம் என்கிற யாகஞ் செய்யப்போகிறதாகவும், அந்த யாரம்பிக்க இன்னும் மூன்று தினங்களே யிருப்பதனால் தனக்கு ஏதேனும் யாசகங் கொடுத்து அனுப்ப அரசனுக்கு இஷ்டமிருந்தால் அங்ஙனமே யாகட்டுமென்றும், தன்னைக் காலதாமதம் செய்யலாகாதென்றும் கூறினார். முனிவர்கூறிய முதற்கேள்விக்கு விடைபகர வகையற்று அரசனுக்குத்துக்கம் பின்னும் அதிகரித்து விட்டது.

முனிவரின் தேற்றுதல்.

ஏற்கெனவே மனம்நொந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் அரசன் தபோநிதியை நோக்கி "ஸ்வாமின் எனையேன் பரிக்ஷிக்கின்றீர்; நான் தோஷமுள்ளவனென்று கருதியே என்னைச் சோதிக்கின்றீர் போலும்; அடியேன் ஒரு

பெரும்பாபியாயிற்றே. திரிகால ஞானியான தேவரீர் என் மீது கிருபைபுரிய வேண்டும், பரிகாசஞ்செய்யலாகாது," எனவும், முனிவர் சிறிதுநேரம் ஆலோசித்துப்பிறகு பின் வருமாறு கூறினர்:—"அரசே, நான் பரிகாசமொன்றும் செய்யவில்லை. அரசன், சந்திரன், சூரியன், பர்வதம், தீர்த்தம், ஆகாயம், ஆதிய இவைகளிடம் பரந்தாமன் எப்போதும் குடிகொண்டிருக்கிறார். ஆதலின் அவர்களிடம் பரிகாசம் செய்யலாகாது. அவர்கள் முன் என் ஞானம் மறைந்துவிடாது. உம்முடைய சந்நிதியில் என் ஞானம் அதிகரித்துவிட்டது. தம்பதி சகிதராய் நீங்களிருக்க உங்கள் பேட்டி எனக்குக் கிடைத்தது. உம்முடைய ஞானம் மிக்க சூக்ஷ்மமானதாகும். (அரைநிமிஷம் யோக நிஷ்டையிலிருந்த பிறகு) உமக்குப் புத்திரனில்லாததைக்குறித்து ஆயாஸப்படுகின்றீர். பூர்வஜன்ம பிரதிபந்தக வசத்தினலே உமக்குப் புதல்வனில்லை. உமக்கு ஆறுபுதல்வர் பிறப்பர்; அவர்களுள் முதல்வன் அஸ்த்ர * சஸ்த்ரங்களில் நிபுணனவன்; அவனை நினைத்தால் நஷ்டமான பொருளனைத்தும் திரும்பிவந்து சேரும்" என்றார். இது கேட்ட அரசனும் சோபனங்கியும் முககலா விலாஸத்தோடு அன்றே தமது ஜன்ம ஸாபல்யமடைய மார்க்க மேற்பட்டதென்று முனிவரைத்துதிசெய்து நின்றனர்.

பிறகு முனிவர் அரசனைத்தேற்றிப் பூர்வஜன்ம பிரதிபந்தகத்தைக்குறித்துச் சொல்லுற்றார்:—

பூர்வஜன்ம பிரதி பந்தகம்

"அரசே, நீர்முன் ஜன்மத்தில் ஒன்றுக்கு ஒன்பதாய்ச் சொல்லி வேலை செய்துவந்த வியாபாரியாவீர். கடன்கொடுத்தோரிடம் அரியவட்டி வாங்கினீர்; பணத்தின் மீது

* அஸ்திரம் கையிலிருந்து எறியப்படும் ஆயுதம்; சஸ்திரம் கையில் வைத்துக்கொண்டே உபயோகிக்கப்படும் ஆயுதம். அம்பு அஸ்திரமாகும்; கத்தி சஸ்திரமாகும்.

உமக்குப் பேராசை அதிகமாயிருந்தது. உமக்குக் குருவும் இல்லை, அதிக பந்துவும் இல்லை. நன்றாய்க்கனிந்து விற்பனைக்காக மாட்டிவைத்திருந்த வாழைப்பழங்களில் ஒன்றை ஒரு நாள் ஒருபூனை தின்றுகொண்டிருந்தது. உமது பத்தினி ஒரு கோல் எடுத்துக்கொடுத்தாள்; அதைக்கொண்டு நீர் பற்களை நரநரவென்று கடித்துக் கோபாவேசத்துடன் அந்தப்பூனையை அடித்தீர். அது இறந்தது. வாயில்லாப் பிராணியைப் பார்த்தோர் எல்லோரும் வருத்தமுற்றனர். இந்தத் தோஷமே உங்களைச் சூழ்ந்து இந்த ஜன்மத்தில் புத்திரனில்லாதவாறு செய்துவிட்டது. ராஜ்யம்மட்டும் உமக்குக் கிடைத்திருக்கிறதே; அது எங்ஙனமென்பீரோ வெனில் கேளும். கடந்த மூன்றாம் ஜன்மத்தில் ஸ்ரீசைலபர்வதத்தில் நீர் ஈசுவரனுக்கு ஒரு திவ்யமான மண்டபத்தை நிர்மாணஞ்செய்தீர். அதன் பலனேயாம் உமக்கு ராஜ்யம் கிடைத்திருப்பதும். இந்தப் பிரதிபந்தகம் நீங்கி உமக்குப் புத்திரோற்பத்தி யுண்டாக ஒரு உபாயம் சொல்லுகின்றேன், கேளும்."

பொன்னில் விலைமதியாத கல்லிழைக்கப் பெற்ற பூனை

"தக்ஷிணதிக்கில் கும்பகோணம் என்னும் ஒரு திவ்விய க்ஷேத்திர மிருக்கின்றது. இன்னும் 6மாதத்துக்குப் பிற்பாடு ஆங்கு ஒரு உற்சவம் நடக்கும். அதற்கு மஹாமகம் என்று பெயர். அக்காலத்தில் நீர் அந்த க்ஷேத்திரத்திலிருக்கும் மஹாமக தடாகத்தில் ஸ்நானம் பண்ண வேண்டும்; மஹாமக தடாகத்துக்குக் கன்யாதீர்த்தம் என்றும் பெயர். அதில் ஒருவிசை நீராடுமிடத்து எத்தனையோ தலைமுறை ஜன்மாந்தர பாபங்களெல்லாம் ஒழிந்துவிடும். மஹாமகத்திற்கு 6மீ முந்தியே நீர் உம்மைச் சேர்ந்தவர்களோடு அந்த மஹா க்ஷேத்திரத்துக்குப்போய், தினம் நியமத்துடன் அந்த தீர்த்தத்தில் ஸ்நானமாடிக் கொண்டுவாரும்

மஹாமகத்திற்கு முதல் நாள் கங்காநதியோடு கூடின நவ நதிகளுக்கும் பூஜை செய்யும். உம் அந்தஸ்துக்குத் தகுந்த பிரகாரம் பிராமணோத்தமர்களுக்கும் தக்ஷிணை விநியோகஞ் செய்யும். 35 அங்குலம் நீளம் தங்கத்தோடு ரத்தினம் வைத்து இழைக்கப் பெற்றதும் மற்றும் நீலக்கற்களாலும் கோமேதகக் கற்களாலும் இழைக்கப்பெற்றுப் பார்ப்பவர் கண்களைக் கவரும்படியாய்க் கனபிரகாசத்தோடு ஜ்வலிக்கும் ஒருதண்டம் செய்யவேண்டும்; பூனை வெள்ளையாயிருந்தால், நீல ரத்தினம் தங்கத்தில் இழைக்கப்பெற்ற தேகமும், கோமேதகம் வைத்தகண்களும், வெள்ளியினாற் செய்த மயிருடன் இருக்கவேண்டும்; நீல ரத்தினத்தினால் செய்த தேகத்தோடும், ரத்தினத்தினாலான வாலோடும் கால்களோடும், வயிரத்தினால் செய்யப்பட்ட பற்களோடும் கூடிய நாக்கோடும், இந்திர நீலக்கல்லினாற் செய்த காதுகளோடும், கோமேதகத்தாற் செய்த கழுத்தோடும், கூடிய பூனையொன்று செய்யவேண்டும், அதன் பிருஷ்டம் புஷ்பராகத்தாற் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன் வயிற்றில் தங்கம் நிரப்பபட்டிருக்க வேண்டும். இத்தகைய பூனையை ஓர் ஏழையாயுள்ள பிராமணனுக்குக் கொடுக்கவேண்டும்; கொடுக்குமுன் அந்தப் பிராமணனுக்குச் செவ்வையாய்ச் சிங்காரித்து வஸ்திராலங்காரம் செய்து பிராமணனை உபசாரணைசெய்து திருப்திப் படுத்தவேண்டும்.

மற்றுஞ் செய்யவேண்டிய தானங்கள்

அதன் பிறகு ஓர் இரும்புச்சட்டியில் நெய் ஊற்றி அதில் உன் நிழலைப் பார்த்துவிட்டு அதை ஒருவன் கையில் கொடுத்துவிட வேண்டும். உன்னால் கூடுமானவரை பிராமணர்களுக்கு அன்னமிட வேண்டும். மேலும் மஹாமக உற்சவத்தை யொட்டி நடக்கும் விசேஷங்களில் நீயுங் கலந்து கொண்டு செலவில் ஒரு பகுதி உன் கையிலிருந்து போட்டால் மிகவும் அனு

கூலமாயிருக்கும். இது செய்த மாத்திரத்தில் உமக்கிருக்கும் பிரதிபந்தக தோஷம் உம்மைவிட்டு நீங்கும். நீர் பத்தினியுடன் மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானமாடி நேராகக் கும்பேசுவார் சன்னதிக்குச் சென்று ஆபரணாதிகளும் வஸ்திரங்களும் ஒன்றுசேர்த்து, ஒரு தங்கத் தாம்பாளத்தில் மாதுளை முத்துக்களைப் பரப்பி அவைகளை நன்றாய் மூடி ஒருபிராமணனுக்குத் தானஞ்செய்யும். ஸ்வாமிக்கு வேண்டிய வாகனாதிகளைச் செய்துவை; ஒருவருஷகாலம் அங்கேயே தங்கியிருந்து கும்பநாதர் தரிசனத்துடன் இருந்து கொண்டிரும்; முன் காலத்தில்தேவேந்திரனும் ஒருநாள் உற்சவம் நடத்தி ஜயந்தன் என்னும்ஓர் புதல்வனைப் பெற்றிருக்கிறான். ஆதலால் அரசே, நீர்சீக்கிரம் புறப்படும். ஆயாசப்படாதேயும், நானும் ஸ்நானத்துக்கு அவ்விடம் வந்துசேருகிறேன்''.

**கும்பகோணம் போய்ச் சேர்தல்.**

உடனே அரசனுக்கு ஒரு விதமான சந்தோஷமும் மனத்திருப்தியும் உண்டாயிற்று சாகல்யருக்கு யாகதக்ஷிணைகொடுத்து பின் தாமும் கூடவிருந்து அந்தயாகத்தை நிறைவேற்றியபிறகு சதுரங்கசேனையோடும் தன்பத்தினியோடும் புறப்பட்டுத் தீர்த்தயாத்திரை செய்துகொண்டிறுதியில் கும்பகோணம் போய்ச் சேர்ந்தார். முனிபுங்கவர்சொன்னபிரகாரமே அரசன்சகல காரியங்களையும் செய்துகொண் டிருக்கையில் சாகல்யரும் அங்குவந்துசேர்ந்து, அரசனுக்குவேண்டிய சகல உதவிகளையும் தாம்சமீபத்திலிருந்து செய்தனர். ஸ்ரீ கும்பேசுவாருடைய வரப்பிரசாதத்தினால் ஆறு மனைவிகளும் கர்ப்பவதியாகி ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள்.

அரசனது பட்டமஹிஷியான சோபனாங்கிக்கு பல

மஹாமகஸ்நானத்தினுல் துலவிருத்தி

வீரபராக்கிரமத்தோடும் முகதேஜஸ்ஸோடும் கூடின கார்த்தவீர்யார்ச்சுனன் பிறந்தான். காமாங்கி யென்பவளுக்குப்பிறந்த குழந்தைக்குக் காமன் என்று பெயர், மோஹனாங்கிக்கிப்பிறந்த சிசுக்கு ஸுகிமான் என்று பெயர், காமனுன் என்கிற இளைஞனை சித்திராங்கியினது குமாரன். சித்திரமோஹனுவுக்குப் பிறந்த பிள்ளைக்கே காமபாகு என்று பெயர். சித்திரரூபா என்னும் மாதராளுக்கு ஸுகாமுகன் என்று கூறப்பெற்ற சிறுவன் உதித்தான். பராக்கிரமசாலிகளாய் வந்திருக்கும் புதல்வர்கள் தனக்குப் பிறந்து, அதனுல்தான் சந்தோஷமடைய சாகல்யமுனிவரே காரணபூதராய் இருந்தமையின் அரசன் அம்முனிவருக்குச் சகல உபசாரங்களும் செய்து பூஜித்தான். கும்பேசுவரருக்கு மானியம்விட்டுப் பிராமணோத்தமர்களுக்குத் திருப்தியாகும்வரையில் தானங்கள் செய்து அவர்களது ஆசீர்வாதம்பெற்று புத்திரஸந்தானத்தோடுகூடி பாக்கியசாலியாய்த் தன்னூருக்குத் திரும்பினுன். புத்திரப் பேறில்லாதோர்க்குப் புத்திரப்பேறு உண்டுபண்ணும் மகாமகத்தின் சிறப்பே சிறப்பு!

---

### 3. பாப கர்மங்கள் பறந்தோடிய கதை.

ஸுதர்மா

தென்னிந்தியாவிலுள்ள தாம்பரவருணி தீரத்தில் வசித்துக்கொண்டிருந்த தேவசர்மா வென்பவன் விஜயாஸன சமஸ்தானத்தையே தனதுள்ளங்கவரும் உறைவிடமாய்க் கருதிவந்தான்; அவனுக்கு ஸுதாமா வெனும் பெயர்கொண்ட புதல்வனிருந்தான். விஜயாஸன் வமிசோத்பன்ன, கௌண்டின்ய கோத்திர திலக; கலாசாஸ்திரவிற்பன்ன நிதியாயிருந்தாரவர்; தனதானியங்கள் அவருக்கு விசேஷமுண்டு. அளவற்ற நிலமும்,

அதனிற்கிடைக்கும் அபாரபலனும், அதனுற் சேர்ந்திருக்கும் செம்பொன் நிரம்பிய செல்வமும் அவரிடம் பரிபூரணமாயிருந்தன. அவர் எத்தனையோ யஜ்ஞாதிகளைச் செய்திருக்கிறார். நல்ல பாண்டித்யமுடையவர். வசீகர முகமுடையவர். எல்லோரிடமும் பக்ஷமுடன் நடந்துகொள்ளும் பரமபக்த சிகாமணி, சொல்லுதற்கருமையான குணவிசேஷங் கொண்டவர்.

பாக்கியமில்லாப் பத்தினிகள்

சகல சம்பத்தும், சுசீலமும் பொருந்திய ஸுதர்மருக்கு எவ்விதத்திற் குறைவிருக்கக் கூடும்? ஸம்பன்ன சிகாமணியாய், சம்பாஷிப்பதில் சாதுர்யத்துடனிருக்கும் சற்குணராய் ஸுதர்மர் இளமைப்பருவத்திலிருந்தே பழகிப் பெருகிவந்திருந்தும் பத்தினிகளைப் பற்றிய தொல்லை அவருக்குப் பெருந்தொல்லையாகிவிட்டது. காந்திமதி என்னும் ஓர் அழகியபெண்ணை அவருக்கு விவாகஞ் செய்துகொடுத்த கொஞ்சகாலத்திற்கெல்லாம் அப்பெண் மங்கைப்பருவங் கடந்து மடந்தைப்பருவமடைந்தனள். புருஷனும் தானும் ஒன்றுகூடி இல்லறம் நடத்தவேண்டுமென்று காந்திமதி நன்குணர்ந்து தனது பர்த்தாவின் கிருகம் வந்து சேருமுன் ஜன்மாந்தர பாபத்தினுல் அவள் சுகித்திருக்க வியலாமற் போயிற்று; எனவே கணவ னகம் வந்து சேருமுன் அவள் மாண்டுபோனுள். ஸுதர்மருக்கு வயசும் அதிகமாய் ஆய்விடவில்லை. ஆதலால் இரண்டாவது தடவை மற்ெருருபெண்ணை மணந்தனர்; அவளும் அங்ஙனமே காலகதியாய்விட்டாள். இரண்டு மனைவிகளைப் பறிகொடுத்தோமென்ற வருத்தத்தினுல் மனம்நொந்து ஸுதர்மர் மூன்ருவதாக வேருேர் பெண்ணை மணந்தனர். யதாப்பிரகாரம் அவளும் அகமுடையானுடன் வாழும் பாக்கியத்தைப் பெறவில்லை. கடைசியில் இன்னும் ஒருமுறை விவாகஞ்செய்து பார்த்துவிடுவது என்று மனேதிடம் செய்துகொண்டு பின்னு

மொரு பெண்ணைப் பத்தினியாய்க் கொண்டனர். அதுவும் கடவுளுக்கு ஏற்கவில்லைபோலும்! முதல் மூன்று பத்தினிகளும் மரணமடைந்தனர்; நமக்கும் அக்கதிதானோவென்று பயமடைந்திருந்த நான்காம் பத்தினியும் பதியைவிட்டுப் பரலோகம்போய்ச் சேர்ந்தாள். கலியாணமும் கல்லெடுப்பும் சேர்ந்தாற்போல தாம் மணந்துகொள்வதும், மணந்துகொண்ட பெண்மணி மரித்துப்போவதும் ஆகப்பத்தினிக்குப் பின் பத்தினியாய்த் தாம் இழக்கும் துர்த்திசை என்னகாலத்திற்கோவென்று ஸுதர்மர் ஏக்கங்கொண்டிருந்தனர்.

பிறந்த புதல்வரும் இறந்தனர்

மகாவியஸனத்தோடு ஸுதர்மர் காலங்கடத்திவருகையில் அவருக்குப் பின்னுமொரு சாபல்யம் உண்டாயிற்று. கடைசியாக ஒருதடவை, கலியாணஞ்செய்துகொண்டு பார்த்துவிடுவது, இக்கன்னிகையாவது பதிசுச்ருஷை செய்துகொண்டு பிழைத்திராளாவென்று தனக்குள்ளேயே ஆலோசித்துக்கொண்டு மகா சௌந்தர்யமுள்ள விசித்திராங்கி என்கிற பெண்மணியை விவாகஞ்செய்துகொண்டார். கணவனின் குணம் எத்தன்மையதோ அங்ஙனமே இவளது குணமும். பந்து மித்திரர்களிடத்தில் அம்மாதராளுக்கிருந்த பிடிமானம்போல மற்றெவரிடமும் இராது. சுசீலத்வம் பொருந்தி சுகுணம் வாய்ந்து, சுந்தரரூபியாய் இருந்தனள் அம்மாதராள். இவளுமெங்கு முதல் நான்கு மனைவிகளைப்போல் பரலோகம் போய்விடுவாளோவென்று மனம் வெதும்பியிருந்த கணவனது உள்ளங்குளிர இப்பெண்மணி கர்ப்பந்தரித்து ஓராண்மகவையும் ஈன்றெடுத்தனள். ஸுதர்மருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை; பத்தினியும் நிலைத்துப் புதல்வனும் பிறந்தானென்ற சந்தோஷமே அவரது மனவிற் குடிகொண்டிருந்தது. இங்ஙனமிருக்கையில் அந்தக்குழந்தை இருந்தாற்போலிருந்து திடீரென்று மூன்றுமாதத்துக்கெல்லாம் கண்மூடிவிட்டது;

பத்தினியின் மீதிருந்த பாபம்போய் புதல்வன்மீது பாய்ந்ததாவென்ற துயரம் அதிகரித்துவிட்டது ஸுதர்மருக்கு; ஆயினும் அதை அதிகமாய்ப் பாராட்டாதிருந்தும் அடுத்தடுத்து அவருக்கு 18-புதல்வர்பிறந்து, அவர்கள் மும்மூன்று மாதத்துக்குள் பரமபதமடைந்ததைப் பார்த்து ஸுதர்மரின் மனம் முற்றிலும் உடைந்து முன்னிலும் பதின்மடங்கான துயரத்தில் ஆழ்ந்துவிட்டது.

**ஸுதர்மரின் தர்ம கைங்கர்யம்.**

பதினெண் பிரஸவங்களுக்குப் பிற்பாடு விசித்திராங்கி திரும்பவும் கர்ப்பந்தரித்து பத்துமாஸம் சுமந்து கருவுயிர்த்தாள்; இத்தடவை அவளுக்குப் பிறந்தது ஆண் குழந்தையல்ல, பெண்குழந்தையே. ஆயினும் என்னை? அதுவும் ஆண்குழந்தைகளையொப்ப இரண்டொருமாதம் வளர்ந்து மரித்தது. எத்தனையோ தர்மங்கள் செய்தார்; சத்திரஞ்சாவடிகளைக் கட்டினார். பஞ்சை பனாதைகளை சம்ரக்ஷித்தார்; வாயொடுங்கி வயிறொடுங்கிக் கிடக்கும் ஏழைகளுக்கு அன்னமிட்டார். பாபகர்மங்களைப் போக்கவல்ல பிராயச்சித்தங்கள் செய்தார்; அவர் செய்த ஸேதுஸ்நானம் மட்டும் இருபதுதடவை யிருக்கலாம். நாகப் பிரதிஷ்டையும் ஸர்ப்பசாந்தியும் செய்தார்; யாத்திரை புறப்பட்டார்; போகுமிடங்களிலெல்லாம் அவர் செய்த தர்மகைங்கர்யங்கள் எண்ணிறந்தவையாகும்.

**ஸுதர்மரின் விரக்தி.**

குபேர சம்பத்துடனிருக்கும் ஸுதர்மருக்குத் தானஞ் செய்வது ஒரு பெருங்காரியமா? புவியெங்கும் அவரது பெயர் பிரகாசம்பூண்டு விளங்கியது. அவருக்கோ வயது ஐம்பதுக்குமேல் ஆகியது. தானெடுத்த ஜன்மமே வீணென்று மதித்தார். அவர் தான் ஒரு மகா பாபியென்றும் தரணியில் பெண்டு பிள்ளைகளுடன் வசிக்க அருகரல்லவென்றும் தமக்குள்ளேயே அடிக்கடி யோசித்துக்கொண்டார். வீடெ

தற்கு, வாசலெதற்கு, ஆஸ்தி யெதற்கு, நிலபலங்களெதற்கு, என்று பலதடவைகளில் தம்மிடம் தாண்டமாடும் அஷ்டைசுவர்யங்களையும் நினைத்து நினைத்து உருகுவர். இவ்விதம் அவர் நினைத்திருந்தால் தம்மையறியாது அவருக்குத் துக்கம் வந்துவிடும்; கண்களினின்றும் நீர் சொரியும்; தன் நிலைமையை அவர் நன்கறிந்துகொண்டு சொற்பப் பணத்தைமட்டும் கையில் வைத்துகொண்டு மற்றதை யெல்லாம் மித்திர சர்மா வெனும் தம் நண்பரிடம் ஒப்புவித்துவிட்டார். புத்திரன் உண்டாகி தம்மிடம் கொஞ்சி விளையாடிக் களித்து அதனால் தமக்கு மகிழ்ச்சியுண்டாகும் வரையில் தாம் ஓரிடத்தில் நிலையாயிருப்பதில்லையென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டு மனைவியுடன் கூடப் புறப்பட்டுவிட்டார்.

ஸுதர்மரும் குசிகரும்

இத்தகைய விரக்தியோடு ஸுதர்மர் தாம் பிறந்த சமஸ்தானத்தைவிட்டு ஐந்தாறுகள் பிரயாணஞ் செய்த பிற்பாடு பூர்வஜன்ம பலனால் குசிகர் என்கிற புண்ணிய புருஷரைக் கண்டார். இவ்விருவரும் ஒருவருக் கொருவர் தத்தம் விருத்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டார்கள். குசிகர் த்ரிகாலஞானியானபடியால் ஸுதர்மர் பூர்வோதந்தங்களை ஞானதிருஷ்டியால் அறிந்து ஸுதர்மருக்குச் சொல்லவாரம்பித்தார்.

## ஜன்மாந்தர வாஸனை.

“முந்திய ஜன்மத்தில் நீர் வேத புரியில் ஒரு பிராமணரா யிருந்தீர். நல்ல பாண்டித்யமுள்ளவரா யிருந்தீர். அப்பட்டணத்திலிருந்த கோபாலரின் கோவில் மழையினால் உண்டான வெள்ளம் காரணமாக இடிந்து விழுந்துவிட்டது. அதைக் கட்டுவதற்காக நீர் முனைந்து எவரெவரிடமோ போய் யாசகம் செய்து அக் கோயிற் திருப்பணியையும்

பூர்த்திபண்ணிவைத்தீர். அதனாலேயே உமக்குத் தாம்பிர வருணி தீரத்தில் ஜனனம் உண்டாயிற்று; தனதான்ய ஸம்பத்துக்களும் உம்மிடம் குடிகொண்டன. இவ்வளவு புகழும் தனதான்ய ஸம்பத்துக்களும் யிருந்தாலும் உம் பத்தினிகள் உம்முடன் கூடி வாழ்ந்திருக்கவில்லையே, அதன் காரணம் என்னையெனில், கேளும்.

## பத்தினிகளைப் பறிகொடுப்பானேன்?

"கடந்த ஜன்மத்திற்கு முந்திய ஜன்மத்தில் குண்டினம் என்னும் பட்டணத்தில் ஒரு பிராமணகுலத்திற் பிறந்து, வளர்ந்து வஸித்துக் கொண்டிருந்தீர். உமக்குப் பத்துக் குழந்தைகள் பிறந்தார்கள்; அவர்கள் எல்லோரும் பெண் களேயாவர்; பெண் பெண்ணாய்ப் பிறந்துவிட்டதே யென்று வருந்தினீர். ஆயினும் ஏதாவது ஒருதினம் பெண்கள் அந்நியகுலத்துக்குத்தான் போகவேண்டியதாயிற்றே யென்று மனோதிடஞ் செய்து கொண்டீர். வருத்தத்தை யகற்றி வந்தது வரட்டுமென்று வெளிச்சந்தோஷங் கொண் டீர். பெண்களுக்குப் பக்குவகாலம் வந்தபிற்பாடு கலியா ணம் செய்வது பிராமணருக்குக் கூடாதேயென்று ஏங்கி யேங்கித் திகைத்தீர்; பெண்களை நாடிவரும் புமான்கள் எத்தனையோ பேர் என்று சந்துஷ்டியடைந்தீர்; உமது பெண்கள் அனைவரையும் 50 வயதுக் கிழவர்களுக்கு விவா கம் செய்து கொடுத்துக் கன்யாசுல்கம் வாங்கினீர், உம் வயிற்றிற் பெண்களாய்ப் பிறக்க நேரிட்டதேயென்று அந்தக் கன்னியர் பதின்மரும் தமக்குள்ளேயே வருந்தினர்; தம் யௌவனம் எல்லாம் வீணாகியதே யென்று, வெதும்பி வெதும்பி உம்மைச் சபித்துக் கொண்டு சிலர் பிராணனை விட்டார்கள். சிலர் தாம்பிரவருணி யாற்றில் விழுந்து இறந்தார்கள்; வேறுசிலர் விஷமுண்டு மாண்டார்கள். அக் கன்னியரின் சாபமே உம்பத்தினிகளைத் தொலைத்த தென்க.

இப்போதிருக்கும் மனைவிமட்டும் பிழைத்திருக்கிறாளே யென்றால் அதற்கும் ஒரு காரணம் இருக்கின்றது. உமது பெண்களில் கடையவளான 10–வயதுக் குழந்தையைக் கன்னிகாதானமாகக் கொடுப்பதாய்ச் சொல்லி விவாகஞ் செய்வித்த நீர், அப் பெண்மீது அசமுடையான் போட்ட கனகாபரணங்களைக் கழற்றிக் கொண்டு புருஷன் வீட்டிற்கனுப்பினீர். அது தோஷமே யானாலும் அப்பெண்ணின் யௌவனம் கெட்டுவிடாதபடி அவளை நல்ல சம்பத்துடைய கல்விமானுக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தீர்; அதனாலேயே உமக்கு இப்போதிருக்கும் மனைவி ஜீவித்திருக்கிறாள்.

## புத்திரர்களும் இறப்பானேன்?

"கோவில் சொத்தைக் கொள்ளை கொள்ளலாகாது; அரசன் சொத்தை அபகரிக்கலாகாது; இரண்டும் மகாபாபமான காரியங்கள். கோவில் சொத்திலாகட்டும் ராஜாங்க சொத்திலாகட்டும் ஆசைகொண்டு அபகரித்துவிட்டால், அது காரணமாக நேரிடுந் தீங்குகள் செப்பவியலாது அதற்காகவே 'அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்' என்கிற பழமொழியும் ஏற்பட்டிருக்கின்றது. ஸுதர்மரே, நீர் அந்த ஜன்மத்தில் தாம்பிரவருணி தீரத்திலேயே வஸித்துக் கொண்டிருந்தீர். அந் நதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த உத்தியான வனங்கள் பலவற்றுள் ஸ்ரீ வைகுண்டவாஸர் கோவிலுக்குச் சொந்த மானதும் ஒன்று; அவ்வுத்தியான வனத்தில் வாசனை பொருந்திய புஷ்பச்செடிகளும், அல்லி, நீலோத்பலம், தாமரை முதலிய புஷ்பங்கள் கொண்ட தடாகங்களும் நீர் நிலைகளுமிருந்தன பக்தர் ஆங்கு சென்றால் யோகத்துக்குறிய இடமென்று அதனைப் போற்றுவர்; யௌவனர் ஆங்கு சென்றால் *

* அரவிந்த மசோகஞ்ச சூதஞ்ச நவமல்லிகா
நீலோத்பலஞ்ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ய ஸாயகா:--அமரநிகண்டு.

மாரன்கணைகளால் மருங்கி விழிப்பார். அந்த உத்தியான வனத்தின் சிறப்பைச் சொல்லிமுடியாது. அப்போப்பட்ட நந்தவனத்தில் நன்றாய்க் காய்த்துக் கனித்திருந்த பழங்களைப் பார்த்து நீர் ஆசைகொண்டு அவைகளைத் திருடிவிட்டீர். அப்பழங்கள் ஸ்ரீ வைகுண்டவாஸருக்குத் தினஸரி நிவேதனமாக வேண்டியவைகள். ஸர்வேசுவரனுக்கு அந்தப் பழங்களின் மீது அதிக திருப்தி. நிவேதனத்துக்கு இடந்தராமல் அப்பழங்களை நீர் பறித்துக்கொண்டு போனமையால் உமக்குச் சந்தோஷ முண்டாக்கும் உம் புதல்வரும் உம்மிடமிருந்து பறிபட்டுப்போயினர். இத்தகைய பாபகர்மங்கள் உம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதே இப்போது நீர் துயரமடைவதற்குக் காரணமாய் நிற்கின்றது.

பாபம் பறந்தோடுவது எப்படி

"இவ்வளவுதூரம் உமக்கு நீர் செய்த பூர்வ ஜன்மபாப கர்மங்களையும் அவைகளால் இந்த ஜன்மத்தில் உமக்குத் துன்பம் வந்து லபித்திருப்பதையும் எடுத்துச் சொன்னேன். இனி அந்த துர்க்கருமவினைகள் உம்மைவிட்டு நீங்கி உமது தருமத்துக்கேற்ற பலன் விளைக்குமாறு ஒருபாயஞ் சொல்லுகின்றேன்: கும்பகோணம் என்கின்ற திவ்விய க்ஷேத்திரத்தில் மஹாமக உற்சவம் மாசி மீ நடைபெறப்போகிறது; அந்த சமயத்தில் நீர் அவ்விடம் போய்ச் சேர்ந்து நவ கன்யர்களுடைய அனுஜ்ஞையின் பேரிலும் பிராமணர்களுடைய அநுஜ்ஞையின் பேரிலும் நியமத்தோடு நீராடி ஸ்தோத்திரஞ் செய்தால் உமது பழைய கால வினைகள் பறந்துபோய்ச் நற்கதி கிடைக்கும்; பிறக்கும் புதல்வர்களும் பிஞ்சிலேயே யிறக்க மாட்டார்கள். எனக்கும் ஜீவகுஷ்டமென்கிற வியாதி வந்திருக்கிறது. பூர்வத்தில் நான் இரும்பைத் திருடியதே இந்த ஜன்மத்தில் இந்த வியாதியாய் என்னை வாட்டுகின்றது. இந்த வியாதி நிவாரணமாகக் கன்யாதீர்த்தமே

175373

யெடுத்தது என்று அகஸ்தியர் போன்ற பெரியோர் கூறி யிருக்கிறார்கள். ஆதலால் அந்த மஹா க்ஷேத்திரத்துக்குப் புறப்பட்டுப் போவோம் வாருங்கள்."

மஹாமகத் தினலேதான்

இவ்விதம் அழைத்த குசிகரோடு ஸுதர்மர் சேர்ந்து தன் பத்தினி சகிதமாய்க் கும்பநாதருக்கு ஆஸ்தானமா யிருக்கும் கும்பகோணம் போய்ச் சேர்ந்தனர். அவ்விடத்தில் விதிப் பிரகரணங்களை அனுசரித்து சகல வித மான தானங்களையும் மற்றும் செய்யவேண்டி யிருந்த சமஸ்த காரியங்களையும் செய்து முடித்தார். கும்பேசுவா ருடைய திருச்சந்நிதானத்தில் முனிவர் கூறியவண்ணம் மாதுளம் பழத்தைப் புதுவஸ்திரத்தில் மூடி தானஞ்செய்து ஒரு வருஷம் வரை ஸ்ரீ ஆதிகும்பேசுவரரைத் தியானஞ் செய்துகொண்டே ஸுதர்மர் இருந்தார். இரும்பு முத லான உலோக வஸ்துக்களைத் தானஞ் செய்து குசிகர் குஷ்ட ரோகத்திலிருந்து விடுபட்டார்; காலக்கிரமத்தில் ஸுதர்மருக்கு ஒழுகிய புதல்வன் பிறந்தான்; அவனுட னும் குசிகருடனும் தனதிருப்பிடம் வந்து பின் வெகு காலம் அவர் தம் பத்தினி ஸகிதமாய் மனக்கவலையின்றி மனமகிழ்ந்திருந்தனர்; பாப கர்மங்கள் பறந்தோடுவது மஹாமக ஸ்நானத்தினலன்றோ?

---

## 4. நாகத்தைப் பிளந்த பாபம் விமோசனம் ஆன கதை.

அரசனும் அவன் மனைவியும்

நீர்வளம், நிலவளம், முதலான அறுவகை வளங்களும் சேர்ந்தமைந்து கனமிகுந்தொழுகும் கலிங் கதேசத்தைப் பூர்வத்தில் வீரசர்மா வெனும் அரசன் ராஜ்யபாரஞ் செய்துவந்தான். தைரிய வீரியமும், சாந்த சீலமும், தணி வும், பணிவும் உள்ள அவ் வமைச்சன் யஜ்

ஞங்கள் முதலான சற்கருமங்களைச் செய்வதில் மிகுந்த பிரீதிகொண்டிருந்தனன். வைதிகர்களைக் கண்டால் அவனுக்குப் பரமசந்தோஷம்; வேதாத்தியயனஞ் செய்யும் விற்பன்னர்களைக் கண்டால விதரணையோடு ஓடிவந்து உபசரிப்பான். 'தேஹி' என்று வாய்திறந்து சொன்னவர்களுக்கு 'நாஸ்தி' என்று சொல்ல மாட்டான். எளியவர்களிடம் அவ்வளவு தூரம் இரக்கங்கொண்டவன். அவனுடைய குண விசேஷங்களுக்கு ஒவ்வியவாறே மனையாளுமிருந்தனள்; அவளுக்கு ஸுமதா என்று பெயர். க்ஷமையும் சாந்தமும் உருவெடுத்து உதித்தவள். சத்திய சீலையென்றால் அவளுக்கே தகும். மிக்க பதிவ்ருதை.

**கோரரூபியான குழந்தை**

இந்த லலனாசிரோமணிக்கு அவளது பந்துக்களிடத்தி
லும் பிரஜைகளிடத்திலும் பரமபக்தியும்
விசுவாசமும் அநேக தடவைகளில் தம்
ஏழைப் பிரஜைகளுக்காக மனமிரங்கி நற்
காரியங்கள் செய்த சமயமு முண்டு. இவ்விதமாகக் கணவனைப்போல மனைவியும் மனைவியைப்போலக் கணவனும் வாழ்ந்து வருகையில் ஸுமதா கர்ப்பவதியானாள்; அந்தந்த மாசத்துக் குரிய சகல குறிகளும் தோன்ற, அரசன் மனமகிழ்ந்து தனக்குப் பிற்காலம் ராஜ்யமாள ஓர் அருந்தவப் புதல்வன் பிறப்பான் என்று நிச்சயித்கொண்டிருந்தான். பத்துமாதம் பரிபூரணமாகிய பின்னர் ஸுமதா கருவுயிர்த்தனள்; அரசன் எண்ணியது போலப் புதல்வன் பிறந்தனனேயாயினும்; அப்புதல்வன் ராஜ்யமாளப் பிறந்தவனாகத் தோன்றவில்லை. ஏனென்றால் அச் சிறு குழந்தையின் ரூபம் கோரமாயிருந்தது; பார்ப்பதற்கு மிக்க அஸஹ்யமாயும் பயமாயும் இருந்தது. அக்குழந்தையின் தலையில் மயிர்கிடையாது; முழுவழுக்கையாயிருந்தது; மற்றொரு கண்ணுக்கு மலரேகிடையாது. குறியும் பும்ஸத்வம் வாய்ந்ததாகத் தோன்றவில்லை. நபும்ஸகச்சின்

னங்களே தெரிந்தன. பார்த்தோர் பலரும் அக் குழந்தையைக் குலத்தைக் கெடுக்கவந்த கோரரூபி என்று கரித்தும் பரிகசித்தும் பேசினர்கள்.

தம்பதிகளின் தடுமாற்றம்

பிறந்த புத்திரனை அரசனும் அரசியும் என்ன செய்வர் பாபம்! குப்பை மேட்டிற் கொண்டுபோய்த் தள்ளிவிடுவரா? அல்லது வேறெவர்க்காவது கொடுத்துத்தான் விடுவரா? கொடுத்தாலும் வாங்கி அக்கோரரூபியை வளர்ப்போர் யாவர்? தம்பதிகள் பன்முறைகளில் இம்மாதிரியான குழந்தை பிறந்துவிட்டதேயென்று மனம் வெதும்பித் தவித்தார்கள். இந்த அரூபமான குழந்தை பிறந்திருப்பதைக் காட்டிலும் குழந்தை பிறவாமலே யிருந்தால் வெகு உத்தமமாயிருந்திருக்குமென்று பிரஜைகளுட் பலர் சொல்லிக்கொண்டிருப்பது தம்பதிகள் செவிக்கெட்டியதும் அவர்களுக்கிருந்த துயரம் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்ததென்பதை யாம்சொல்லவும் வேண்டுமோ? என்ன கர்மத்தினாலோ இப்படிப்பட்ட குழந்தை நமது வயிற்றில் வந்து ஜனிக்கட்டுமென்று பிரமதேவர் சிருஷ்டித்தாரோ தெரியவில்லையெனத் தம்பதிகள் மனவ்ருத்தமுற்றார்கள்; ஒன்றுந்தோன்றாமல் எக்காரியத்திலும் மனம் பிரவேசியாமல் தடுமாறி நின்றது.

தடுமாற்றந் தீர்க்கவந்த தபோநிதி

இத்தகைய தடுமாற்றமான நிலைமையில் ராஜ தம்பதிகள் இருக்கையில் பலபேர் வந்து அந்த் தோஷமென்றும் இந்த தோஷமென்றும் பலவிதமாய்ச் சொல்லி என்னென்னவோ பரிகாரங்கள் செய்வித்தார்கள்; குழந்தையைக் குறித்து வந்து கூறினர் ஒவ்வொருவருடைய வார்த்தைக்கு மிணங்கி அரசன் சகல விதமான சத்துவம் பொருந்தியதெனச் சொல்லப்படும் சடங்குகள் செய்தும் குழந்தையின் கோரரூபம் மட்டும் மாறவில்லை. குழந்தை பலபேரது நகைப்புக்கும் பரிகாசத்துக்கும் இடங்

கொடுப்பதாயிருந்தும் ராஜதம்பதிகள். அதை அசட்டை செய்யாமல் அதற்குச் செய்யவேண்டிய கருமங்களனைத்தையும் தவறாமற் செய்துவந்தார்கள். இங்ஙனமிருக்கையில் ஒருநாள் சாண்டிலியர் என்னும் முனி சிரேஷ்டரொருவர் அரசனிடம்வர அவரது சௌரவத்துக்கும் அந்தஸ்துக்கும், மஹிமைக்கும் தகுந்தபடி வரவேற்று உபசரித்து பின்னர் தம் மனத்துயரத்தைத் தெரிவித்தார்கள். சாண்டில்யர் சாவதானமாய்க் கேட்டுச் சிறிதுநேரம் யோக நிஷ்டையில் அமர்ந்து பிறகு பின்வருமாறு சொல்லலுற்றார்.

தபோநிதியின் திருவாக்கு

"அரசே! ராஜ்யாதிகாரம் உம்மிடத் திருப்பினும் உமக்கு மனச்சந்துஷ்டி கொஞ்சமேனும் இல்லை. அதற்குக் காரணம் நீர் பூர்வ ஜனமத்திற் செய்த துர்க்கருமமேயாம். பூர்வ ஜன்மத்தில் நீர் அரசனாகவே யிருந்தீர்; அரண்மனைப் படிக்கட்டுகளை யமைக்கும் போது நாகஸர்ப்பம் பதிக்கப்பட்டிருந்த கல்லொன்றை யெடுத்து உபயோகப்படுத்திக் கொண்டீர். அந்தக் கல் எவ்விட மிருந்ததென்றால், பூர்வஜன்மத்திலே உமக்குக் கோரரூபியாய் ஒரு பிள்ளை பிறக்கப் பிராமணர்கள் பலர் ஒன்றுசேர்ந்து நாகப் பிரதிஷ்டை செய்யும்படி உமக்குப் போதித்தார்கள். அதற்கிணங்கி நீரும் நாகப்பிரதிஷ்டை செய்து வைத்தீர். பிரதிஷ்டையான அதே கல்லை உமது அரண்மனைவாயிற் படிக்கட்டுக்கு உபயோகப்படுத்தி விட்டீர். உபயோகப்படுத்தியதெப்படி யென்றாலோ, பிரதிஷ்டையான அக்கல்லை யெடுத்துப் படிக்கட்டுக்குச் சரியாக இரண்டாய்ப் பிளக்கும்படி உத்தரவு செய்துவிட்டீர், அதற்காகவே உமக்கு விரூபமான புத்திரர்கள் பிறக்கின்றனர். இந்தப்பாபம் விமோசனமாக ஒருபாயம் சொல்லுகின்றேன், கவனியும்.

"பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருவிசை கும்பகோண க்ஷேத்திரத்தில் மஹாமகம் என்றதோர் உற்சவமானது வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. பத்னீஸமேதராய் நீர் அந்த க்ஷேத்திரத்துக்கு எழுந்தருளி ஆங்குள்ள கன்யாதீர்த்தத்தில் ஸ்நானமாடிப் பின் கும்பேசுவரரைத் தரிசனம் பண்ணும். விதிப்பிரகாரம் அரச மரத்தடிபோய்ச் சேர்ந்து பிராமணரைப் பூஜைசெய்யும், தென்னம்பிள்ளைகளைப் பலபேருக்குத் தானமாய்க் கொடும்; மற்றுமொருமுறை ஸர்ப்பசாந்தி செய்யும்; விருக்ஷராஜனை ஸ்தோத்திரஞ் செய்யும். தில பிண்ட தானத்துடன் 50 பலம் வெண்ணெயில் ரத்தினங்கள் நிரப்பி ஒரு சிவரூபத்தைச் செய்து தானம்பண்ணும்."

செய்யவேண்டிய தானங்கள்

முனிவர்சொன்னதை வெகு கவனமாய்க் கேட்ட அரசன் தக்ஷணமே வேண்டியமுஸ்தீப்புகளோடு கும்பகோணத்துக்குப் புறப்பட்டுச் சென்று நல்ல விடுதிவாங்கி அதில் தங்கினான். தினம் தினம் கன்யாதீர்த்தத்தில் ஸ்நானம்; கும்பநாதரின் தரிசனம்; தினந்தோறும் பிராமணபோஜனம்; இம்மாதிரியாய் நடந்து வந்தது. செய்த தானங்களுக்கோ கணக்கில்லை. மஹாமக உற்சவத்தில் சாண்டில்ய முனிவர் சொன்னபிரகாரம் ஒவ்வொன்றையும் அனுஸரித்து நிறைவேற்றியபின்னர்க் கும்பகோணத்திலேயே அரசன் கொஞ்சகாலம் வாஸஞ்செய்து கொண்டிருந்தான். கர்ப்பந்தரியாதிருந்த பத்னியுங் கர்ப்பந்தரித்து ஸௌந்தர்யம் பொருந்தியதொரு புத்திரனை ஈன்றனள். அரசன் பிறகு தன்னூருக்குத் திரும்பி புத்திரனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்து அவனுக்குத் தகுந்தவயது வந்தபிற்பாடு ராஜ்யாபிஷேகஞ் செய்து ராஜ்யத்தை அவனிடம் ஒப்புவித்துப் பிறகு தம்பதிகள் கும்பகோணத்துக்குத் திரும்பி

பாப விமோசனம்

வந்து கும்பேசுவரன் கோவிலுக்கும் கன்யாதீர்த்தத்துக்கும் போதுமான திருப்பணிகள் செய்து அந்த க்ஷேத்திரத்தையே தமது வாஸஸ்தானமாய்க் கருதி காலங் கழித்துவந்தார். நாகத்தைப்பிளந்த மஹா பாபம் விமோசனமானதற்கு மஹாமகஸ்நானமே காரணபூதமாய் நின்றதல்லவா? என்னே அதன் மஹிமை!

## 5. பிதுர்ஹத்தியினல் நேர்ந்த பெரும்பாபம் நீங்கின கதை.

---

மனோஹரமான குடும்பம்

கொங்கணதேசத்திலே சமுத்திரதீரத்தில் யஜ்ஞசீலர் என்னும் பிராமண ரொருவர் வசித்துக் கொண்டிருந்தார்; அவர் கண்வர்வமிசத்திற் பிறந்தவர்; சுருதி, ஸ்மிருதிகளில் தேர்ந்தவர்; நல்ல படிப்பாளர்; தெய்வபக்தி கொண்டவர்; இவருக்கு ஏற்றவளாகவே ஸம்பூர்ணலக்ஷ்மி என்னும் மாதராளும் மனைவியாயிருந்தாள். அகமுடையானுக்குச் செய்யும் கடமைகளில் அவள் சிறிதும் பின்வாங்குவதில்லை; மஹாபதிவ்ருதை; பதியையே தெய்வமாகக் கருதுபவள். இவர்களது குணவிசேஷங்களை யொட்டியவாறே இவர்களுக்கு ஒரு புதல்வன் உதித்தான். அவனுக்கு ஞானவான் என்று பெயர். சிறுவயதிலேயே இவனுக்கு யஜ்ஞசீலர் நன்றாய்க் கல்வி பயிலுவித்து உலகஞானமும் செவ்வையாய்த் தெரியும்படி ஆராய்ச்சிசெய்து காட்டினர். மாதா பிதாக்களிடத்தில் இவனுக்குப் பரமவிசுவாசம்; பிதிருவாக்கிய பரிபாலகனுமிருந்தான், இத்தகையகுணவான் தன்னருமைத் தந்தையோடும் தாயோடும் இனிது காலங்கடத்திவந்தான். இவ்வளவு ஒற்றுமையுள்ள குடும்பத்தை மற்றெங்கும் காண்பது அரிதுஎன்று பார்ப்பவர் சொல்லும்படியாய் இக் குடும்பம் அவ்வளவு மனோஹரமாயிருந்தது.

கூர்ம யஜ்ஞம்

இவ்விதமாகக் காலங்கழித்து வருகையில் யஜ்ஞசீல ருக்கு ஓராவலுண்டாயிறறு. தமது 80-வது வயதில் தமக்குப்புதல்வன் பிறந்ததை யநுஸரித்து மிகவும் திருப்தியடைந்து பிதுருக்களின் திருப்திகரமாக கூர்ம யஜ்ஞம் செய்ய நினைத்தார். மேன்மை பூண்டுவிளங்கும் யஜ்ஞங்களில் இதுவும் ஒன்று. தேசத்தில் நன்மை யுண்டாவதை யுத்தேசித்தும் கர்மவினைகள் தீர்ந்து முக்திகிடைக்கும் பொருட்டுமே இந்த யஜ்ஞம் செய்யப்படுவதாகும். யஜ்ஞம் ஆரம்பமாகிக் கூர்மத்தை (ஆமையை)க் கொண்டுவந்து சேர்க்கும்வரையில் யஜ்ஞகுண்டத்தில் வீற்றிருக்கும் யஜ்ஞகர்த்தன் எவ்வித மான ஆகாரத்தையும் சாப்பிடலாகாது. அது நீராகாரமானாலும் சரி, கெட்டியாகாரமானாலும் சரி, எதுவும் உதவாது. இவ்வளவு சிரமமான கூர்மயாகஞ் செய்யக்கருதினார் யஜ்ஞசீலர்.

ஆமைதேடிப் புறப்படல்

யாகத்துக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்து கொண்ட பின்னர் யஜ்ஞசீலர் தம் புத்திரனோடும் மனைவியோடும் மற்றுமுள்ள மித்திரர்களோடும் யாகசாலைக்குப் புறப்பட்டுப் போனார். முதல் முதல் ஆகவேண்டிய சங்கற்பாதிகள் முடிந்ததும் யஜ்ஞசீலர் தம் புதல்வரை யழைத்து, 'குழந்தாய், கூர்மயாகஞ் செய்ய எல்லாம் தயாராயிருக்கின்றது. கூர்மம் (ஆமை) வர வேண்டியது தான் பாக்கி, நீ சமுத்திரத்துக்குச் சென்று கரையில் நின்று கொண்டு "யத்கூர்ம" என்கிற மந்திரத்தை ஜபம் செய்து கொண்டிரு. மூன்று தினங்களுக்குள் சமுத்திர ராஜன் அந்த யாகத்துக்கு உதவும் ஆமையை உன்னிடம் கொண்டுவந்து கொடுப்பார். அதை ஜலத்தோடு ஒரு பாத்திரத்திற் போட்டு "மமகூர்ம" என்கிற மந்திரம் ஜபித்துக்கொண்டு வந்து சேர், சமுத்திர தீரத்தில் நீ ஜபித்துக் கொண்டிருக்கும்போது

மத்தியில் எவ்வகை விக்கினம் நேரிட்டாலும் அதை லக்ஷியஞ் செய்யாதே. ஏனெனில் இவ்விடத்துக் காரியம் கெட்டு விடுவதோடு யஜ்ஞகர்த்தாவின் உயிருக்கும் சேதம் நேரிடும். நான் சொல்வதை யெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு புறப்படு," என்று சொன்னார்.

ஆழாழியில் தோன்றிய ஆரணங்கு

இது கேட்ட ஞானவான் பித்ருவாக்கிய பரிபாலனராதலின் அவரது ஆஜ்ஞையைச் சிரமேற்கொண்டு புறப்பட்டார். ஆமை வந்த பிறகே யாகம் ஆரம்பமாகும் என்பதை அவர் அறிந்தவராதலால் சீக்கிரமாகவே அந்தக் கொண்டுவரவேண்டுமென்று பேராவல் கொண்டு மாதா பிதாக்களுடைய ஆசீர்வாதம் பெற்று ஞானவான் புறப்பட்டார். கையில் தர்ப்பை, பாத்திரம் முதலியவைகளை யெடுத்துக்கொண்டு சமுத்திர தீரத்தில் நின்று "யத்கூர்ம" மென்ற மந்திரத்தை ஜபிக்கலானார். விடாது சமுத்திரராஜனைப் பிரார்த்தித்தவாறே ஒரே நிலையில் ஞானவான் நிற்கையில் முதலிரண்டு நாள் கழிந்து மூன்றும் நாள் பகலும் தீர்ந்துவிட்டது. பாக்கியிருப்பது மூன்றும் நாள் மாலைப் பொழுது; அது தீர்ந்துவிட்டால் ஆமை இவன் கைக்கு வந்து இவனும் புறப்பட்டுவிடுவான். ஆனால் ஈசுவரனுக்கு ஞானவானைச் சிறிது சோதிக்கவேண்டுமென்று கருத்துண்டாகவே, யௌவன பருவமுடைய மாதராள் ஒருத்தியை சிருஷ்டித்து கையில் ஒரு வீணையுடன் ஞானவான் முன்னர்த் தோன்றச் செய்தார்.

வந்த மாயையின் கானஜாலம்

சமுத்திரத்தில் சற்றும் ஓய்வில்லாமல் உயரமுயரமாய் வரும் அலைகளின்மீது நடந்துவருபவள் போல் இந்த மாயையான மாதராள் மெல்ல மெல்லக் கையில் ஒரு வீணையுடன் மனதை வசீகரிக்கும் மனோஹரமான ஆபரணாலங்கிருதையாய் ஞானவானுக்கு முன்னிலையில்

வந்து நின்ருள். அவளுக்கு சுமார் 16-வயதிருக்கலாம்; நல்ல ஸௌந்தரரூபி; நெற்றியழகும், அவளது முககலா விலாஸமும் பவளவாயும் வெண்முத்துக்களையொப்பப் பல் வரிசையும், அவளது அழகிய சடைப்பின்னலும், மெல்லிய பளபளப்பான பட்டு உடையும், ஒன்றுசேர்ந்து பார்க்கின் இவளென்ன ரதிதேவியோவென்று தோன்றும். அவள் ஞானவானைப் பார்த்துத் தனது கானத்தைக் கேட்டானந் திக்கும்படி வேண்டிஞள்; தனது யௌவனத்துக்கேற்ற புருஷன் அவன்தான் என்று மயங்கவிளம்பினுள். அந்த சமுத்திரதீரத்தில் வேறெவருமில்லையாதலால் தன்னேடு ஞானவான் மனமுவந்தவாறு யிருக்கலாமென்று மன்ருடிஞள். நல்ல பதியாக அடையவேண்டுமென்று இத்தனைநாள் தபவிருந்து இப்போது தங்களைக்கண்டதும் இன்றுதான் நம் தபசுக்குப் பலன் சித்தித்ததென்ற மனேதைரியத்துடன் நான் வெளிப்புறப்பட்டுவந்தேன் என்ருள். இனியகுரலோடு தான்பாடுங் கீதங்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் புத்தி வேறென்றிலும் செல்லாது, தன்மீதிலேயே செல்லும்; ஆதலின் செப்புதற்கரிய சுகமனுபவிக்கலாம் என்ருள். தன்னைப்போன்ற ரூபவதியை அதுவரையிற் கண்டிருக்க மாட்டீரென்று பெருமை பேசிக்கொண்டாள்; அவருக்காக வென்றே தான் புவியினில் ஓடிவந்ததாக வீரியம் பேசிஞள். மனேஹரமானதொரு பாட்டும் பாடிஞள். வேறென்னவோ சாகசக்கியங்களெல்லாம் செய்து பார்த்தாள். எதற்கும் ஞானவான் இணங்கவில்லை. கடைசியாகத் தன்னை அவர் வரிப்பதாக வாக்குக் கொடாதபக்ஷத்தில் அவர் காலடியி லேயேதான் விழுந்து பிராணனை விட்டுவிடுவதாகவும் தெரி வித்தாள்.

முதன்முதல் ஞானவான்தன்னுலானமட்டும் அவளது

கானஜாலத்தினால்மனங்கரைந்த ஞானவான்

சாகசக்கியங்களுக்கு இடங்கொடாமலிருந்தான். எனினும் அந்த மாயையானது சர மாரியாகத் தத்துவ சாஸ்திரங்களினின்றும் தன் மனுவிற்கிணங்கினுல் யாதொரு துன்பமும் வந்து லபிக்காதென்பதற்குப்போதுமான ஆதாரங்கள்காட்டிப் பேசிவரவே ஞானவானுக்குக் கொஞ்சங்கொஞ்சமாய் அவளுடன் சம்பாஷிப்பதில் மனஞ் செல்லலாயிற்று. இந்த நோக்கத்தையறிந்த மாயையானது ஸ்தாவர ஜங்கமங்களைக்கூட உருக்கும்படியாய் ஒரு கீதம் பாடினுள். முகஜாடையினுல் ஞானவானுடைய மனம் இளகியதைக் கண்ணுற்று, அவள் திரும்பவும் தான் பணம், பூமி, வஸ்திரம் முதலிய எவையும் இச்சிக்கவில்லையென்றும், தான் இச்சிப்பது ஞானவானது மனஸேயென்றும் உரைத்துக் கையிலிருந்த வீணையையும் மீட்டவாரம்பித்துவிட்டாள். அந்த நிர்மானுஷ்யமான தீரத்தில் தன்னையும் அப் பெண் மணியையுந் தவிர வேறெவருமில்லையேயென்று ஞானவான் சிறிது நேரம் கானம் கேட்கலாமென்று இச்சைகொண்டதை சூசகமாய் அவள் உணர்ந்து பாடவாரம்பித்தனள். தன் தகப்பனர் உபவாஸத்தையும், தான் பிருதிவாக்ய பரிபாலனஞ் செய்யவேண்டி அவ்விடம் வந்திருப்பதையும் மறந்து ஞானவான் இரவு பகலென்று கூடப் பாராமல் ஏழுநாள் பரியந்தம் அந்த மாயையின் வலையினுள் சிக்குண்டுகிடந்தான்.

மாயையின் மறைவு; ஞானவானின் துயரம்

'ஆசை அறுபதுநாள், மோஹம் முப்பதுநாள்' என்பது சாதாரணமான நடை முதற் பழமொழியாயிற்றே. அதுபோல இந்த ஞானவானது மனவுணர்ச்சி முழுவதும் ஏழுதினம்வரை அவளிடம் சென்றிருந்தது. ஏழாம் நாள் மத்தியானத்தில் கானஜாலஞ் செய்துகொண்டிருந்த மாயையும் மறைந்துபோனுள். தக்ஷணமே இவருக்குத் தன் சொந்த ஞாபகம் வரவும், ஆஹா!

மதிமோசம் போனதேயென்று, வருந்தினர். வந்தவள் சமுத்திர தேவதையோ அன்றி உண்மையான மானுஷப் பிரகிருதியோ வென்று யோசனை செய்தவாறே மூன்று தினம் பிரமித்துநின்றார். பிறகு தம்புத்தி சலனமடைந்து நெகிழ்ந்ததைக் கொண்டு மனவருத்தமுற்றும், பத்துதின மாய்த் தன் பெற்றோர் என்ன துக்கத்தை யடைந்து கொண் டிருக்கிறார்களோ வென்று சிந்தித்தும் சமுத்திரராஜனைப் பிரார்த்தித்து ஆமையைப் பெற்றுக்கொண்டு திரும்பினன்; வரும்வழி முழுவதும் தன்னுடைய காரியத்துக்கு விக்னம் நேர்ந்ததால் யாககர்த்தருக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்திருந் தால் என்னசெய்வதென்று வியசனமடைந்தார். ஆமையை ஜலத்தில்போட்டு, பிரம்மயத்திரத்தினல் மூடி, வெகு வேக மாய் யாகசாலைக்கு வந்து சேர்ந்தார்.

யஜ்ஞசீலரோ தம் புதல்வன் ஞானவானுக்குக் கூறியபடி மூன்று தினத்துக்குள் கூர்மத்தையவன் கொண்டுவந்து சேருவான் என்று மதித் திருந்ததற்கு மாருக அவன் வராமற்போக வே, அவர் மனந்தளர்ந்து, வழியில் என்ன துன்பம் நேர்ந்ததோ, இன்றைத்தினமேனும் வாரானோவென்று ஒவ்வொருநாளாய்க் கழித்துவந்தார். ஞான வான் புறப்பட்டுவந்ததுமுதல் ஆமைவந்து சேர்ப்பிக்கப்படும் வரை இவர் உபவாஸமிருந்து பார்த்தார். ஏழுநாள் பரியந்தம் வெகு சிரமத்துடன் உயிரைவைத்திருந்து இறுதியில் தாங்க மாட்டாதவராய் யஜ்ஞசீலரும் அவரது மனைவியும் பரமபத மடைந்தார்கள். அங்கிருந்த ருத்விக்குகள் (யாகத்தில் ஒவ் வோரமிச்ம் செய்வதற்கதிகாரம் பெற்றோர்) எல்லோரும் இருந்தவிடந்தெரியாமல் ஓடிவிட்டனர். பந்துக்களிற் சிலர் மட்டும் தங்கியிருந்தனர். அந்த ஸமயத்தில் ஞானவான் ஆமையுடன் வந்து சேர்ந்தான். தனக்காகப் பெற்றோர் காத்திருந்து பரலோகஞ் சென்றதை நோக்கி மிகவும்

பரமபத மடைந்த பெற்றோர்

வியசனமுற்றுக் கொண்டுவந்த ஆமையைச் சமீபத்திலிருந்த தொருதடாகத்தில் எறிந்துவிட்டுப்பின் ஆகவேண்டிய பிதிரு ஸம்ஸ்கார காரியங்களைச் செய்துமுடித்து நைமிசம் என்னும் பெயர் கொண்டவனத்தை நோக்கிச் சென்றான்.

நைமிசம் என்பது வேதாகமவிதிகளை அனுஸரிக்கும் பெரியோர்கள் வசிக்கும் ஓர் ஆரண்யமாகும்.

நைமிசாரண்ய ரிஷிகள்

அவ்வாரண்யத்தில் அநேகமஹான்கள் எப்போதும் யோகநிஷ்டையிலமர்ந்து முக்தி மார்க்கஸாதனஞ்செய்து வருவது வழக்கம். தபோநிதிகளுக்கு உறைவிடமான அவ்வாரண்யத்தினுட் சென்ற ஞானவான் அங்கிருந்த பெரியோரை நமஸ்கரித்துத் தன் விருத்தாந்த முழுவதையும் ஒன்றுவிடாமற் சொன்னான். சௌனகர் முதலான ரிஷிக்கூட்டங்கள் செவிசாய்த்து, "ஈதென்ன பிதிருதோஷம் வந்து லபித்ததே! இவனுக்கு" என்று சொல்லிக்கொண்டு தம்யாகசாலைக்குச் சென்று பகவந் நாமத்தை உச்சரித்தவராய் அக்நிமுகமாக ஞானவானுக்குப் பின்வருமாறு தெரிவித்தார்கள்:—"உனது பெயருக்கு ஏற்ற படியே நீ ஞானவான் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை; ஆனால் உன்ஞானம் மாயப் பிரபஞ்சத்தில் பிரகாசிக்கவில்லை. சோதிக்கவந்த மாயையிடம் அகப்பட்டு மருள் கொண்டாய். அதனாலே பித்ருஹத்திதோஷம் நேரிட்டதுனக்கு. பூர்வ ஜன்மத்தில் நீ செய்த பாபகர்மமே மாயையுருவாய் இந்த ஜன்மத்தில் உன்னைவந்து சாகசக்கியஞ்செய்து மயக்கியது. பூர்வ ஜன்மத்தில் நீ செய்த கர்மத்தைச் சொல்லுகின்றேன், கேள்."

"மதுராபுரியில் ஒரு சூத்திர ஜாதியில் நீ பிறந்தாய்; பயிர்த்தொழிலில் உனது ஜீவனம் நடந்து வந்தது. உன்னிடமிருந்த பசுக்கள் பல; உனக்குப்பல புத்திரர் இருந்தனர்; நீ மகா கர்வி; அதனாலே உன்னிடம் பணஞ் சேர்ந்தது. மாதாபிதாக்களை லக்ஷியம் பண்ணாத

கர்மமும். அதைத் தவிர்க்குந் தர்மமும்

மஹாபாபி; தேவப்பிராம்மணத்வேஷி; நாஸ்திக மதசிரோமணி; துர்க்காரியதுரிதன்; அற்பசுகவாஸத்தில் ஆழ்ந்து கிடந்த அற்பசந்தோஷி. இங்ஙனம் நீ காலந்தள்ளி வருகையில் வர்ஷாகாலம் வந்தது; உனக்குச்சொந்தமாயிருந்த பழைய வீடுகளில் உனது பசுக்களைக் கட்டவேண்டாமென்று உன் பந்துக்களும் வேலையாட்களும் தடுத்துச்சொன்னார்கள்; அப்படிச்சொன்ன பந்துக்களை நீ வைதாய்; வேலையாட்களை அடித்தாய். பண ஆசையினால் அந்தப்பசுக்களைப் பழங்கொட்டில்களிற் கட்டினாய்; மழை தாரை தாரையாய்ப் பொழிந்ததனால் அக்கொட்டில்கள் இரவில் அவ்வவ்விதமே உட்கார்ந்து விட்டன; அதனால் மாடுகள் மரணமடைந்தன; அப்போதிருந்த ஞானிகள் பற்பல பிராயச்சித்தாதி கருமங்கள் செய்யச் சொன்னார்கள். அஃதொன்றையும் கவனியாமல் பணம் செலவாய்விடுமே என்பதொன்றைமட்டுங் கருதி நீ ஒன்றும் செய்யவில்லை. பிறகு ஏதோ நல்ல மனஸுவந்து நீ இருபது பசுக்களை இருபது பிராமணருக்குத்தானம் செய்தாய். அதனால்தான் உனக்குப் பிராமணத்வம் வந்திருப்பது. இந்த ஜன்மத்தில் உன்னிடமிருந்து தானம் வாங்கிய பிராமணர் இருபது பேரும் உனக்குச் சொந்தமான பழைய வீடொன்றில் மாடுகளைக் கட்டிவிட்டு அவ் வீடுகளிலேயே படுத்தயர்ந்து நித்திரை போனார்கள். இரவில் அவ்வீடுகளில் தீப்பிடித்து கோக்கள் உள்பட பிராமணரும் பரலோகம் போய்ச் சேர்ந்தனர். அந்தப்பிராமணருக்குப் போதுமான சம்ரக்ஷிப்பு இல்லாததனாலே ஒரு மன்வந்தரம் நரகத்தில் நீ கிடந்துழன்று பிறகு பிராமணனாய் யஜ்ஞசீலருக்குப் புதல்வனாகப் பிறந்தாய். கோத்வேஷமும் பிராமணத்வேஷமும் பூர்வத்தில் ஏற்பட்டதே இந்த ஜன்மத்தில் மாதிருத்வேஷமும் பிதிருத்வேஷமுமாக உனக்குச் சம்பவித்தது. இதற்குப் பிராயச்சித்தமே கிடையாதென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

கன்யாதீர்த்த பிரபாவம்

"இருந்தாலும் உனக்காக வேண்டி ஒன்று சொல்கின்றேம். எவ்விதமாக ஸேது, கங்கை யமுனே, காவேரி முதலான நதிகள் பாப நிவாரணஞ் செய்வனவென்று கருதப் படுகின்றனவோ அவ்விதமாகவே தக்ஷிணத்திலுள்ள கன்யா தீர்த்தமும். அதைத் தேடிப்போய் அதனில் ஸ்நானஞ்செய்பவர் எத்தகைய பாபிகளாயினும் அப்பாபங்களிலிருந்தும் அவர்கள் விடுபடுவார்கள். அந்த தீர்த்தத்தில் கங்கா நதி முதலான நவநதிகளும் ஒன்று சேர்ந்திருப்பதினுல் அதற்கு மஹா மகிமையுண்டு. மாசி மீ மஹாமகம் என்று 12 வருஷங்களுக்கொரு முறை ஒரு மஹோத்சவம் நடைபெறும். அன்றையதினம் அப்புண்ணிய தீர்த்தத்தில் சகல தேவர்களும் வருவதாக உலகப்பிரஸித்தம், உற்சவத்திற்கு முன்னதாகவே ஸ்நான யாத்திரையும் பஞ்சக் குரோச யாத்திரையும் செய்; மகத்தன்று கும்பகோணத்திலிருக்கும் கோவில்களுக்கெல்லாம் சென்று பக்தியோடு பூஜித்து பிரம்ம தீர்த்தத்தில் நீராடு. பிதிருசிராத்தாதிகள் செய்து பிராம்மண போஜனம் செய்வி. அந்த ஸ்தலத்திலேயே ஒரு வருஷம் இருந்து தினந்தோறும் சிவதரிசனமும் விஷ்ணு தரிசனமுஞ் செய்து கொண்டிரு. உன்னுடைய பித்ருஹத்தி தோஷம் விலகிவிடும்."

பித்ருஹத்தி தோஷ நிவாரணம்

இதை யெல்லாம் வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த ஞானவான் சௌனகாதிரிஷிகளுக்கு நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தம் பத்தினியோடு புறப்பட்டுக் கும்பகோண க்ஷேத்திரம் போய் விடுதியமர்த்திக் கொண்டார். சௌனகர் சொல்லியவாறே மகோற்சவ தினத்துக்கு முந்தியே ஸ்நான யாத்திரையும் பஞ்சக்குரோச யாத்திரையும் செய்து மஹாமக தினத்தில் கன்யாதீர்த்துக்குப் போய் ஸ்நானஞ்செய்து ஒரு

வருஷம் அங்கிருந்து தம்மால் கூடுமான வரையில் சகல வித மான தர்மங்கள் செய்து பிறகு தம்மூர் வந்து சேர்ந்தார். பித்ருஹத்தி தோஷம் நிவாரணமாகி அஷ்டபுத்திரர்களோடு சுகமாய் ஞானவான்காலங் கழித்து இறுதியில் ஈச்வரஸாயுஜ் யத்தையு மடைந்தார். பித்ருஹத்தி தோஷத்தை நிவார ணஞ்செய்யக்கூடிய அருமருந்து மஹாமகம் என்பதற்குச்சந் தேகம் என்னை ?

## அத்தியாயம்—IV

# ஸ்ரீ மங்களாம்பிகை வைபவம்.

ஜகன் மாதா

பக்தியுடன் கும்பகோணத்திலுள்ள கன்யாதீர்த்தத்தில் ஸ்நானமாடிய பிறகு ஆசார உபசாரத்து டன் கும்பேசுவரர் கோவிலுக்குச் சென்று கும்பநாதரைத் தரிசித்துப் பின் மந்திரபீடே சுவரியாகிய ஜகதம்பிகையைத் தரிசனஞ் செய்ய வேண்டும். இந்த ஜகதம்பிகைக்கே ஸ்ரீ மங்களாம் பிகை எனப்படுவது. அவளே ஜகன் மாதாவாவள்; ஜகத்ரக்ஷ கியுமவளே. பரந்தாமனின் வாமபாகத்திலிருப்பவளுமவளே. இந்த அம்மனைத் தரிசித்துப் போகாதாரிலர்; மஹாமகத் திற்கு வரும் ஒவ்வொருவரும் மங்களாம்பிகையைத் தரிசித் துப் போகாமலிருக்கலாகாது. மங்களாம்பிகையைத் தரிச னம் செய்தால் ஸர்வ மங்களம் உண்டாகும். கும்பகோணத் தில் ஒருவனுக்கு ஜன்மம் உண்டாக வேண்டுமானால் அவ னுக்குப் பூர்வ ஜன்ம சற்கருமம் இருக்க வேண்டுவ தவசிய மாகும். தேவர்கள் அனைவரும் அந்த க்ஷேத்திரத்தையே வாசஸ்தானமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்களென்றும்

கூறப்படுகின்றது. அம்பிகையைத் தரிசனம் பண்ணாத பிரகிருதிக்கு பலன் கிடையாதென்றும், குறைந்தது வெள்ளிக்கிழமைகளில் திவ்வியமான புஷ்பாதிகளால் அம்பிகையை அர்ச்சனை செய்விப்போருக்கு அஷ்டைசுவரியமும் ஸித்திக்குமென்று விதிக்கப் பட்டிருக்கிறது. இனி அம்பிகையின் அந்தராத்மிக ஆகிருதியைத் தத்துவ ரூபமாய்ப் பார்ப்போம்.

அம்பாளின் அமைப்பு

எங்கும் பரவியிருக்கும் எண்ணிறந்த க்ஷேத்திரங்களின்கணுள்ள அம்பிகைகளையே ஒரு உருவாய்ச் செய்து கும்பகோணத்தில் அமைத்திருப்பதென்று விசுவாகாரமாய்ச் சொல்லுவதை காட்டிலும் அம்பிகையைக் குறித்துத் தனியே வருணிப்பது மேன்மையுடையது. மற்ற விடங்களிலுள்ள அம்பிகைகளின் தேஜோராசிதான் மங்களாம்பிகையின் வதனம்; திக்கு அண்டங்களே அம்பிகையின் மகுடம்; திக்குகளே செவிகள்; ஸப்தஸ்வரங்களின் ஸ்வரூபமே அம்பிகையின் கண்டம்; அம்பிகையின் கைகளே இரவும் பகலுமாகும்; புஜங்களிரண்டும் சந்தியா தேவிகள்; பின் புறமே பூதேவி; குயங்களே பர்வதாகாரங்கள்; வயிறு தான் சாஸ்திர தேவதைகள்; சரீரத்திலுள்ள எலும்புச் சேர்க்கைகளே வேதாங்கங்களாம்; தேவர்களுக்கும் முனிசிரேஷ்டர்களுக்குமாக விரல்கள்; நாபியே (கொப்பூழ்ப் பிரதேசம்) தேவதீர்த்தம் (கோவிலுக்குச் சமீபத்திலுள்ள தடாகம்); ஆகாசமே பச்சாத் பாகம்; வேதவேதாந்த கூடார்த்தங்களே குஹ்யம்; சமஸ்த த்வீபங்களும் சுவாசம். அந்தந்த த்வீபங்களிலுள்ள அதிதேவதைகள் தான் தொடையும் அடிக்கால்களும்; யந்திராதி தேவதைகளே கணைகள்; வேதஸ்வரூபங்களே பாதங்கள்; சிரேஷ்டமுள்ள பீடமாத்திராத்மகமுள்ள மந்திரங்களின் ஸ்வரங்களே கால்விரல்கள்; சுருக்கிச் சொல்லின் பதினான்கு லோகங்களும் ஜகதம்பிகையின் ஓருருவாய் நிர்மாணிக்

கப்பெற்று அவ்வுருவைப் பரமசிவன் தமது வாமபாகத்தில் வைத்திருக்கிறு ரென்பதே கருத்து.

அதனுல் மங்களாம்பிகையைப் பக்தர்கள் எல்லோரும் போற்றிப் புகழ்தல் நெறி யென்போம். அம்மன் சந்நிதியில் பூதபிரேத பிசாச வேதாளங்கள் எதுவும் நிற்கமாட்டா. ஒருவன் எவ்வளவு கொரேபாபி யாயினும் அவனது பாப

அம்பிகையின் பிரபாவம்

கர்மங்கள் அனைத்தும் அம்பிகையின் முன் அரைநொடியிற் பறந்தோடி விடும். சூரியன் கும்பத்தில் இருக்கும்போது வெள்ளிக்கிழமைகளில் எவஞெருவன் அம்பிகைக்கு அருச்சனை முதலியவை செய்கிறுனே அவனுக்கு எப்போதும் மங்களமுண்டு. நூற்று எட்டு புஷ்பங்களை மாலையாகத் தொடுத்து எவனெருவன் அம்பிகைக்கு வெள்ளிக் கிழமைகளில் சாத்துகிறுனே அவனது சந்ததிக்குச் சேதம் ஒரு போதுமில்லை. லட்சம் புஷ்பங்களைக் கொண்டு எவன் அருச்சனை செய்கிறுனே அவனுக்கு புத்திரோத்பத்தி யுண்டாவது திண்ணம். அவன் அர்ச்சனை பண்ணுவது கோடியானுல் அவனுக்குக் குபேரசம்பத் துண்டாகும். மனேபீஷ்டங்கள்நிறைவேற ஸஹஸ்ர நாம அர்ச்சனையே பிரதானம். மல்லிகை, முல்லை, ஜாதி குஸுமங்களினுல் ஹாரங்கள் செய்து சுக்ரவாரத்தில் அம்பிகைக்குச் சாத்துவோனது பிதிருக்கள் சீக்கிரம் கடைத் தேறுவார்கள். சண்பக மாலையைச் சாத்துவோனது ரோகங்கள் அவனை விட்டு நீங்குகின்றன. வில்வ மாலையைப் போடுவான் அரசனுக்கு சமானமாவான்; கஸ்தூரி, குங்குமப்பூ, கற்பூரம் முதலான சுகந்த வஸ்துக்களைச் சந்தனத்தோடு எவன் சேர்த்து சாத்துகிறுனே அவனது ஆயுளுக்குக் குறைவில்லை. வுக்ஷங் கடலைகளால் அம்பாளுக்கு அர்ச்சனை பண்ணுவோன் லக்ஷாதிபதியாவான். அக்ஷதை யால் பூஜிப்பவனுக்கு அம்மாளின் சம்ரக்ஷிப்புண்டு. அம்பிகைக்குச் சொந்தமான ஏதேனும் ஓர் உருவத்தைப்போல்

செய்து அதில் நெய் ஊற்றி விளக்கேற்றி வந்தால் அவன் பல காலம் சிவலோகத்தில் வசிக்க விடமுண்டு. வெண்ணெய் விட்டு விளக்கேற்றினல் அஷ்டை சுவரியம் இகத்தில் கிடைத்து பரத்தில் அம்பாளுடைய சாயுஜ்யமுண்டு. மாவைப்பிசைந்து அதனில் பசுவின் நெய்விட்டு பருத்தித்திரிபோட்டு ஏற்றி அம்பாள் ஸந்நிதியில் வைத்தால் சற்புத்திரர்கள் உதிப்பார்ாள். அம்பாள்கோயிலைப் பிரதக்ஷிணம் செய்து மஞ்சள் வஸ்திரமுடுத்தி மகா ஸரோவரத்தில் நீராடிவந்து அம்பிகையை புஷ்ப பத்திர குங்குமாதிகளால் அர்ச்சனை செய்தால் அவனுக்கு இஷ்டகாம்யார்த்தங்கள் சித்திக்கின்றன; அவனது ரோகங்கள் நிவாரணமாகின்றன. நல்ல சத்துக்கள் நிரம்பிய பதார்த்தங்களைப் போட்டு நெய் பால் முதலியன விட்டு ஏலம் முதலியன வற்ருல் வாசனையூட்டி நாவுக்கு உருசிகரமான பாயஸம் பண்ணி அம்பிகைக்கு அர்ப்பணம் செய்து கற்பூரதீபம் ஏற்றிவைத்தானுல் சிவஸாயுஜ்யங் கிடைக்கும்.

சுக்கிரவாரத்தில் பசுவின் பாலினல் அபிஷேகம் பண்ணினல் இருபத்தொரு தலைமுறையைச் சேர்ந்தவர் சற்கதி யடைகிருர்கள். சந்தனபிஷேகம், குங்குமாபிஷேகம், தைலாபிஷேகம் பண்ணுகிறவனுக்கும் அஷ்டபந்தம் பண்ணுகிறவனுக்கும் பேரானந்தம் கிடைப்பதில் ஆக்ஷேபணையில்லை. இதற்கு உதாரணமாக ஸ்வர்ணரோமன் என்னும் அரசனை யெடுத்துக் கொள்ளலாம். சத்துருக்களால் கைப்பற்றப்பட்ட தனது ராஜ்யத்தைத் திரும்பி யடைந்து வெகுகாலம் புகழுடன் வாழ்ந்தது அவ்வம்பிகையின் கருணையினுலே தான். மந்திர பீடேசுவரியாயும் ஸர்வ மங்களதாயினியுமான அம்பிகையைத் தரிசிப்போர்க்கு இகபரசுகங்கள் சித்திப்பது நிச்சயம்.

"மங்களம்"

ஏ, புவியெங்கும் புகழ் மிக்க புவனேசுவரீ, பக்த சம்ரக்ஷணீ, ஸர்வலோகநாயகி, மஹேந்திர காமினீ, அங்கையர்க்கணம்

மையே, ஜகன்மாதா, நின்னையே நம்பினேன், நின்னையே போற்றுகின்றேன், நின் திருவடிமலர்களே சரணம்; ஹிருதய கமலத்தில் சுவாஸித்துக்கொண்டிருக்கும் என் தாயே, என்று கரங்குவித்து நின்று பாதாரவிந்தங்களிற் பணிகின்றேன்; பிரார்த்திக்கின்றேன்; நினது கிருபைக்குத் தாஸனைக் காத்திருக்கின்றேன்.

நின் முன்வரும் சித்தசுத்தமுள்ள பக்தகோடிகளுக்கு ஸர்வாபீஷ்டத்தை யளிக்க நினது திருவருளை நாடுகின்றோம்; நாடியே, புகழும் சிறப்பு மெய்திநிற்கும் இந்தக் கும்பகோண க்ஷேத்திரத்திற்கு வந்திருக்கின்றோம். எப்பேர்ப்பட்ட பாபங்களையும் தொலைக்கும் புண்ணிய பூமியல்லவோ இது! மற்றெங்கும் தொலையாத ஸர்வதோஷங்களும் நிவாரணமாகும் நினது பூர்ணகடாக்ஷம் நிரம்பிய நாடன்றோ இது! பாப பரிஹார மார்குமென்று மஹான்கள் மகிழ்ந்து கொண்டாடிய மங்களம் பொருந்திய இந்த ஸ்தலம் எத்தன்மைய விசேஷங்கொண்டதெனின்,

"அந்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்ய க்ஷேத்ரே விநச்யதி!
புண்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி!
வாராணஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி!
கும்பகோணே க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி!"—

ஓர் மூதுரை.

சுபம்.

உ



ஸ்ரீ ராமஜெயம்.

தந்வந்திரியே நம :

# (நோயற்ற வாழ்வே வாழ்வு.)

லோகத்தில் பிரம்மாவானவர் அநேக ஜீவஜெந்துக்களை சிருஷ்
டித்து இருக்கிறார். அவ்வித ஜன்மங்களில் பகுத்தறிவில்லாத ஜன்
மமே அதிகமாய் இருக்கிறது. பகுத்தறிவுடன் கூடினது மனுஷ்ய
ஜென்மமேயாகும். அப்படி மனுஷ்ய ஜென்ம மெடுப்பதென்றால்
எத்தனையோ புண்ணியம் செய்து இருந்தால் தான் அந்த ஜென்
மத்தை யடையலாம். அந்த மனுஷ்ய ஜென்மத்தை அவ்விதம்
அடைந்து, சிசு ரூபமாகப் பிறக்கும்பொழுதே வியாதியென்னும்
அம்சமும், உடன் உதிக்கின்றது! நல்ல அறிவையும் புத்தியையும்
அடைந்த நாம், நமக்கு உள்ளதை உணர்ந்து வேண்டியவைகளை வாங்கி
சாப்பிடுகிறோம். நமக்கு வியாதி வந்தால் இன்னதுதான் செய்கிறது
இன்னதுதான் வேண்டும் என்று உள்ளதை உணர்ந்து வயித்தியர்க
ளிடத்தில் சொல்ல அவர்கள் நாடியைப்பார்த்து உள்ளதை உணர்ந்து
மருந்து கொடுக்கிறார்கள். நாம் சாப்பிட்டு சௌகரியத்தை யடை
கிறோம்.—எழுபத்திராயிரம் நரம்புகளும் அதி நுட்பமான நுண்
ணிய எந்திரங்களுமடங்கிய சாண் கணக்களவுள்ள சரீரத்துடனும்
இன்னது தான் செய்கிறது இன்னதுதான் வேண்டும் என்று
தனக்குள்ளதை உணர்ந்து சொல்லும் தருணமில்லாத குழந்தை
கட்கு வியாதி வந்தால், அதின் கஷ்டம் அதி அசாத்தியம். அப்படி
அதி அசாத்தியதிசையை யடைந்திருக்கும் சிசுக்களுக்கு வைத்தி

8B
8-42

யம் செய்வதென்றால், பாரம்பரியமாய் வயித்தியத்திற் ெ
பிறந்துள குடும்பத்தினராயும், அதி நுட்பமான அறிவுடனும்.
கால அநுபவத்துடனும், அநேகசாஸ்திரங்களை ஆராய்ச்சி
தும், சூட்சுமசக்தியுள்ள புத்தியுள்ளவர்ாயும் இருந்து சமெ
மாய் சஞ்சீவியைப் போன்ற மருந்துகளை உபயோகிக்காவிடில்
தை வைத்தியம் பயன்படாது. அப்படி அசாத்திய சாமர்த்தி
டன், அநேக ஆண்டுகளாய், அசாத்திய கஷ்டத்தை யடை
குழந்தைகளுக்கும். பெரியவர்களுக்கும் ரோகாநுபவத்திற்கு
தகுந்தபடி அதிக பத்தியமில்லாமலும் வியாதிஸ்தர்களுடை
மனோபீஷ்டத்தின்படியும் நிவர்த்திசெய்து அன்னவர்களின். ஆத
வை வகித்துவந்தவர் கும்பகோணம் ம-ள-ள ஸ்ரீ V. பாலகிருஷ்ண
பிள்ளை யென்றே யாவரும் அறிவார்கள். இந்த V. பாலகி
ஷ்ணபிள்ளை யவர்களின் பிரதம சிஷ்யனாகிய என்னால், திருவல்
லிக்கேணி நல்லதம்பி முதலித் தெரு 5/6 நெம்பருள்ள வீட்டில்
கும்பகோணம் வாசுதேவாநந்த வைத்தியசாலை யென்னும் பெ
ருடன் பொதுஜன சவுகரியார்த்தம் ஸ்தாபித்து குழந்தைகளுக்கு
உண்டாகும் கட்டிகளுக்கும் இதர கொடூரமான வியாதிகளுக்கும்
அசௌக்கியமின்றி சவுக்கியஞ்செய்யப்பட்டு வருகிறது. ஏழை,
தனவந்தர் முதலானோர் அறியும்படி தெரியப்படுத்தலானேன்.

எங்களிடத்தில் காலதேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி
நல்ல குணத்தரும் ஸ்னான தைலங்களும் பற்பொடி, காயகற்ப உத்
வர்த்தன புவுடரும் தயார் செய்து வைத்திருக்கிறோம். காயகற்ப
உத்வர்த்தன புவுடர் டப்பி 1-க்கு ரூ. 0-12-0 தைலம் 6-அவுன்சு
பாட்டில் 1-க்கு விலை ரூ. 1 பல்பொடி டப்பி 1-க்கு 0-3-0.

OFFICE OF THE REC…
No
11 FEB 1921

இப்படிக்கு,
கும்பகோணம் பாலகிருஷ்ண போதன
V. வாசுதேவபிள்ளை,
(நேட்டிவ் டாக்டர்.

திருவல்லிக்கேணி,
3—2—'21.